# பூங்காற்று திரும்புமா?



ரமணிசந்திரன்

# பூங்காற்று திரும்புமா?

## 1



"அம்மா, இன்றைய விழாவில் செல்வா அணிய வேண்டிய வைர செட்டை, அப்பாவின் இரும்புப் பெட்டியில் இருந்து எடுத்து வைத்து விட்டீர்களா? அப்பா கடையில் இருந்தே மண்டபத்துக்கு வந்து விடுவதால், அப்புறம் எடுக்க வழியிராது. அதைத்தான், அவள் அணிய வேண்டும் என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லியிருப்பதால் இப்போதே..." என்று கையோடு கொண்டு செல்லும் பெட்டியில் வைக்க வேண்டிய பொருட்களைச் சரி பார்த்தவாறு சொல்லிக் கொண்டே போன மகாலட்சுமி, தாயிடமிருந்து எந்தப் பதிலும் வராது போகவும், அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

நீர்த்திரையிட்ட கண்களால் தன்னை வெறித்து நோக்கியபடி நின்ற தாயின் முகம் அவளது தவிப்பை உணர்த்த, கையில் இருந்த பட்டுச் சேலைப் பெட்டிகளை அப்படியே வைத்துவிட்டு அன்னையிடம் சென்றாள்.

''ஷ், என்னம்மா இது? நல்ல விஷயமாக கிளம்பிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் போய் அழலாமா? செல்வா பார்த்தால் எவ்வளவு வருத்தப்படுவாள்? அவள் மனதில் ஒரு சிறு உறுத்தல்கூட இப்போது ஏற்படலாமா? போங்கள். போய், முதலில் முகத்தைக் கழுவிக்கொண்டு வாருங்கள். அழுத அடையாளமே தெரியக்கூடாது!'' என்று சிறு கண்டிப்பும் கனிவும் கலந்த குரலில் கூறித் தாயார் குமுதவல்லியைக் குளியலறைப் பக்கமாகத் திருப்பி, லேசாக நகர்த்தி விட்டாள்.

ஆனால், மகளின் உந்துதலை ஏற்காமல், தன்னைப் பற்றி நகர்த்திய அவளது கையையே பற்றி ''எப்படிம்மா? என்னால் எப்படி மகா, சந்தோஷமாக இருக்க முடியும்? உன்னைப் பெற்றவளும் நான்தானே? மூக்கும் முழியுமாகத் திருத்தமான அழகோடு மூத்த மகள் நீ இருக்க, இரண்டு வயசு சின்னவளுக்குக் கல்யாணம் என்றால், ஒன்றுமே நடவாதது போல, என்னால் எப்படிச் சிரிக்க முடியும்?'' என்று வருத்தத்துடன் வினவினாள் குமுதவல்லி.

யோசனையோடு, சில கணங்கள் பெற்றவளைப் பார்த்தாள், மகாலட்சுமி!

அன்னையிடம் சொல்லிவிடலாமா?

தங்களுடைய இரு மகள்களில், இளைய மகளுக்கு முதலில் திருமணம் ஆவதையே தாங்க முடியாமல் வேதனைப்படுத்தும் இந்தத் தாய், தன் முதல் மகவு ஒரு போதுமே, திருமணம் செய்துகொள்ளப் போவது



இல்லை என்பதை அறிந்தால்... வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் இப்படி எப்போது, எப்போது என்று கலங்குவதேனும் நின்றுவிடாதா?

சொல்லிவிட எண்ணி அவள் வாயைத் திறக்கும் போதே, குமுதம் மறுபடி புலம்பினாள். ''பெரிய அசகாய சூரன் என்று மார் தட்டிக் கொள்கிறாரே, உன் அப்பன். உனக்கு ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வரத் துப்பிருக்கிறதா? ஐ...ந்து ஆண்டுகள்! வெறும் பதினெட்டு வயது பச்சை மண்ணாக இருந்தபோது, காலில் கஞ்சியைக் கொட்டிக் கொண்ட மாதிரி, தன்னைப் போலவே ஒரு மேனாமினுக்கிக் குடும்பத்துப் பையனைப் பிடித்துக் கொண்டு வந்தாரே! இப்போது, முயன்றால் முடியாமலா போகும்? அந்தாளுக்கு வஞ்சினம் ஜாஸ்தி! அன்றைக்கு அவமானமாகிப் போயிற்று என்று ஆத்திரம்! அதனால் தான், உனக்கு சரியாக முயற்சி எடுக்கவே மாட்டேன் என்று உட்கார்ந்திருக்கிறார்?''

குற்ற உணர்ச்சியில் மகாலட்சுமியின் முகம் லேசாகக் கன்றியது.

அவளுடைய தந்தை, முயற்சி செய்யாமல் இல்லை! பெரியவளுக்குச் செய்யவில்லையா என்று பிறர் கேட்பார்களே என்பதற்காகவே அவர் முயற்சி செய்யத்தான் செய்தார். இவ்வ...ளவு கொடுத்தேன் என்று பெருமை பேசுவதற்காகவே, செலவு செய்யவும் தயாராக இருந்தார். அதற்காகவும், அவரது அத்தனை பணத்துக்கும், அக்காவும் தங்கையும் மட்டும்தான் வாரிசு என்பதற்காகவும் பல குடும்பங்கள் 'பணத்தோடு பணம்' என்று மற்றதை மறக்கத் தயாராகத்தான் இருந்தார்கள். மொட்டைக் கடிதாசியும், பப்ளிக் பூத்போன் காலுமாக, அவர்களை

விரட்டி, விலகி ஓடச் செய்து கொண்டிருப்பவள் இந்த மகாலட்சுமியேதான்.

இதைச் சொன்னால், தாய் ஒத்துக் கொள்வது கடினம். அப்படியே ஒத்துக் கொண்டாலும் 'ஏன்' என்று அடுத்த கேள்வி வரும். அதற்கு அவளால் என்ன பதில் சொல்ல முடியும்?

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒருவனுக்குச் செய்த... அது துரோகமா, சகாயமா என்று இன்னமும் அவளுக்கே விளங்கவில்லையே!

அது இன்னமும் அவளை உறுத்தும்போது, இன்னொருவனைத் திருமணம் செய்து வாழ, அவளால் முடியாது என்றால், பெருமளவு பழமையில் ஊறிய இந்த அம்மாவுக்குப் புரியுமா? ரொம்பவே சந்தேகம்தான்!

கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறிவிட்டால், எல்லாம் சரியாகிப் போய்விடும். ஏன், நான் இல்லையா? இருபத்தைந்து வருஷங்களாக, இந்த மனிதனோடு ஒத்துப் போய் வாழவில்லையா என்று உதாரணமாகத் தன்னையே காட்டிக் கேட்பாள்.

மறுத்து வாதாட முடியாத விஷயம்தான். ஆனால், அன்னையைப் போல சமாளித்துப் போக மகாவால் முடியாது என்பதோடு, இவளது விஷயமே வேறு அல்லவா?

வெறுப்பை உமிழ்ந்த அந்தக் கண்களைப் பார்த்து விளக்கம் சொல்லாமல், தன் சுகத்தை அவளால் எப்படி நினைக்க முடியும்? ஓரளவு நல்ல விதமாக வளர்ந்து வந்த தொழிலை அப்படியே விட்டு விட்டுப் போனானே! என்ன ஆனானோ? எப்படி இருக்கிறானோ?

இதை, அவள் யாரிடம் சொல்ல முடியும்? உடன் பிறந்த தங்கை, இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவள், அவள் கூடப் புரிந்து கொள்ள மாட்டாள்.



அதை விடவும், இந்த விஷயம் தந்தையிடம் போனால், விளைவு நிச்சயமாக, மோசமாகத்தான் இருக்கும். குறைந்த பட்சமாக, அவளுக்கு! எதற்கு இந்த வம்பு? ஒரு முறை பட்டது, இந்த பிறவிக்கே போதுமே!

தன் உண்மையைத் தாயிடம் பகிர்ந்து கொள்ளும் நேரம், இன்னமும் வரவில்லை என்பதை உணர்ந்து, அன்னை ஒத்துக் கொள்ளும் விதமாக ஆறுதல் கூறலானாள் மகாலட்சுமி!

''அட என்னம்மா நீங்கள்! எதுவானாலும், அதது நடக்கிற வேளையில்தான் நடக்கும் என்று எத்தனை முறை நீங்களே சொல்லியிருப்பீர்கள்? பின்னே பிறந்தாலும், செல்வலட்சுமிக்கு அந்தத் திருமண வேளை சீக்கிரமாக வந்து விட்டது. இப்போது நடக்கவும் போகிறது. அதே போல, அந்த வேளை வரும்போது எனக்கும் ஜாம் ஜாமென்று திருமணம் நடக்கத்தான் செய்யும்! யோசித்துப் பாருங்கள்மா, எப்படியும், என்னைக் கட்டிக் கொள்ளப் போகிறவன், இனிமேல் புதிதாகப் பிறக்கப் போவதில்லை... பிறக்க மாட்டான்தானேம்மா! அதனால் ஏற்கனவே பிறந்து, வளர்ந்திருக்கும் அவன், நீங்கள் சொல்லுகிற அந்த வேளை வரும்போது, நம் ஊர் ஐயனார் சிலை மாதிரி முரட்டு மீசையும், உருட்டு விழியுமாகத் தானாக முன்னே வந்து குதிக்கத்தான் போகிறான்! அவனோடு, என் கல்யாணமும் நடந்தே தீரும். அந்தச் சோம்பேறி, வருகிறபோது வரட்டும்மா. இப்போது நாளைக்கு நடக்கப் போகிற செல்வலட்சுமியின் கல்யாணம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று சாமியை வேண்டிக் கொண்டு, மளமளவென்று திருமண வேலைகளைக் கவனியுங்கள். முதலில் வைர மாலைக்காக அப்பாவுக்கு போன்

பண்ணுங்கள். இல்லாவிட்டால், மண்டபத்தில் வைத்து, அப்பாவிடம் வாங்கிக் கட்ட நேரிடும்!'' என்று மிரட்டி, ஒரு விதமாகத் தாயின் மனதை மாற்றியவள், மறுபடியும் அது பழைய பாதைக்குப் போய்விடாமல், தங்கை திருமணத்திலேயே நிலைத்திருக்குமாறும், கவனித்துக் கொண்டாள்.

அவளைப் பொறுத்தவரை, அது கடினமாகவும் இருக்க வில்லை. ஏனெனில், குமுதவல்லியின் முதல் வேலை, கணவர் முத்துமாணிக்கத்திடம் பேசுவதாயிற்றே!

எப்போதுமே கணவரிடம் எதையும் கேட்பது என் றாலே, குமுதத்துக்கு மற்றது எல்லாம் மறந்து, பின்னே போய்விடும்! அவர் கொஞ்சம் முன்னால் போனால் கடித்து, பின்னால் சென்றால் உதைக்கிற ரகம்! அவரிடம் ஒன்றைச் செய்யச் சொல்லிக் கேட்பது, மிகவும் கடினம். மறந்திருப்பாரோ என்று நினைவூட்டினால், எனக்குத் தெரி யாதா, சொல்ல வேண்டுமா என்று எரிச்சல் படுவார். அதற் காகச் சொல்லாமல் விட்டாலோ, ஆயிரம் வேலை பார்த்துக் கோடி கோடியாகச் சம்பாதிக்கிற மனிதன், இதையெல் லாமா நினைவு வைத்திருப்பான்? நினைவுபடுத்தித் தொலைப்பதற்கென்ன என்று கத்துவார்.

அப்படிப்பட்டவரிடம், இப்போது இப்படிச் சொன் னால் பரவாயில்லையா? அல்லது பிறகு வேறு மாதிரிச் சொன்னால் பிரச்சினை குறைவாக இருக்குமா என்று, யோசித்து, யோசித்து அவளது முழுக் கவனமும் அந்த யோசனையிலேயே போய்விடும்.

இரண்டில், முன்னது மேல் என்று, மனைவி இப்போது தீர்மானித்தாள். என்ன திட்டு என்றாலும் டெலிபோன் பில் ஏறுமே என்று சீக்கிரமாக முடித்து விடுவார் என்பது,



ஒன்று. அடுத்தது, எதிர்க்க முடியாமல், அடங்கிப் போகிற ஆளை எதிரே நிறுத்தி வைத்துத் திட்டத்தான் முத்து மாணிக்கத்துக்கு ரொம்பப் பிடிக்கும். அது, சில சமயங் களில் மணிக்கணக்கில் கூட நீளும்.

அத்தோடு, இரும்புப் பெட்டியில் இருந்த நகை வேறு, இப்போது கட்டாயமாகத் தேவைப்படவும் செய்தது.

அவளாக எடுத்துப் போகலாம் என்றால், இரும்புப் பெட்டியைத் திறக்கும் விதத்தைக் கட்டின மனைவியான அவளை மட்டுமின்றிப் பெற்ற மகள்களையும் கூட நம்பி, முத்துமாணிக்கம் கற்றுக் கொடுத்தது கிடையாது.

மகள்கள், என்றேனும் ஒருநாள் அடுத்த வீட்டுக்குப் போகிறவர்கள். என்றேனும் ஒரு நாள், இரும்புப் பெட் டியை வழித்துத் துடைத்து எடுத்துக் கொண்டு, புருஷன் வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார்களாம். பெற்ற மகள்களிடம், அவருக்கு, அவ்வளவு நம்பிக்கை! அத னால், அவர்களிடம் அந்த ரகசியத்தைச் சொன்னதில்லை!

மனைவிக்கோ மூளையும் கிடையாது. இணுக்குக்கூட விவரம் தெரியக் கூடாத மகள்களிடமே போய், அப்படியே ஒப்பித்து, இரும்புப் பெட்டியைத் திறக்கும் விதத்தைச் சொல்லித் தொலைத்து விடுவாள். அவளுக்கு மகள் களிடம் அவ்வளவு பாசம்! அதனால், மனைவியை நம்பிச் சொல்வது பிற்பாடு பெரிய ஆபத்தாகி விடக்கூடும்!

இவை போன்ற காரணங்களால், சுவரோடு சுவராகப் பதித்து வைக்கப்பட்டிருக்கும், அந்த இரும்புப் பெட் டியைத் திறக்கும் கலை, குடும்பத் தலைவர், உயர்திரு திரு. திருவாளர் முத்துமாணிக்கத்திடமே இருந்தது.

'கொண்டதெல்லாம் கொள்ளும் மகராஜன் கப்பல்' என்று முன்னொரு வாசகம் சொல்வார்கள். அதைப்போல,

அவரது இரும்புப் பெட்டியின் உள்ளே வீட்டின் மூன்று பெண்களின் நகைகள், கணக்கில் வராத பணம், சொத்துப் பத்திரங்கள், கொடுக்கல் வாங்கல் கணக்குகள், பல்வேறு ஃபைல்கள் எல்லாமே திணித்து வைக்கப்பட்டிருந்தன.

திறக்கும் விதத்தோடு, என்னென்ன எங்கே இருக்கின்றன என்பதும் கூட, அவர் மட்டுமே அறிந்த விஷயம். அவர் இரும்புப் பெட்டியைத் திறக்கும்போது, மனைவி, மக்கள் யாருமே, அங்கே செல்லக்கூடாது!

நகை நட்டு எதுவும் வேண்டுமானால், முத்துமாணிக்கத்திடம் சொல்லிவிட்டு, வெளியே காத்திருக்க வேண்டும். அவர் நகையைத் தர மறுக்க மாட்டார். நகையை எடுத்து வந்து, அதை வாங்கிய கதை, அதன் விலை, எவ்வளவு பத்திரமாக வைத்திருக்க வேண்டும்... என்பது பற்றி, ஒரு பெரிய சொற்பொழிவு ஆற்றுவார். அதன் பிறகே, நகையைக் கொடுப்பார்! இதனாலேயே, மகாவுக்கு நகை அணியும் ஆசையே அற்றுப் போய்விட்டது.

ஆனால் அணியாமலும் விடமாட்டார். ''இவ்வளவு சம்பாதிக்கிறேன் என்று நாலு பேருக்குத் தெரிய வேண்டாம்? கைச்செயினும், மைனர் சங்கிலியும் தவிர, நான் என்ன போட முடியும்? யானைக்கு முகபடாம் போல, நீங்கள் அள்ளி மாட்டிக் கொண்டு நின்றால்தானே, என் கிட்டே இவ்வளவு செல்வம் இருக்குது என்று, ஊருக்குத் தெரியும்'' என்பார்.

அதற்குமேல், அந்த நகைகளை அணிய மகாலட்சுமிக்கு அடியோடு பிடிக்காமல் போய்விடும். கொக்கி தளர்ந்து விட்டது. திருகாணி லூசாகி விட்டது என்று ஏதேனும் சொல்லித் திருப்பிக் கொடுத்து விடுவாள்.



தங்கம், வைரம் போல விலை உயர்ந்ததைக் கையாளத் தெரியாமல் பியத்துவிட்ட 'லோகிளாஸ்' என்ற திட்டையும் அவரிடம் வாங்கிக் கொள்வாள்.

ஆனால் செல்வலட்சுமி, வேறு விதம் ''போக்கா, அப்பா திட்டுவது, என்றைக்கும் உள்ளது. வீட்டுக்குள் அடங்குவதும்கூட. இப்படிப் பெரிது பெரிதாக அணிந்து சென்றால், சுற்றியுள்ள அத்தனை பேரும், வாயை பிளந்து கொண்டு நின்று பார்ப்பார்கள். அப்பா, இப்படியெல்லாம் கதையளந்து மட்டம் தட்டி விட்டுத்தான் தந்தார் என்று, அங்கே யாருக்கேனும் தெரியப் போகிறதா, என்ன? இன்னார் வீட்டுப் பெண், இவ்வளவு அணிந்திருந்தாள் என்றுதான் பேசுவார்கள்!'' என்று மூத்தவளதையும் சேர்த்து, அம்மன் சாமி மாதிரி, அடுக்கிக் கொண்டு செல்வாள்.

குமுதவல்லியும் பெருமளவு அப்படித்தான், 'எனக்குப் பட்டுப் பட்டுக் காய்த்து விட்டதடி' என்பாள். அவர்களது, வியாபார சமூகத்திடையே அணிந்திருக்கும் நகைக்கு மதிப்பு அதிகம் என்பதால், அதற்காகவே அணிந்து கொள்ளவும் செய்வாள்.

தனக்கு என்ன வேணுமென்று, இன்னமும் திடமாகத் தெரிந்திராத மகாலட்சுமி மட்டும், தந்தையிடம் இன்னமும் அதிகமாக வாங்கிக் கட்டிக் கொள்வாள்.

குறைந்தபட்சமாக, என்ன வேண்டாம் என்பதாவது தனக்குத் தெரிந்திருக்கிறதே என்ற அற்ப சந்தோஷத்தையும் வெளியே காட்டாமல் அடியோடு மறைத்துக் கொண்டு, தங்கையின் திருமண வேலைகளில் மகாலட்சுமி முழுமனதோடு மூழ்கினாள்.

உயிரான தங்கையின் திருமணம் என்பது ஒன்று. அடுத்ததாக வீட்டுக்குள்ளேயே கிடந்து குமைவதற்கு, முழுமையான மாற்றாக இருந்த அந்த வேலை, அவளுக்கு மிகுந்த உற்சாகத்தையும் அளித்தது.

மண்டபத்திலும், மாப்பிள்ளை வீட்டார் வரவர, அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, வேண்டியது கேட்டு உபசரித்து, அவள் பம்பரமாகச் சுழன்ற விதம், அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது, இயல்பே!

தனக்கு முன்னே தங்கைக்கு மணமாவது குறித்து, அவளிடம் வாட்டம், வருத்தத்தைக் காணவும், அதை பற்றி வம்பு வதந்திகள் பரப்பவும் ஆவலோடு காத்திருந்த கூட்டம் ஏமாந்து கலைந்து போனது.

ஓரமாக நின்று, பந்தி நடப்பதை மேற்பார்வை செய்து கொண்டிருந்த அவளை அணுகி "ஓர் உதவி தேவைப்படுகிறதேம்மா" என்று மெல்லக் கேட்டார், ஒரு பெரியவர்.

கேட்பவர், மணமகனுடைய தந்தை என்று புரிந்து கொண்ட மகாலட்சுமி "என்னவென்று சொல்லுங்கள், அங்கிள்" என்று முறுவலோடு விசாரித்தாள்.

"எங்கள் உறவில் ஒரு பெரியவர், காலை ஐந்தரை மணிக்கே அவருக்கு ஃபில்டர் காபி வேண்டும். இல்லாவிட்டால், இது என்ன திருமணம் நடத்துகிறாய் என்று கத்தத் தொடங்கி விடுவார். ஏற்பாடு பண்ண முடியுமாம்மா?" என்று கேட்டார் அவர்.

"கட்டாயம் அங்கிள்" என்று சொன்னதோடு விட்டு விடாமல், எந்த அறை என்கிற விவரம் கேட்டு, குறித்த நேரத்தில் காபி அங்கே கொடுக்கப்படுவதை, மகாலட்சுமி நேரிலேயே வந்து கண்காணித்தாள். சொன்னதைத் தவறாமல், திருத்தமாக நிறைவேற்றிய பெண்ணிடம்,



செந்தில்நாதனுக்கு, மதிப்புடன் கூடிய அபிமானம் உண்டாயிற்று.

காலில் சிறகுகள் முளைத்தாற்போல, இங்குமங்கும் சென்று திருமண வேலைகளை அவள் பார்ப்பதும், அவளது முகத்தில் வாடாமல் மலர்ந்திருந்த புன்னகையும் தொடர்ந்து கண்ணில்பட, அவளை குணத்தில் இவளைப் போலவே, இவளுடைய தங்கையும் இருப்பார்களானால், மகன் மிகவும் கொடுத்து வைத்தவனே என்று அவருக்குத் தோன்றியது!

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டவாறு அருகில் வந்து எட்டிப் பார்த்தாள், அவருடைய இல்லத்தரசி சாந்தா.

மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைகள் மாடியில் இருந்தன. கீழே திருமண மேடை அமைப்பு முடிவடையும் நிலையில் இருந்தது. இரு பக்கங்களிலும் இருந்து போட்டோ எடுத்துக் கொண்டே இருக்குமாறு அமைக்கப்பட்டிருந்த தானியங்கிக் காமிராக்களின் நேர்ப் பார்வையை மறைக்காத விதமாக, அதே சமயம் மணமேடை அழகு கெடாமல் தோரணங்களைத் தொங்க விடும் வழி வகை பற்றி, மேடை அமைப்பாளரிடம் மகாலட்சுமி சொல்லிக் கொண்டிருப்பது அவளது பார்வையிலும் பட்டது.

எளிதான அசைவுகளால், இனிய முறுவலோடு அவள் விளங்குவதையும், அதைக் கேட்க, மேடை அமைப்பாளரும் இன்முகத்துடனேயே மணமேடை அலங்காரத்தை மாற்றி அமைப்பதையும் பார்த்துக் கொண்டே இருந்த கணவனுக்கும் மனைவிக்கும் வேறு வேறு எண்ணங்கள் தோன்றின.

''ஏங்க, சம்பந்தி வீட்டுக்குக் கல்யாணம் பேச வந்த போது, இந்தப் பெண்ணை நீங்கள் முதலில் பார்க்கவில் லையோ?'' என்று சிறு வருத்தம் கலந்த குரலில் வினவி னாள் மனைவி.

''ஏய், பைத்தியம்! வாயை மூடு!'' என்று, தணிந்த குர லில் மனைவியை அதட்டினார் செந்தில்நாதன். ''என்ன பேச்சு பேசுகிறாய்? செல்வா, செல்வா என்று பையன் பைத்தியமாக இருப்பது தெரியவில்லை? நீ இப்படிப் பேசியது, அவனுக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? எதையும், சற்று யோசித்துப் பேசும்மா!'' என்று சீற்றத்தில் தொடங்கிய பேச்சை அமைதியாகவே முடித்தார், அவர்.

''ஆமாம்ப்பா. நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், இந்தப் பெண்ணைப் பார்க்கும்போது நம் வீட்டுக்கு வந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியதா? சட்டென்று வாயை விட்டு விட்டேன். தப்புதான்'' என்று உணர்ந்து கூறினாள் மனைவி.

''சரி சரி, அதற்காக வருத்தப்படாதே. எனக்கே ஒரு கணம் அப்படித் தோன்றத்தான் செய்தது. ஆனால்... பார்ப்போம், நமக்கே மருமகள் ஆனால்தானா? நம் குடும் பத்துக்கு நிறையக் கிளைகள் உண்டு. யார் வீட்டுக்காவது வந்து அழகாக விளக்கேற்றட்டுமே...'' என்றவாறு மனைவியைப் பார்த்தார் அவர்.

புரிந்தது என்பது போலப் புன்னகை செய்தாள் அவ ருடைய மனைவி.

கூடச் சேர்ந்து முறுவலித்துவிட்டு ''சரிம்மா. இதை ஒரு பக்கம் மனதில் வைத்துக் கொள்வோம். இப்போது எல்லோரையும் தயார் படுத்து, என்னதான் பத்து மணிக்கு



மேலேதான் முகூர்த்தம் என்றாலும், இப்போதே எல்லோரையும் கிளம்பத் தொடங்கினால்தான் சரியாக இருக்கும். இடையில், காலை உணவை வேறு முடிக்க வேண்டும். அப்புறம், என்னிடம் சொல்லவில்லை, உன்னை அழைத்தார்களா என்று ஆவலாதிகளைக் கேட்க நேரிடும். வா, போய் எல்லோரையும் கூட்டிப் போக லாம்...'' என்று செந்தில்நாதன் சொல்லிக் கொண்டிருக் கும்போதே, மகாலட்சுமி அங்கே வந்தாள்.

கேள்வியாய் நோக்கியவர்களிடம் ''காலை உணவுக்கு அழைக்க வந்தேன், அங்கிள். காலைக்கான விருந்து தயாராகி விட்டதாம். இப்போதே, டிபன் வேலையைத் தொடங்கினால்தானே, கல்யாண நேரத்துக்குள் உடை, அணிமணி அலங்காரம் எல்லாம் முடிக்க முடியும்? அத னால்தான்...'' என்று விளக்கம் கூறினாள்.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட கணவன் மனைவி இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது. ''அதைச் சொல் லித்தான், மற்றவர்களைக் கூப்பிடுவதற்காக, இப்போது நாங்களே கிளம்பிக் கொண்டிருந்தோம்'' என்று தங்கள் சிரிப்பின் காரணத்தை அவர்கள் விளக்க, மகாலட்சுமி யும், அவர்களோடு இணைந்து நகைத்தாள்.

தங்கையிடம் சென்று ''உன் மாமியார், மாமனார் ரொம்ப நல்ல விதம், செல்வா. அவர்களால் உனக்குப் பிரச் சினையே இராது!'' என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

வெகு விரைவிலேயே வாயை மூடிக் கொண்டு சும்மா இராமல், என் வாழ்வில் பிரச்சினை பண்ண, இவர்கள் யார் என்று அவளே ஆத்திரப்படப் போகிறாள் என்று, அப்போது அவளுக்கு நிச்சயமாகத் தெரியாது!

# 2



திருவாளர் முத்துமாணிக்கத்துடைய இரண்டாவது மகள் செல்வலட்சுமியின் திருமணம், வெகு விமரிசையாக, பலரும் பல்லாண்டுகள் தொடர்ந்து, நினைவு கூர்ந்து பேசக்கூடிய அளவில் சிறப்பாக நடைபெற்றது.

குறைந்தபட்சமாக, ஒருபுறம் சம்பிரதாயத்துக்கு உரிய முறைப்படி நாதஸ்வரமும், எதிர்ப்புறமாக பாண்டு வாத்தியமும், நுழை வாயிலில் செண்டை மேளத்தோடு கூடிய ஆட்டமுமாகக் காது ஜவ்வு கிழிந்தவர்களேனும், கட்டாயமாக அந்தத் திருமணத்தை நினைவு வைத்திருப்பார்கள்!

கடைசியாக சம்பந்தி செந்தில்நாதனே, என்ன கத்தினாலும் கேட்காததால், பெண்ணை பெற்றவரைக் கையைப் பிடித்து, மண்டபத்துக்கு வெளியே அழைத்துப் போய் ''தாலிதான் கட்டியாகி விட்டதே! இனிமேல், யார் தும்மினாலும், இருமினாலும் கெட்ட சகுனம் ஆகாதல்லவா? இந்த வாத்திய அலற... கோஷங்களை நிறுத்தி விடுங்கள்'' என்று சொன்ன பிறகுதான், வந்திருந்த விருந்தினருக்கு, அந்த சத்தத்தில் இருந்து சற்று விடுதலை கிடைத்தது.

ஆனால், மாப்பிள்ளை வீட்டாரை மலைக்க வைப்பதற்காக அவர் ஏற்பாடு செய்ததை, வெறும் சகுனத் தடைக் காப்பாகச் செந்தில்நாதன் கருதியது, முத்துமாணிக்கத்துக்கு, மிகவும் வருத்தமே.

எனவே ''வாசிக்கட்டுமே சம்பந்தி! கை நீட்டி, ஆளாளுக்கு லட்சத்துக்கு மேலே பணத்தை வாங்கியிருக்



கிறான்களே, கொடுத்த பணத்துக்கு வேலை செய்ய வேண்டாமா?'' என்று கணக்குப் பாராமல் அள்ளிக் கொடுத்த தன் பணப் பெருமையை அளந்து பார்த்தார் அவர்.

ஆனால், ''சரிதான் போங்கள். காசையும் கொடுத்துக் காது வலியையும் இழுத்துக் கொள்வார்களா? போய் நிறுத்தச் சொல்லுங்கள். வேணுமானால், நாதசுரத்தை மட்டும், அடக்கமாக வாசிக்கச் சொல்லுங்கள். உங்கள் மருமகனின் விருப்பம்தான் இது. பாருங்கள், வாயால் சொன்னால் யாருக்குமே காது கேட்கவில்லை என்று, எழுதியே தந்திருக்கிறான்!'' என்று தன் விசிட்டிங் கார்டின் பின்புறத்தில் மணமகன் சுகந்தன் எழுதியிருப்பதைச் செந்தில்நாதன் காட்டவும், மற்றவர் முகத்தில் அசடு வழிந்தது.

மற்றவர்களானால் விவாதிக்கலாம். பேசிப் பேசியே அடக்கியும் விடலாம். ஆனால் மருமகனிடம் அதுவும் திருமணத்தன்றே தகராறு பண்ணலாமா? பேச்சுக்கு வழியின்றி, எழுதி வேறு தந்திருக்கிறான்!

''இதோ ஏற்பாடு பண்ணுகிறேன்'' என்று வேகமாக உள்ளே சென்றார் பெண்ணைப் பெற்றவர்!

இருக்கட்டும். இந்தப் பந்தாவெல்லாம், எவ்வளவு தேவை என்று, மாப்பிள்ளைக்கு மெள்ளப் புரிய வைக்கலாம். கட்டியிருப்பது அவருடைய மகளை அல்லவா? அதிலும், சின்னவளை, தகப்பன் சொல் கேட்டு நடக்கும் இரண்டாவது மகளை!

அவளை வைத்து மாப்பிள்ளைக்கு உருவேற்றி விடமாட்டார்?

அடுத்த சில தினங்கள் எப்படிப் போயின என்று சொல்லவே முடியாமல், மாப்பிள்ளையும் பெண்ணும் வருவதும், போவதும் விருந்து, மரியாதைகள் செய்வதும் சீர் கொண்டு கொடுப்பதுமாக விரைந்தோடிப் போயின.

சொல்லப் போனால், இந்த நாட்களில்தான், முத்து மாணிக்கம், தன் மூத்த மகளின் மதிப்பை உணர்ந்ததே எனலாம். முறைமை தவறாமல், தங்கைக்குப் பிடித்த விதமாக, தந்தையின் செலவுக் கணக்கையும் தாண்டாமல், தேவையான அனைத்தையும் நிறக்ச் செய்து காட்டினாள் மகாலட்சுமி.

ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தால், இந்தக் கெட்டிக் காரத்தனத்துக்கு ஓஹோ என்று உயர்ந்திருப்பாள். பொட்டைக் கழுதையாகப் போய் விட்டதே என்று, உள் ளூர வருந்தினார் அவர்.

அன்று சம்பந்தி வீட்டில் மறுவிருந்துக்கு அழைத் திருந்தார்கள்.

யோசித்து யோசித்து புதுப்புது வகையான உயர்தர இனிப்புகளோடு, பெண்ணுக்கும் பிள்ளைக்கும் புதிய துணிமணிகளையும் எடுத்துக் கொண்டு, முத்துமாணிக் கத்துடைய குடும்பம், சம்பந்தி வீட்டுக்குச் சென்றது.

அங்கேயும் விருந்தாளியாக ஒதுங்கிக் கொள்ளாமல், வீட்டுக்காரியாக வேலை செய்த தங்கையோடு, மகாலட் சுமி தானும் இணைந்து நின்று உதவ, அங்குள்ளோர் எல்லோருக்குமே அவளைப் பிடித்துப் போயிற்று. சேர்ந்து நின்று கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தனர்.

விருந்தைக்கூட விருந்தாளியாகப் பெற்றோர், மற்ற பெற்றோர் வகை உறவினரோடு உண்ணாமல், தங்கை குடும்பத்தோடு அவள் அமர்ந்து உண்டாள்.



செல்வலட்சுமிக்காக வாங்கி வந்த புதிய சேலை பற்றி பேச்சு வந்தது.

''செல்வாவுக்குப் பிடித்தமான வண்ணம் என்று வாங்கி வந்தோம்'' என்றாள் மகாலட்சுமி.

''என்னக்கா, 'வந்தோம்' என்று பன்மையில் சொல கிறாய்? முழுக்க உன் வேலை என்று சொல்லு. அத்தை, கல்யாணத்துக்கு முன் இந்த நிறத்தில் சேலை வேண்டும் என்று ரொம்பத் தேடினேன். கொஞ்சம் ஒத்து வருவதாக இருந்தால், பார்டர் பிடிக்கவில்லை என்று வாங்காமல் போய் விட்டது. அதை நினைவு வைத்து, அலைந்து திரிந்து வாங்கி வந்திருக்கிறாள்!'' என்று பெருமை பொங்கத் தமக்கையைப் புகழ்ந்தாள் சின்னவள்.

''எப்போதுமே, இப்படித்தானா? அல்லது, சகோதரி திருமணமாகி வந்து விட்டதால் ஏற்பட்ட புது உருக்கமா?'' என்று நாத்தனார் முறைப் பெண் ஒருத்தி கேலியாகக் கேட்டாள்.

''செல்வா இல்லாமல், எங்கள் எல்லோருக்குமே வீடே வெறிச்சோடி விட்ட மாதிரிதான் இருக்கிறது. அம்மா எப்போதும் செல்வா என்று விட்டுத்தான் என் பேரைச் சொல்லுகிறார்கள்!'' என்று பேச்சைத் திசை திருப்ப மகா முயன்றாள். ஆனால், அவளுடைய தங்கை அதற்கு விட வில்லை.

''மகா எப்போதுமே இப்படித்தான் சமையலாகட்டும், துணிமணி சாமானாகட்டும். அவரவருக்கு என்ன பிடிக் கும் என்று பார்த்துதான் செய்வாள்'' என்று தமக்கையை மேலும் புகழ்ந்தாள்.

''சமையல் செய்வாளா? வீட்டில் சமையலுக்கு ஆள் இருப்பதாக மாமா, உங்கள் அப்பா ஒரு தரம்

சொன்னாரே!'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள், அந்த நாத்தனார் முறைக்காரி.

கடை ஆட்களுக்குச் சமைத்துப் போடுவதற்காக ஒருவருக்கு இருவராக, இரண்டு சமையல்காரர்கள் உண்டுதான். தேவை என்றால், அவ்வப்போது, வீட்டிலும் உதவி செய்ய வருவார்கள். அதைத்தான், வீட்டில் சமையலுக்கு ஆள் இருப்பதாக முத்துமாணிக்கம் பெருமையாக, வெளியே சொல்லிக் கொள்வார்.

ஆனால், அடுப்படி வேலை மட்டும் வீட்டுப் பெண்கள் தான் செய்ய வேண்டும் என்பது அவருக்கு. ''என்னைப் போல வெளியே போய் உழைக்கவா, செய்கிறீர்கள்? சாப்பிட்டுச் சாப்பிட்டு மாடு மாதிரித் தூங்குவதற்கு, இந்த அடுப்பில் ஏற்றி இறக்குகிறதையாவது, செய்வது தானே?'' என்பார்.

சாப்பிடும்போது, அதற்கு ஆயிரம் நொட்டை சொல்வது, வேறு விஷயம்.

ஆனால் இப்போது என்ன சொல்வது?

''ஆள் உண்டுதான். ஆனால், அப்பாவுக்கு மட்டும் அம்மாதான் செய்ய வேண்டும். கல்லூரி முடித்த பிறகு, நாங்களும் கூடச் சேர்ந்து செய்வோம்'' என்று செல்வலட்சுமி சமாளித்தாள்.

''எங்கள் வீட்டில் பொதுவாகச் சமையல்காரம்மாதான் சமைப்பது. ஆனால் மேற்பார்வை மட்டும் அம்மாதான். இல்லாவிட்டால், நிறைய எண்ணெயை ஊற்றிக் கொழுப்புச் சத்தை ஏற்றி விடுவார்கள். அப்பாவுக்கு கொலஸ்ட்ரால் அதிகமாகி விடும் என்பார்கள்....'' என்றாள். செல்வலட்சுமியுடைய சொந்த நாத்தனார், சுனிலா. ஆறு மாதங்கள் முன்பாக அவளுக்குத் திருமணமாகி,



வாந்தி மயக்கம் தொடங்கியதும் தாய் வீட்டு சுகம் நாடி வந்திருந்தவள் அவள்.

கருவுற்றவளுக்கான விழாக்கள், அதற்கான சாதக் கலவைகளில் தொடங்கி, பெண்களின் பேச்சு, சமையல், சத்துக்கள், துணிகள், அணிமணிகள் என்று, பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சுழன்றது.

அதே சமயத்தில் ஆண்களிடையே வேறு விதமான உரையாடல் நடந்தது.

முதலில் எல்லோரும் சேர்ந்தே பேசிக் கொண்டிருந்த போதும், விரைவிலேயே மரியாதை நிமித்தமாக, இளைஞர் சமுதாயம் மெல்ல நகர்ந்துவிட, சம்பந்திகள் மட்டுமாகப் பேசிக் கொண்டிருக்க நேர்ந்தது.

ஊர் உலக நடப்பு பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின் ''நான் ஒன்று சொன்னால், நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்று செந்தில்நாதன் தொடங்கினார்.

பிள்ளையைப் பெற்றவன் இல்லையா? பெரிதாக ஏதோ பணத்துக்கு அடிப்போடப் போகிறான் போலிருக்கிறதே... இப்போது சரியென்றுவிட்டு, அப்புறமாக, ஏதோ தட்டுப்பாடு என்று, மகள் மூலமாகச் சொல்லிச் சமாளிக்க வேண்டியதுதான் என்று எண்ணியவாறு ''என்ன சம்பந்தி, நீங்கள்! உங்களைப் போய், நான் தப்பாக எண்ணுவதா? அந்த அசட்டுத்தனம், நான் ஒரு போதும் செய்ய மாட்டேன், சம்பந்தி சத்தியமாகச் சொல்கிறேன்!'' என்றார் முத்துமாணிக்கம் உருக்கமான குரலில்.

சற்றே பதறி, ''இதற்கெல்லாம் என்ன சத்தியம், சம்பந்தி? நீங்கள் ஒன்று சொன்னால், நான் நம்ப மாட்டேனா? டக்கென்று பெரிய வார்த்தை சொல்லி

விட்டீர்களே!'' என்றார் செந்தில்நாதன், குரலில் சிறு வருத்தத்துடன்.

கொஞ்சம் கிறுக்குக்குத்தனமாகத் தோன்றியது, மற்றவருக்கு. புழக்கத்தில் இருக்கும் எத்தனையோ வார்த்தைகளில், இதுவும் ஒரு வார்த்தை. தேவைப்படும்போது அள்ளி வீசி, அத்தோடு மறக்கப்பட வேண்டியவற்றுள் ஒன்று. இது மட்டும் எப்படிப் பெரிய வார்த்தையாகும்? சம்பந்தி மனிதருக்குத் தமிழே தகராறு போலல்லவா தெரிகிறது!

ஏதேதோ எண்ணினாலும், நினைத்ததை வெளியே சொல்லாமல், ''அதில்லை சம்பந்தி, எந்த அளவுக்கு, உங்கள் மேல் மதிப்பு, மரியாதை வைத்திருக்கிறேன் என்பதை, உங்களுக்குப் புரிய வைப்பதற்காகச் சொன்னேன். அந்த மதிப்பு குறையும்படியாக, ஒரு வார்த்தை நீங்கள் சொல்ல மாட்டீர்கள் என்ற நம்பிக்கை! அதை இப்போது தெளிவாகத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?'' என்று தன் கருத்தைக் குறிப்பாகத் தெரிவித்தார் பெண்ணைப் பெற்றவர்.

எப்படியும் இதற்கு மேலே மனிதர் வாயைத் திறந்து பணம் கேட்க மாட்டார்!

ஆனால், வாயை மூடிக் கொள்வதற்குப் பதிலாகச் செந்தில்நாதன் இன்னும் பீடிகை போட்டார். ''வந்து மதிப்பு மரியாதை என்று சொல்லி விட்டீர்கள்! அந்த உரிமையில், இப்போது, இன்னும் கொஞ்சம் தைரியமாகச் சொல்லலாம் என்றாலும், இது உங்கள் குடும்பத்து விஷயம்! எப்படித் தலையிடுவது என்று... தயக்கமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும்...''

இது பண விஷயம் அல்ல என்று புரிபட்டுவிட, முத்து மாணிக்கத்துக்கு உற்சாகமாகி விட்டது. ''என்ன சம்பந்தி நீங்கள்? உங்கள் குடும்பம், எங்கள் குடும்பம் என்று பிரித்துப் பேசலாமா? எந்த நிமிஷம், நம் செல்வலட்சுமி கழுத்திலே, மாப்பிள்ளை தாலியைக் கட்டினாரோ, அப்போதிருந்து நாம் ஒரே குடும்பம்தானே? உப்பைக் குறைத்துப் போடுங்கள். அத்தானுக்கு ரத்த அழுத்தம் வந்துவிடப் போகிறது என்று, தங்கச்சிகிட்டே, நான் உரிமையோடு சொல்ல மாட்டேனா? அங்கே ஒன்று என்றால், நீங்கள் அதே உரிமையோடு சொல்லலாம், சம்பந்தி!'' என்றார் உரத்த குரலில்.



இதுவும், உப்பு புளியோடு, உன் ஆலோசனையை நிறுத்திக் கொள் என்று, சொல்லாமல் சொல்வதுதான். ஆனால் புரியவில்லையோ, புரிந்தாலும் சொல்லியே தீர்வது என்று இருந்தாரோ, விடாக்கண்டனாகத்தான் சொல்ல நினைத்ததைச் செந்தில்நாதன் சொல்லத் தொடங்கி விட்டார்.

''மெல்லப் பேசுங்கள் சம்பந்தி. பின்கட்டில் பெண்கள் காதில் விழுந்து கஷ்டமாகி விடப் போகிறது'' என்று முதலில் எச்சரிக்கை விடுத்து விட்டு பேச்சைத் தொடங்கினார். ''பாருங்கள் சம்பந்தி, காதல் என்பது அந்தக் காலத்திலேயே இருந்திருக்கிறது. இன்றைக்கும் இருக்கிறது. வெளியே தேடுவானேன்? என் சொந்தப் பெரியப்பா மகன், எனக்கு நாலு வயது மூப்பு. காதல் என்று சொன்னார். பெரியப்பா ஒத்துக் கொள்ளாமல், சொத்து பத்து எதுவும் கிடையாது என்று சொல்லி, வீட்டை விட்டு விரட்டி விட்டார். வசதியில் வளர்ந்த அண்ணன், ஊரை விட்டுப் போனவர், வேலை வெட்டி கிடைக்காமல், கஷ்டப்பட்டு, இறந்தே போனார். ரோஷக்காரர். அவ்வளவு கஷ்டத்திலும் உதவி கேட்டுத் திரும்பி

வரவில்லை! அண்ண்யும் அப்படித்தான். தானே கஷ் டப்பட்டு மகனைப் படிக்க வைத்து... இப்போது நல்ல நிலைமை! பெரியப்பாவுக்கு பிறகு, உறவு விட்டுப் போக வேண்டாம் என்று நான் தேடிப் போனபோதுதான், இந்த விவரமே தெரிய வந்தது. எங்கள் பெரியப்பாவே நல்லபடியாக அண்ணன் விருப்பம் போலத் திரு மணத்தை நடத்தியிருந்தால், அனாவசியமாக ஓர் உயிர் போயிருக்குமா?''

சம்பந்தி மனிதர் எங்கே வருகிறார் என்பது, முத்து மாணிக்கத்துக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால், தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே, தெரியும்? முத்து ஸ்டோர் உரிமையாளர் மகளை ஓர் அன்னாடம் காய்ச்சிக்கா கட்டிக் கொடுக்க முடியும்? பிறகு, ஊரார், உற வுக்காரர்கள் முன்னாலே, தலையைத் தூக்க முடியுமா?

சின்னவளுக்கு முதலில் செய்வதையாவது ஜாதகப்படி சின்னவளுக்குத்தான் முதலில் கல்யாண வேளை வந்து விட்டது என்று சொல்லி சமாளித்து விடலாம். ஆனால் நிலையிறங்கிக் கொடுத்துவிட்டு, விளக்கம் சொல்வது எப்படி?

''ஐந்து ஆண்டுகளாக, மகாலட்சுமியை அப்படியே விட்டு விட்டீர்களே! கொஞ்ச நாள் பார்த்துவிட்டு, அவ னுக்கே கட்டிக் கொடுத்திருந்தால், இப்போது பேரனையோ, பேத்தியையோ மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண் டிருக்கலாமே! எங்கள் சுனிலாவுக்கும் அவளுக்கும் ஒரே வயதுதானாமே. என் வீட்டம்மா சொன்னாள்'' என்றார் செந்தில்நாதன்.

மருமகப்பிள்ளையைப் பெற்றுத் தொலைத்து விட் டார். இல்லாவிட்டால் தலையைப் பிடித்து நொங்கு நொங்கென்று சுவரிலேயே மோதியிருக்கலாம்.



அந்தப் பையன் காசில்லாத கீழ்த்தட்டு என்று காரணம் சொல்ல, முத்துமாணிக்கத்துக்கு இப்போது யோசனை யாக இருந்தது.

''அதற்கென்ன? உங்கள் சொத்தில் கொஞ்சம் கொடுத்து விட வேண்டியதுதானே?'' என்று கேட்கக் கூடியவர் தான். இந்த சம்பந்தி. இல்லையென்றால், சீர் செனத்தி என்று, இதற்குள் எவ்வளவோ பிடுங்கியிருக்கலாம்! செய்யவில்லையே! இவருக்கு வேறு மாதிரிதான் பதில் சொல்ல வேண்டும்.

சற்று யோசித்து, ''அதற்குள், அந்தப் பையன் ஊரை விட்டே ஓடிப் போய் விட்டான். சம்பந்தி தேடிப் பார்த்து, அலுத்துப் போய்த்தான், வேறே இடம் பார்த்ததே! பார்த்து என்ன பண்ணுவது? கிட்டத்தட்ட முடிக்கலாம் என்று இருப் பதைக் கூட, நம் பெண்ணின் பிரதாபம் போய்க் கெடுத்து விடுகிறது. எத்தனையோ முயற்சி பண்ணிப் பார்த்து, அலுத்துப் போய்த்தான் கடைசியாக அவளுக்குத் தேடு வதையே விட்டு விட்டேன்'' என்றார் அவர்.

''அதுதானே தப்பு என்றேன்'' என்றார் செந்தில்நாதன், ''அவள் சின்னப் பொண்ணு! அந்த வயதில் அவளுக்கு நல்ல கெட்டது என்ன தெரியும்? அதைப் பெரிது படுத் தாத இடமாகப் பார்த்திருக்கலாமே! பெற்ற தந்தை, நீங் கள் கூட, மகாலட்சுமியையே அப்படியே விட்டு விட லாமா? அவளோ, அந்த மகாலட்சுமியையே போட்டிக்கு அழைக்கக்கூடிய மாதிரி, அருமையான பெண்!''

''ரொம்பவும் முயன்று நடக்காததால்தான்... அத்தோடு ஜாதகப்படியும்...''

''இல்லை சம்பந்தி! நீங்கள் செய்தது... முயன்ற விதமே சரியில்லை. இப்போது காலம் ரொம்ப மாறி விட்டது.

கல்யாணமாகி, ரத்து பண்ணிவிட்டு வந்த பெண்ணுக்குக்கூட, மறுதாலி கட்ட எத்தனையோ பேர் முன்வரவில்லையா? வெளிநாடுகளுக்குப் போய் வருகிறார்களே, அங்கெல்லாம் எப்போதோ, இது சர்வ சாதாரணமாகி விட்டதைப் பார்த்துவிட்டுத்தானே வருகிறார்கள். ஓரளவு, இங்கேயும் இப்போது கிட்டத்தட்ட அப்படித்தான் ஆகிக் கொண்டு வருகிறது. நல்லாபடித்த குடும்பங்களில் மாப்பிள்ளையைத் தேடுங்கள். உடனே நடக்கும். அதிலும், உங்கள் அதிர்ஷ்டம் இருவருமே அம்மாவைக் கொண்டு பிறந்த அழகான பெண்கள். எங்கள் அண்ணன் மகன் மனோ வெளிநாடுகளில் பிசினஸ் பண்ணுகிறவன். இன்று மாலைச் சிற்றுண்டிக்கு, எப்படியாவது, வருவதாகச் சொல்லியிருக்கிறான். அவனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது... ஏன் அவனையே கூடக் கேட்கலாமே. அண்ணி கூட, சுகன் திருமணத்தின்போது மகாலட்சுமியைப் பார்த்துவிட்டு, அருமையான பெண் என்றார்கள். பார்ப்போம் கடவுள் என்ன எழுதி வைத்திருக்கிறார் என்று பார்க்கலாம்'' என்றார் செந்தில்நாதன்.

வெளிநாடு போய் வருகிறவன் என்றால், எத்தனை லட்சம் அதிகம் செலவாகுமோ என்றிருந்தது முத்து மாணிக்கத்துக்கு.

தொழிலதிபரான செந்தில்நாதன், நகை, தொகை, சீர், செனத்தி என்று எதுவும் கேட்கவில்லை என்றாலும், தன் மகளின் திருமணத்தை எப்படிச் செய்தார் என்று சொல்லி, ''உங்கள் விருப்பம் போல, ஆனால், குறைவில்லாமல் செய்யுங்கள்'' என்று கூறி முடித்து விட்டார்.

அதற்காகவும், பந்தாக் காட்டவும் முத்துமாணிக்கம் செலவு செய்ததே, ஒரு பெரிய தொகையை எட்டி



விட்டது. இப்போது அதே போலப் பெரியவளுக்குச் செய்வது என்றால், இன்னொரு 'சி' ஆகும்.

ஆனால் இதே குடும்பத்தில் இன்னொரு மருமகன் கிடைத்தால், இன்னமும் பெருமைதான்! செலவு முடியாதது அல்ல என்பதோடு, இரண்டு பெண்களின் திருமணங்களைப் பிரமாதமாகச் செய்தார் என்ற பெருமை வந்து சேருமே!

கணவன் மூலமாக, இந்தப் பேச்சு வார்த்தைகளை அறிந்து கொண்ட செல்வலட்சுமிக்கு ஒரே சந்தோஷம்!

பெண்கள் பந்தியும் ஒருவாறு முடிந்துவிட, மதியம் ஓய்வெடுக்கிற சாக்கில், தமக்கையைத் தன் அறைக்கு அழைத்துப் போய் தான் அறிந்த விவரத்தைச் சொன்னாள்.

பெரியவர்களின் உரையாடல், மகாலட்சுமியின் மனதைப் படபடக்க வைத்தது.

வாயை வைத்துக் கொண்டு சும்மா இராமல், உன் மாமா ஏன், என் விஷயத்தில் இந்தப் பிரச்சனை பண்ணுகிறார் என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு. அவள் விஷயத்தில் தலையிடாமல், அவரைப் பேசாதிருக்கச் செய்ய முடியாதா என்று சொல்ல அவள் வாயைத் திறக்கும் போதே, செல்வலட்சுமியும் மேலே பேசினாள்.

''மகா, அவருடைய மனோ அண்ணன் பெரிய ஆள் என்கிறார் சுகன். எல்லாம் ஒத்து வந்தால், அவரை நல்லபடியாகத் திருமணம் செய்து கொள். திருமண வாழ்வு எவ்வளவு சந்தோஷமானது என்று அனுபவித்தால்தான் தெரியும். தயவு செய்து, இந்த முறையாவது உன் வம்புகளை விட்டு விட்டுக் கையை, வாயைக் கட்டிக் கொண்டு சும்மா இரு, என்னக்கா?'' என்றாள் கெஞ்சுதலாக.

பெயர் மனோ என்றால் அதன் விரிவு ஒருவேளை... என்று யோசித்த மகாலட்சுமி, தங்கை பேச்சை முடித்த விதத்தில், திகைத்து வாயடைத்து நின்றாள். ஆனால் உடனேயே சமாளித்து ''ஏய் என்னடி வம்பைக் கண் டாய்? பெரிதாக அளக்கிறாயே! அப்படி என்ன செய்தே னாம்?'' என்று தங்கையை அதட்டினாள்.

லேசாகத் தோளைக் குலுக்கினாள் தங்கை. ஆனால், பதிலேதும் சொல்லாமல் விடவும் இல்லை. ''அது பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால், நிச்சயமாக என் னவோ செய்கிறாய். அது மட்டும் தெரியும்'' என்றாள் குரலில் அழுத்தத்துடன்.

''சும்மா உளறாதே. புதிதாகத் திருமணமான பெண். புருஷனையும் புகுந்த வீட்டையும் பார்த்துக் கொண்டு, சந்தோஷமாக இருப்பதை விட்டு, வேண்டாத எதை யாவது போட்டுக் குழப்பாதே'' என்றாள் தமக்கை சிறு கண்டிப்போடு.

''சந்தோஷமாகத்தான் இருக்கிறேன், அக்கா. ரொம்ப ரொம்ப சந்தோஷம்! அதனால்தான், என் அக்காவும் இதேபோல சந்தோஷமாக இருக்க வேண்டும் என்கிற ஆசையில், இவ்வளவு பேசுகிறேன். ப்ளீஸ்க்கா, அப்படி முறைக்காதே! தயவு பண்ணி இந்த முறை பார்க்கும் மாப்பிள்ளையாவது தட்டி விடாமல், கல்யாணம் பண் ணிக் கொள்ளக்கா. என் செல்ல மகா இல்லை? ப்ளீஸ்யா!'' என்று கெஞ்சலும் கொஞ்சலுமாகத் தமக்கையைத் தாஜாப் பண்ணினாள் செல்வலட்சுமி.

சற்று வியப்பாகத்தான் இருந்தது மகாலட்சுமிக்கு.

பொதுவாக, செல்வா நல்ல பெண்தான். ஆனால் தன் காரியம்தான் அவளுக்கு முக்கியம். அடுத்தவர்களுக்



காக, ரொம்பப் பார்க்க மாட்டாள். தந்தை நியாயமற்று யாரையாவது... அவர்களுடைய தாயையே திட்டும் போது கூட, அப்படியே ஒதுங்கிப் போய் விடுவாளே தவிர, ஒரு வார்த்தை தாங்கிப் பேச மாட்டாள். அதைச் செய்து, தானும் வாங்கிக் கட்டிக் கொள்வது, மகாதான். அதையும்கூட கவனியாதது போல, செல்வா அங்கிருந்து சென்று விடுவாள். 'கூடச் சேர்ந்து திட்டு வாங்குவதால், எனக்கு என்ன லாபம்' என்று கேட்கவே செய்வாள்.

அதே செல்வா, அக்காவுக்குப் பிடிக்காது. தன்னிடம் எரிச்சலைக் காட்டக் கூடும் என்று தெரிந்தும், திருமணம் செய்யும்படி, அவளிடம் இந்தப் போடு போடுகிறாளே! காரணம், அக்காவும் மகிழ்ச்சியாக இருப்பதற்காகவாம்! இல்லறம், அப்படியா ஆளை மாற்றி விடும்? மாற்றி யிருக்கிறதே!

அவள் மாறினாலும், மாறாவிட்டாலும், செல்வாவின் விஷயம் வேறு! மற்றவளின் பிரச்சினையோ, அடி யோடு வேறு! தொடங்குமுன்பே முடிந்து போன கதை!

கடவுள் அருளால் ஆயிரத்தில்... லட்சத்தில் ஒரு வாய்ப்பாக, அவன் அதே மனோவாக இருந்தால்... இருந் தாலும்தான் என்ன ஆகி விடும்? அவனே, அவளை வெறுத்து ஒதுக்கி விடுவான்! அப்புறமென்ன?

ஒருவேளை, அன்றைய தவறுக்கு, அப்படியொரு தண் டனை அவள் அனுபவித்துதான் ஆக வேண்டும்போல!

## – 3



வெளிப்பார்வைக்கு அமைதியாகவே தோற்றமளித்த போதும், மகாலட்சுமியின் மனம், புயல் நேரத்துக் கடலாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

வரப்போவது 'அந்த' மனோரஞ்சனாக இருந்தால், அது ஒருவகை வேதனை! அப்படி இல்லை என்றால், அதுவும் துன்பம்தான்!

கொதிக்கும் எண்ணையா? அடுப்பு நெருப்பா என்பது போல.

ஏனெனில் அவளுக்குத் தெரிந்த மனோரஞ்சன், அப்படி ஒன்றும் யாரையும் மன்னிக்கிறவன் அல்ல! அதிலும் அவனது அந்தக் கடைசி பார்வை! காலால் எத்தி உதைத்துத் தள்ளாமல் விட்டால்தான் அதிசயம்!

ஒருவேளை வேற்று ஆளாக இருந்தால், இந்த அவமானம் மட்டும் மிஞ்சக்கூடும்!

தங்கை சொல்வதைப் பார்த்தால், தந்தைக்குப் பழக்கமான திருமணத் தரகர்கள் கூட்டி வரும் விதமான குடும்பச் சூழ்நிலை இராது என்பது நிச்சயம்.

அவர்களிடமானால், பதினெட்டு வயதில் 'லவ்' பண்ணி, அவனையே கட்டுவேன் என்று நின்றாள், அதற்கு முன்னாலேயே ஏதோ கசமுசா என்கிறார்கள் என்றாலே சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுவார்கள். இவர்கள், வேறு மாதிரி என்றால்... இங்கே வேறு என்ன விதமாக முயற்சி செய்வது?

இன்னொரு தரம் வெளிப்படையாகத் தந்தையை எதிர்த்து நிற்பது, மிகவும் கடினம்! அன்னை அழுதே கரைந்து போவாள்!

திருமணம் பிடிக்கவில்லை என்று சொல்லும்படி, வருகிறவனிடமே கேட்டுப் பார்க்கலாம். ஆனால், என்னையா மறுக்கிறாய் என்று அவன், அவளுடைய தந்தையிடம் போட்டுக் கொடுத்து விட்டால்?



அவ்வளவுதான், வீடு முழு நரகமாகிவிடும்...

ஐந்து மணியை ஒட்டி காபி, டிபன் என்று மறுபடி உணவு நேரம் களை கட்டியது.

''தம்பி வரத் தாமதமாகக் கூடுமாம். தனக்காகக் காத்திராமல் சாப்பிடச் சொன்னான். முடிந்தவரை, இடையிலே வந்து கலந்து கொள்வானாம்'' என்றாள், செந்தில் நாதனுடைய அண்ணன் மனைவி.

வீட்டுப் பெண்களோடு மகாலட்சுமியும் சேர்ந்து தட்டுக்களில் எடுத்து வைத்துக் கொடுக்க, எல்லோருமாக இனிப்பையும் காரத்தையும் வெட்டிக் கொண்டிருந்த போது, செல்போனைப் பைக்குள் திணித்துக் கொண்டு ஒரு பரபரப்போடு சுகந்தன் எழுந்தான்.

''அண்ணன்ப்பா! பெரியம்மா, அண்ணன்! நீங்கள் உட்காருங்கள். நான் போய் அண்ணனைக் கூட்டி வருகிறேன்'' என்றவாறு வாயிலை நோக்கி விரைந்தான்.

கட்லட்டுக்காக சாஸ் பரிமாறிவிட்டுத் திரும்பிய மகாலட்சுமி, கிண்ணத்தில் இன்னும் கொஞ்சம் சாஸ் எடுத்து வைக்கிற சாக்கில், வாயிலுக்கு முதுகு காட்டியவாறு அப்படியே இறுகி நின்றாள்.

காலடி ஓசைகள், ''வாப்பா மனோ!'' என்ற செந்தில் நாதனின் வரவேற்பு, தொடர்ந்து ''நான் சொல்லவில்லை, என் ஒன்றுவிட்ட அண்ணனுடைய மகன்!'' என்று அவர் அறிமுகத்தைத் தொடங்க, அதை இடையில் வெட்டி ''இவரை எனக்குத் தெரியுமே! ஓர் உடல், ஈருயிர் மாதிரி, மனோத் தம்பி எனக்கு ரொம்ப நல்ல பழக்கமாச்சுதே! நல்லா இருக்கிறீர்களா தம்பி?'' என்று அன்பொழுக, உற்சாகத்துடன் குசலம் விசாரித்தது, முத்துமாணிக்கத்தின் குரல்.

''ஆமாம், வணக்கம்'' என்ற ஆண் குரல்... அவன் தானா? அவனேதானா?

விருட்டென்று திரும்பிப் பார்த்த மகாலட்சுமி, தடு மாறிக் கீழே விழுந்து விடாமல், உணவு மேஜையை இறுகப் பற்றிக் கொண்டாள்! ஏனெனில், அவளது கால்கள் அவ்வளவு வலுவிழந்து போயின.

ஏனெனில் வந்தவன் அதே மனோரஞ்சனேதான்! 'சீச்சீ, நீயும்! ஒரு பெண்ணா' என்று அவளை வெறுத்து ஒதுக்கிவிட்டுப் போன, அதே மனோரஞ்சன்தான்!

உலகம் முழுவதும் அசைவற்று நின்றுவிட, முத்து மாணிக்கத்தின் குரல் மட்டும் அங்கே ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

''எங்கள் அண்ணன் மகனை உங்களுக்கு முன்பே தெரியுமா?'' என்ற ஒரே ஒரு கேள்வியைத்தான் செந்தில் நாதன் கேட்டார்.

''தெரியுமாவா? கொஞ்சமா, நஞ்சமா? உங்கள் வீட்டுப் பிள்ளை அங்கே முதல் முதலாகத் தொழில் தொடங் கவே, நான்தானே, உதவியெல்லாம் செய்தேன்! என்ன ஒரு... ஐந்தாறு வருஷம் இருக்குமா? அதுக்குள்ளே, ஒரு முகத்தை மறக்கிறவன் நான் இல்லை, சம்பந்தி! இந்த கம்பு... கம்ப்யூட்டரைப் படிச்சிட்டு, சரியா வருமானம் இல்லாத தம்பி ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருந்த நேரம்... அதெல்லாம் சித்தப்பாவுக்கு சொல்லியிருக்கிறீர் கள்தானே மனோ தம்பி? ஆங், ஒன்றுக்குள்ளே ஒன்று, சொல்லாமல் எப்படி இருப்பீர்கள்? அப்படித் தம்பி கஷ்டப் பட்ட நேரம், அது! ஆனால், அன்றைக்கே மனோத்தம்பி, பெரீய ஆளாக வரப்போகிறது, எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அதனாலேதான், தம்பி கேட்ட உதவி,



தட்டாமல் அப்படியே செய்தேன். மற்றபடி, அந்தச் சில் லரைக் கடைக்காரனுங்க கிட்டே நான் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்கிறதே கிடையாது. ஆனாலும், தம்பிக் காக சிபாரிசெல்லாம் செய்தேன்!''

''நம்ம கைராசி, தம்பி உசந்து விட்டாரில்லை? நம் ஊர்ப்பக்கம் போய்க் கேட்டுப் பாருங்கள் சம்பந்தி! என் கைராசிக்காகவே, கடை தொடங்கிக் கொடுங்கள் என்று ஏரோப்பிளேன் டிக்கெட்டை வைத்துக் கொண்டு, காத்துக் கிடப்பானுங்கள்!'' என்று மூச்சு விடாமல் அளந்தார் முத்துமாணிக்கம்.

மகாலட்சுமிக்கு முகச் சிவப்பை அடக்குவது பெரும் பிரயத்தனமாக இருந்தது.

தந்தையின் அளப்புத்தன்மை, அவள் அறிந்ததுதான். ஆனால் மனோரஞ்சன் என்ன நினைப்பான்?

இன்றைய நிலை பற்றிய முழு விவரமும் தெரியாத போதும், ரொம்பவே செல்ஃப் டப்பா அடிக்கிறார் என்பது, அவனுக்குத் தெரியாதிருக்க முடியாது. நிச்சயமாகத் தெரியும்!

அதனாலேயே, அவளுக்கு மனம் கூசியது. இதை எப்படி நிறுத்துவது?

தங்கையைப் பார்வையால் தேடினால், அவள் சற்றுத் தள்ளி, ஜன்னல் ஓரமாகத் தன் கணவனோடு நின்று, குதூகலமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

தந்தையின் அளப்பு, அவள் காதில் விழுந்த மாதிரியே தெரியவில்லை.

அவர்கள் இருவரைத் தவிர அங்கே யாரும் இல்லாதது போல, ஒருவரில் ஒருவர் லயித்து அவர்கள் நின்ற

தோற்றம், மகாவின் மனதில் கனமாகப் படிந்தது! ஏதோ, கடவுள் தங்கைக்காவது இந்தப் பாக்கியத்தை கொடுத் தாரே!

இங்கே திரும்பினாலோ, முத்துமாணிக்கம் பழைய பாட்டைத்தான் பாடிக் கொண்டிருந்தார். அது ஒரு துன் பம் என்றால், அதை விடவும் மகாலட்சுமியை மிகவும் பாதித்தது. வேறொரு விஷயம்.

அதுவரை மனோரஞ்சன் அவள் பக்கம் திரும்பவே இல்லை.

முத்துமாணிக்கத்தைப் பார்த்த மட்டில், அவள் அங்கே இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தெரிந்துதான் இருக்கும். ஆனால் அவள் இருக்கிறாளா என்று, அவன் பார்வையால் கூடத் தேடவில்லை! அவ்வளவு ஆத்திரம்!

மேம்போக்காக ஒரு தரம் பார்த்தால்கூட, அவள் அங்கே இருப்பது தெரிந்து விடும். ஆனால், அதுவே கூடாது என்ற பிடிவாதத்தோடு மனோரஞ்சன் இருக்கிறான் என்றால், அவளது மனம் கலங்கியது. ஆனால், அவனது நிலையில் இருந்து பார்த்தால், நியாயமான கோபமாகத் தான் தோன்றும்!

கோபம் மட்டும்தானா? வெறுப்புமா? ஒரேடியாக வெறுத்தே விட்டிருப்பானோ? முகத்தில் விழிக்கக்கூடப் பிடிக்காத வெறுப்பு! கோபம் என்றால், முறைத்துப் பார்க்க வேனும் தோன்றுமே!

''என்ன மனோ, எழுந்து விட்டாய்?'' என்று செந்தில் நாதன் கேட்கும்போதே, கூடச் சேர்ந்து ''என்ன தம்பி, அதற்குள் கிளம்புகிறீர்கள்? உங்களிடம் நிறையப் பேச வேணும் என்று நினைத்தேனே! டிபன் கூடச் சரியாகச் சாப்பிடவில்லையே! அந்தப் பால்கோவாப் பலகாரம்



மிகவும் ருசி. இன்னும் கொஞ்சம் கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று அந்த வீட்டுக்காரரே அவர்தான் போல முத்துமாணிக்கம், மனோரஞ்சனை உபசரித்தார். ''மகா, மனோத் தம்பிக்கு...''

''இல்லை வேண்டாம்'' என்று பிசிரற்ற குரலில் மறுத்தான் அவன். அத்தோடு திரும்பி, ''உடனடி வேலை கொஞ்சம் இருக்கிறது. அம்மா, வருகிறீர்களா? இப்போது போய்விட்டு, இன்னொரு நாள் சாவகாசமாக வரலாம்'' என்று தாயை அழைத்தவன், செந்தில்நாதனைப் பார்த்து, ''சாரி சித்தப்பா. வெளிநாடு சென்ற வேலை, உடனே பார்த்து முடித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது முடிந்த பிறகு, நிதானமாக வருகிறேனே! நம் வீடுதானே?'' என்று நயந்த குரலில் பதவிசாக அனுமதி கேட்டான்.

மறுத்துக் கூறினாலும் அவன் நிற்கப் போவதில்லை. ஆனாலும், பெரியவருக்கு மதிப்புக் கொடுப்பது போலப் பாவனை! இதில் அவன் எப்போதுமே கெட்டிக்காரன் தான். அவரவருக்குச் சரியாக, நோகாமல் பேசுவதில்!

புரிந்துகொண்டு புன்னகை செய்தார் செந்தில்நாதன். ''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், பொறுப்போடு வேலையைப் பார்க்கப் போகிறவனை நிற்கச் சொல்லவும் கூடாது. கூடச் செல்லும் அண்ணியையும் தடுக்க முடியாது. இரண்டு வாரங்களுக்குப் பிறகு, இன்றுதான் மகனைப் பார்க்கப் போவதாக, ஏற்கனவே சொன்னார்கள்...'' என்று மனைவியைக் கேள்வியாகப் பார்த்தார்.

''உங்கள் மனைவி, உங்களுக்கு மேலே, சீக்கிரமே கிளம்ப வேண்டியிருக்கும் என்று சொல்லியிருந்ததால், இரவுச் சாப்பாட்டுக்கு என்று, செல்லோவிலே அடைத்துக்

காரிலேயே கொண்டு வைக்கச் சொல்லி விட்டார்கள்'' என்றுரைத்து, கொழுந்தன் மனைவியை சினேகமாகப் பார்த்துப் புன்னகை செய்தாள், கருணாகரி.

மற்றவர்களோடு ஒருவாறு சுகந்தன் செல்வலட்சுமியும் வந்து சேர ''இடையூறுக்கு வருந்துகிறேன்ப்பா!'' என்று கிண்டல் செய்தவாறு, கைப்பெட்டியிலிருந்து ஒரு ஜோடிக் கைக்கடிகாரங்களை எடுத்து, அவர்களுக்குப் பரிசளித்துவிட்டுப் பொதுவாக ஒரு விடை பெறலுடன், மனோரஞ்சன் கிளம்பினான்.

அவனைச் சூழ்ந்து நின்ற உறவினர் கூட்டத்தோடு கூட்டமாக, மகாலட்சுமியும் சேர்ந்து வந்து நிற்கவில்லைதான். ஆனால் கவனத்தோடு அவளை ஒதுக்கிய பார்வை, அவளது கருத்தில் குத்தி ரணமாக்காமல் போகவுமில்லை!

அன்று நடந்ததை முழுதாக அறியும்போது இந்த வெறுப்பு மாறுமா? அல்லது, மனதளவில், அடியோடு உதறித் தள்ளி விட்டானா?

அவளே, அவனது இடத்தில் இன்னொருவனை நினைக்கப் பிடிக்காமல் இருந்தாளே தவிர, மனோரஞ்சனையே எண்ணி எண்ணி, அவனுக்காக ஏங்கித் தவித்து, ஒவ்வொரு நாளும் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தாள் என்று சொல்ல முடியாதுதானே!

வீட்டுப் புறாவான அவளே இப்படி எனும்போது, எத்தனையோ விதமான பெண்களைப் பார்த்துப் பழகும் வாய்ப்புள்ள நிலையில், மனோவின் மனதில் அவள் மீது அன்பு நிலைத்திருப்பது சாத்தியமா?

அதிலும் அவளை வெறுத்து ஒதுக்க, அவ்வளவு நடந்து விட்ட போது? அவனும் உயிரும் உணர்வும் உள்ள மனிதன்தானே? ஒருவேளை, வேறு தேடியிருந்தால்?



அதெப்படி முடியும் என்று, தன்னை மீறி ஒரு சீற்றம் வந்தது அவளுக்கு.

அவளால் வேறு நினைக்க முடியாமல்தானே, இல்லாத அகடவிகடமெல்லாம் செய்து, கிட்டி முட்டி வரும் திருமணங்களைக் கெடுத்துக் கொண்டிருந்தாள்?

அவனுக்காக ஏங்கி ஏங்கிக் கண்ணீர் விட்டால்தான் காதலா? அந்த இடத்தில் இன்னொருவனை நினைத்துப் பார்க்கக்கூட முடியாமல் இருந்தாலும் அப்படித்தான், அர்த்தம்! அவன் மட்டும் மாறலாமா?

மனோரஞ்சனைப் பார்த்ததும், பழகியதுமாய், அவனைப் பற்றிய நினைவுகள் மனதில் முட்டி மோதிக் கொண்டு குமிய, சூழ இருந்தோரிடம் இயல்பாகப் பேசுவதே மகாலட்சுமிக்கு கடினமாயிற்று.

நல்லவேளையாக, புதுமணமக்களின் தேனிலவு பற்றிய பேச்சு எழ, அந்தச் செலவைத் தான் செய்யுமாறு ஆகிவிடுமோ என்ற கலக்கத்தில், முக்கியமான வேலை இருப்பதாகச் சொல்லி, முத்துமாணிக்கம் கிளம்பி விட்டார்.

தேனிலவுச் செலவைப் பற்றிச் சொல்லி பெருமையடிப்பது எப்படி?

வீட்டை அடைந்ததுமே, கூட்டத்தில் இருந்தது, தலையை லேசாக வலிப்பதால், படுத்துத் தூங்கப் போவதாகவும், அதனால் இரவு உணவு வேண்டாம்மா'' என்று தாயின் காதில் முணுமுணுத்துவிட்டு, அவளது அறைக்குள் புகுந்து, தாளிட்டுக் கொண்டாள்.

ஏனெனில் திடீரென்று ''வயசுப் பிள்ளை பட்டினியாகப் படுப்பதா'' என்று கன அக்கறையாக, முத்துமாணிக்கம் கேட்கத் தொடங்கி விடுவார். அது மெய்யான பாசமாக

வும் இருக்கலாம், பாசம் போலக் காட்டிக் கொள்வ தாகவும் இருக்கலாம். முன்னதாகச் சொல்லி விட்டதால், வயிறு சரியில்லை என்பது போல ஏதாவது சொல்லி தாயார் சமாளித்து விடுவாள்.

ஆனால், அதற்கெல்லாம் அவசியமற்று, டீ.வி. சானல் ஒன்றில் கணவன் மனைவி, இருவருக்கும் பிடித்தமான நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகிக் கொண் டிருந்ததால், இருவரும் மற்றதை மறந்து, டீ.வி. முன் னால் சோஃபாவில் வசதியாக உட்கார்ந்து விட்டனர்.

கதவைத் தாளிட்டுவிட்டுக் கட்டிலில் அமர்ந்த மகாலட்சுமிக்கு முதலில் வந்தது கண்ணீர்தான். விக்கல் விசும்பல் எதுவும் இல்லாமல், அருவியாகக் கண்கள் பொழிந்த நீரைத் துடைக்கும் எண்ணம் கூட இல்லாமல், அப்படியே அமர்ந்திருந்தாள்.

ஐந்து முழு ஆண்டுகள்! மனோரஞ்சனை மறுபடியும் பார்க்கவே முடியாது என்று அவள் எண்ணியிருந்த ஐந்து ஆண்டுகள்!

அன்றைய அவனது வெறுத்த நோக்கும், திரும்பிப் பாராமல் அவன் சென்ற விதமும்!

என்றேனும் மறக்குமா? நினைத்துப் பாராமல் இருந் தால், மறந்து விடலாம் என்று எண்ணியது, எவ்வளவு மடத்தனம்!

நினைக்கக்கூடாது என்று முயன்று ஒதுக்கி வைத்திருந் தது எல்லாம், அவனைப் பார்த்த ஒரு கணத்தில் கட்டு மீறிக் கொண்டு கிளம்பலாயின!

கண்களில் ஆர்வமும், நம்பிக்கையும், சிறு கலக்கமு மாக, அவளுடைய தந்தையிடம் உதவி வேண்டி, மனோரஞ்சன் வந்த அந்த முதல் தோற்றம். போட்டோ காப்பிப் போல, அப்படியே மகாவின் முன் தோன்றியது!



ஆனால், அந்த முதல் பார்வையிலேயே அவள் மயங்கிப் போனாளா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். முன்னேறுவதில் அவனது ஆர்வம், அயராத உழைப்பு, இனிமையான பேச்சு... எல்லாம் பார்க்கப் பார்க்கத்தானே, அவன் மீது மதிப்பும், மரியாதை யும், முக்கியமாக உயிர் நேசமும் உண்டானது!

அன்றைய முதல் சந்திப்பைப் பொறுத்தவரை, அவள் மனதில் ஏற்பட்டது, மிகச்சிறு சலனமே! ஆனால், சலனம் உண்டானது உண்மையே!

பின்னர் பெரிய அளவில் வளர்ந்து, பணக்காரர் என்ற நிலைமை அடைந்து விட்ட முத்துமாணிக்கம், முதலில் தொடங்கியது ஒரு சிறிய கடையையே ஃபேன்சி ஸ்டோர் மாதிரி தொடங்கியதுதான். ஆனால் யார் யார் வந்து, என்ன வேண்டும் என்று கேட்டாலும், குறித்து வைத்து உடனே மொத்த விற்பனையாளர்களிடம் போய்க் குறைந்த விலைக்கு வாங்கி வந்து, அவரது 'முத்து ஸ்டோரி'ல் வைத்து விடுவார்.

வாடிக்கையாளரை நாடி பிடிக்கத் தெரிந்ததாலோ என்னவோ விரைவிலேயே வியாபாரத்தை மிகுதியாகப் பெருக்கி, ஒரு பெரிய சூப்பர் மார்க்கெட்டையே உரு வாக்கி விட்டார்.

ஆனாலும், முதலில் தொடங்கிய கடையின் ராசி என்று, தினமும் அங்கே வந்து பூஜை போட்டுவிட்டுத் தான் பெரிய கடைக்கே போவார்.

பூஜையும் சும்மா ஏனோ தானோ என்று அல்ல. தினமும் அங்கே மாட்டியிருக்கும் சுவாமி படங்களைத் துடைத்து, பூச்சரம் சாத்தி, கற்பூரம் காட்ட வேண்டும். இதில் கடைசியாகத் தீபம் காட்ட மட்டும் அவர் வருவார். மற்றது, வீட்டுப் பெண்கள் பொறுப்பு.

சின்னவள் என்கிற பெயரில், செல்வலட்சுமி எப்படியாவது நழுவி விடுவாள். குமுதத்துக்குப் பாதி நாள் வீட்டில் வேலையிருக்கும். வந்தாலும், ஏணி ஸ்டூல் மேல் ஏறி, படம் துடைக்க முடியாது. எனவே பெரும்பாலும், இந்த வேலை செய்வது, மகாலட்சுமிதான்.

தன் பெண்கள் இருவரும் பிறந்த பிறகுதான் தொழில் வேகமாக வளரத் தொடங்கியதாக, முத்துமாணிக்கத்துக்கு ஓர் எண்ணம். அதிலும் தான் ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக மகள்களின் பெயரில் லட்சுமியைச் சேர்த்ததினால்தான், அந்த லட்சுமி மனம் குளிர்ந்து பணத்தைக் கொட்டுகிறாள் என்று, விளக்கமும் சொல்வார். எனவே, படம் துடைப்பது, மலர்ச்சரம், சாற்றுகிற வேலை, கிட்டத்தட்ட மகாவினதுதான்.

அப்படி ஒரு நாள் காலையில், கடையிலிருந்து லட்சுமி படத்தை மகாலட்சுமி துடைத்துக் கொண்டிருந்த போதுதான், மிஸ்டர் முத்துமாணிக்கத்தைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு மனோரஞ்சன் அங்கே வந்து சேர்ந்தான்.

அண்ணாச்சி, பெரியவுரு, சேட்டு, பெத்தபாபு, அய்யா என்றெல்லாம் குறிப்பிடாமல், மிஸ்டர் போட்டுப் பெயர் சொல்லி ஒருவன் தேடவும், வெளியே நீர் தெளித்துப் பெருக்கிக் கொண்டிருந்த கடைப் பையனுக்குக் கிலி பிடித்து விட்டது.

அவனைப் பொருத்தவரையில் 'இங்கிலிபீஸ்' வார்த்தை பேசுகிற ஆண்கள் அனைவரும், விற்பனை, அல்லது வருமான வரித் துறையைச் சேர்ந்தவர்களே, அவர்களிடம் வாயைத் திறக்கவே கூடாது என்பது, முத்துமாணிக்கத்தின் கடுமையான உத்திரவு. உத்திரவை மீறுகிறவர்கள், சிறு



வயதுப் பையன்களாக இருந்தால், முதுகுத் தோல் உரியும். பெரியவர்களாக இருந்தால், வேலை போகும்!

கையிலிருந்த துடைப்பத்தை ஓரமாக வீசிவிட்டு, விழுந்தடித்து உள்ளே ஓடி வந்தான், மாரிப்பையன். ''அம்மாம்மா, அவுரு... கவுரு... வந்து... கவுருமெண்டுக் காரங்க!'' என்று படபடத்தான்.

''இல்லையே! அப்பா! பெயர்தானே, கேட்டது...'' என்று அவள் கேட்கும்போதே, அவன் படியேறிக் கடை நுழைவாயிலுக்கு வந்து விட்டான். ''முத்துமாணிக்கம் சாரிடம் ஓர் உதவி கேட்டு வந்தேன். இங்கே இருப்பார் என்று சொன்னார்கள். வேறு யாரிடமும் வாக்குக் கொடுக்குமுன் பார்த்துவிட வேண்டும் என்று...''

பாவாடை விரிய மரக்குதிரை மேலே ஏறி நின்றிருந்த மகாலட்சுமிக்கு ஏனோ உடம்பில் கூச்சம் உண்டாயிற்று. இறங்க முடியாமல், அப்படியே நிற்கவும் மனமின்றித் தவித்தபடி, ''அப்பா வருகிற நேரம்தான். ஆனால், பூஜை போட்ட பிறகுதான்...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, முத்துமாணிக்கம் கடைக்கு வந்து விட்டார்.

''யாருப்பா அது காலங்கார்த்தாலே?'' என்று கேட்டபடி, படியேறி வந்தார், அவர்.

சின்னக் கடையின் பின்புறம்தான் வீடு. கடைக்குப் பக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, கடைக்குப் பின்னேயும், ஒட்டிய பின் தெருவிலுமாக இரண்டு வீடுகளை வாங்கிச் சேர்த்துப் பெரிதாகக் கட்டி வைத்திருந்தார். தெருவைச் சுற்றி வராமல் மதில் சுவரிலேயே பின் பக்கம் தோட்டத்தில் ஒரு சின்ன கேட் போட்டு, அதன் வழியே வந்து விடுவார். பெரிய கடையும் அதே

தெருவில் அருகிலேயே இருந்ததால், வீட்டினர் இந்த வழியைத்தான் பயன்படுத்துவது.

எந்த வாகனமும் இன்றித் திடுமென முளைத்தாற் போல வந்து நின்றவரை, மனோரஞ்சன் திகைப்புடன் பார்க்கும்போதே, ''எதற்காகவாவது, தருமம் கிருமம் கேட்க வந்திருந்தால், உடனே திரும்பிப் போய்விடு. அது போலெல்லாம் இங்கே கொடுப்பதில்லை'' என்று முடித்து விட்டு ''இன்னும் பூப்போட்டு முடிக்கவில்லையா?'' என்று மகளிடம் எரிச்சலைக் காட்டினார் முத்துமாணிக்கம்.

''போட்டாயிற்று, அப்பா'' என்றவளுக்கு, அந்த புதிய வனின் முன்னிலையில் முதுகு காட்டித் தடதடவென்று இறங்கக் கூச்சமாக இருக்கவே, மரக்குதிரையின் படி களில், உட்கார்ந்து, உட்கார்ந்து முடிந்தவரை வேகமாக இறங்கலானாள்.

புதியவன் போய்விடுவான் என்று பார்த்தால், அவன் நகராமலே அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

கண்டு கொள்ளாதது போல நிற்க முயன்றாலும், முது கில் ஏதோ குத்துவது போல இருந்தது, மகாலட்சுமிக்கு.

படங்களுக்குக் கற்பூரம் காட்டிவிட்டு திரும்பும்போது தான் அவன் அங்கேயே நிற்பதை, முத்துமாணிக்கம் கவனித்தார் ''சே! என்னப்பா, நான் சொன்னது சரியாகக் காதிலே விழவில்லையா? போப்பா, தொல்லை பண் ணாமல் போய்விடு. சீக்கிரம்!'' என்று பிரசாதமாய், மகள் கையில் ஒரு கற்கண்டை வைத்தார்.

அவன் இன்னமும், இடம் விட்டு அசைந்தானில்லை! ''நான் யாசகத்துக்கு வரவில்லை சார்!'' என்றான் தெளி வாக.



''பின்னே? பின்னே எதுக்கு வந்தாயாம்?''

''உங்களிடம் ஓர் உதவி கேட்டு வந்தேன்!''

முகத்தை சுளித்து ''பேரை மாற்றிச் சொன்னால், விஷயம் மாறிப்போகுமா?'' என்று கேட்டார் பெரியவர்.

''மெய்யாகவே சார், நான் பிச்சை கேட்க வரவில்லை. தொழிலில் ஓர் உதவி. அதில் காசு பணம் கிடையவே கிடையாது'' என்று உறுதியாகச் சொன்னான் புதியவன்.

கைக்காசுக்குக் கேடு வராது எனவும், முத்துமாணிக் கத்தின் முகச் சுளிப்பு மறைந்தது. யோசனையோடு பார்த்தார்.

கடை முதலாளியின் மூடு மாறுமுன், வேகமாக விவரம் சொன்னான்.

அந்தப் பகுதியில் உள்ள கடைகளில், கடைச் சரக்கு களைப் பொதிந்து 'பாக்' செய்து வரும் அட்டைப் பெட்டி கள், அதனுள் பொருட்களை அசையாமல் வைப்பதற் காகப் பயன்படும் கிழிந்த காகிதத் துணுக்குகள், தெர் மோக்கோல் போன்ற பொருட்களை வாங்கித் தரம் பிரித்து, தேவையானவர்களுக்கு விற்று சம்பாதித்துக் கொண்டிருந்த பெருமாள், குடும்பக் காரணங்களால், ஊரை விட்டுப் போவதாக இருக்கிறார். அவருக்குப் பதிலாக, இனி, அவன் அந்தத் தொழில் செய்ய, அனுமதி தர வேண்டும் என்ற அவரிடம் கேட்டான் அவன்.

''அனுமதியா?' என்று அவனை ஏற இறங்கப் பார்த்தார் முத்துமாணிக்கம்.

சற்றுக் கசங்கிய சட்டையும், துவைத்துக் கட்டிய லுங் கியையும் கவனித்துவிட்டு, ''அதெல்லாம், அவனவன் கடைக்கு, அவனவன் முடிவு பண்ணுகிறது. இதிலே,

நான் எப்படிப்பா, உள்ளே தலையிட முடியும்?'' என்று கேட்டார்.

கிட்டத்தட்ட மறுப்பு! விட்டுவிட்டுப் போய்விடக் கூடாதே! என்று மகாலட்சுமி நினைக்கும்போதே ''நீங்கள் நினைத்தால், நடக்காததா சார்? இந்தப் பகுதியின் வியாபாரிகள் சங்கத் தலைவர் நீங்கள். தலை கீழாக நில் என்று நீங்கள் சொன்னால், எல்லோரும் மறுக்காமல் நிற்பார்களே!'' என்று அவருக்கு உச்சி குளிரும் வண்ணம் பேசினான் அவன்.

அன்றைக்கே, அவன் அதில் கெட்டிக்காரன்தான்!

தன்னை மீறி முகம் கனிந்தாலும், முத்துமாணிக்க மும், அப்படி ஒன்றும் எளிதாக உருகி விடுகிறவர் அல்லவே!

''அது வேறே விஷயம்ப்பா! நம்ம கிட்டே உள்ள நம்பிக்கை! அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது பார்! அதனாலே, நாலு பேரிடம் கலந்து பேசாமல், நானே தடாலடியாக முடிவு பண்ண முடியாது. அதனாலே, நீ என்ன பண்ணுகிறே... நாளைக்கு மறுபடியும் வாயேன். இந்த நேரத்துக்கு... இல்லையில்லை. அரை மணி நேரம் முன்னாடி, ஏழு மணிக்குப் போல, வீட்டுப் பக்கம் வா! பின்னாலே, அந்த ரோடிலேயே முத்து மாளிகை என்று பேர் போட்டிருக்கும். ஆமாம், உன் பேர் என்ன? எங்கே தங்கியிருக்கிறே! இந்தத் தொழில் அனுபவம் என்ன? ஒண்ணும் சொல்லலையே!'' என்று அவனைப் பற்றிய விவரம் விசாரித்தார் அவர்.

அப்போதுதான் 'மனோரஞ்சன்' என்று தன் பெயரைச் சொன்னான் அவன்.



நல்ல பெயர் என்று அவள் நினைக்கும்போதே, பெருமாளுடன் காவேரி மேன்ஷனில் தங்கி இருப்பது பற்றி, மனோரஞ்சன் சொல்லி முடித்து விட்டான்.

''பெருமாள் அண்ணனுக்கு உதவியாக எல்லாம் செய்வேன் சார், அதனாலேதான். இந்த வேலை நன்றாகப் படிந்து விட்டது. உங்களை வந்து பார்க்கும்படி, அண்ணனே சொன்னார் சார்!'' என்றான்.

இது, அவர்களது முதல் சந்திப்பு.

அடுத்த சந்திப்பு மறுநாள் நடந்தது. அது அவனுக் காக, மகாலட்சுமியை, இன்னும் கொஞ்சம் யோசிக்க வைத்தது.

# – 4



அன்றே மனோரஞ்சனைப் பற்றி, மகாலட்சுமி ஓரிரு முறை நினைத்தாள்தான். அவன் கேட்டு வந்தது நடக்குமா என்ற சந்தேகம்.

முத்துமாணிக்கத்தைப் பொறுத்த வரையில், தேவை என்று வந்தவரிடம் சரி என்று சொல்லவும் இழுத்தடிப் பார். இல்லை என்று மறுப்பதானாலும் அப்படித்தான். கிடைக்குமா, கிடைக்காதா என்று அவர்களை ஊசலாட்டில் நிறுத்தி தவிக்க வைப்பதில், அவருக்கு ஒரு அற்ப சந்தோஷம்!

எனவே, மறுநாள் வரச் சொன்னதால் மட்டுமே, மனோ ரஞ்சன் கேட்டது கிடைக்கும் என்று நிச்சயமில்லை. அது தெரியாமல், எதிர்பார்த்து வந்து, அவன் ஏமாந்து விடக் கூடாதே என்று பரிதாபப்பட்டாள் அவள்.

மறுநாள் காலையில், கடையில் பூஜை வேலை செய்வதற்காகக் குளித்துவிட்டுத் தலையைத் துவட்டிய படியே மாடி வராந்தாவுக்கு வந்தவள், கடைக்குச் செல் லும் சின்னக் கதவைத் திறக்க முயன்று கொண்டிருந்த வனைக் கண்டு திகைத்துப் போனாள்.

அந்தக் கதவு, வெளியிலிருந்து திறப்பது சற்று கடினம். சங்கிலி மாட்டிக் கொண்டு போட்டிருக்கும். பழகாதவர்களால் முடியாது. இரவில் நாய்கள் சுற்றுவ தால், பொதுவாகப் பூட்டுப் போடுவது கிடையாது.

ஆனால், இந்த நேரத்தில், இவன் இங்கே, எங்கே இந்தப் பக்கமாக வந்தான்? இந்த வழியாக வந்தால், அவன் நிச்சயமாகத் தொலைந்தான்!

வேகமாகப் படியிறங்கி, ஓடிச் சென்று, மகாலட்சுமி கதவை அடைகையில், மனோரஞ்சன் கதவைத் திறந்தே விட்டான்.

அவளைக் கண்டதும் முறுவலித்து ''ஹல்லோ, வணக்கம்!'' என்றான் அவன்.

மூச்சு வாங்கியவாறே, ''இ... இந்தப் பக்கமாக ஏன் வந் தீர்கள்! முன் வாசல் பற்றி, அப்பா சொன்னாரில்லையா?'' என்றாள்.

''சொன்னார், ஆனால் இங்கே ஒரு வழி இருக்கும் போது எதற்காகச் சுற்றிக் கொண்டு...'' என்றவன் உடனே புரிந்து ''ஓ! இந்த வழி வீட்டினருக்கு மட்டும்தானோ? ரைட், சுற்றியே வருகிறேன். எச்சரித்ததற்கு நன்றி!'' என்று மறுபடியும் புன்முறுவல் செய்தான்.

எந்த வழியே திரும்பப் போனவனை ''சற்றுப் பொறுங்கள்'' என்று நிறுத்தினாள் மகாலட்சுமி. திரும்பிப் பார்த்து, தந்தையின் அறை ஜன்னலை மாமரக் கிளைகள்



நன்கு மறைப்பதை உறுதி செய்து கொண்டு, ''அப்பா விடம் உதவி கேட்டு வருகிறவர், இவ்வளவு நல்ல சட்டை போட்டிருக்கிறீர்களே, கொஞ்சம் சாதாரணமாக... அதாவது... வந்து, நேற்று மாதிரி, பழசாக, வேறே எதுவும் இல்லையா?'' என்று கேட்டாள்.

''நேற்று, பெருமாள் அண்ணன் அவசரமாகப் போகச் சொன்னதால், உடை மாற்றாமல், அப்படியே வந்து விட்டேன். ஆனால் 'இரக்கப் போனாலும் சிறக்கப் போக வேண்டும்' என்று அம்மா சொல்வார்கள். அதனால், இன்று இந்த உடை!'' என்று தன் உடையையே சுட்டிக் காட்டினான் மனோரஞ்சன்.

எவ்வளவு உற்சாகமாக, நல்ல துணி அணிந்திருக்கும் சந்தோஷத்தோடு சொல்கிறான்! ஆனால்... ஆனால், அவனுக்குத்தானே, வேலை நடக்க வேண்டும்?

''வந்து, அப்பாவிடம் உதவி கேட்டு வருகிறவர்கள், கொஞ்சம் கீழாக இருக்க... ரொம்ப நன்றாகத் தெரிந்தால், அப்பாவுக்குப் பிடிக்காது...'' என்று இழுத்தாள் அவள்.

அவனது கூர் விழிகள் சட்டென விஷயத்தை ஊகித் தன. மற்றவர்களிடம் வளத்தைத் தாங்காதவர், இவ ளுடைய தந்தை!

புன்னகை மாறாமலேயே ''இதோ ஓடிப்போய், வேறே போட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று திரும்பிச் சென்றான் அவன். கதவருகில் நின்று ''முன் வாயில் வழியே வருகிறேன்!'' என்று வரிசைப் பல் தெரிய கூறி விட்டுப் போனான்.

உடை மட்டுமின்றி, பணிவும் பதவிசுமாக மனோ ரஞ்சன் பேசிய விதத்தில், அவன் கேட்ட தொழில் செய்யும் வாய்ப்பு. அவனுக்கே கிடைத்தது!

மகாலட்சுமியின் ஆலோசனை கிடைத்திராவிட்டால், இந்த வாய்ப்பு கனவாகவே முடிந்திருக்கும் என்பது அவனுக்கு நிச்சயம். அதற்காக அவளுக்கு நன்றி கூற, மனோரஞ்சன் மிகவும் விரும்பினான். ஆனால் அதைச் செய்வது எப்படி?

நேராக இவளது வீட்டுக்குப் போய்ப் பேசினால், கிடைத்த வாய்ப்பு, ஏதேனும் வழியில் பறிபோய் விட வும் கூடும் அந்த அளவுக்கு அந்தப் பகுதி வியாபாரி களிடம், முத்துமாணிக்கத்துக்குச் செல்வாக்கு இருந்தது.

நன்றியற்றவனாக இருக்கவும் மனமில்லாததாலேயே, மகாலட்சுமியின் நடமாட்டங்களை, அவன் சற்று உன்னிப்பாகக் கவனித்தான் என்று சொல்லலாம்.

பெருமையாகக் காலையில் காரில் கூட்டிப் போய்க் கல்லூரியில் இறக்கி விட்டாலும், மற்ற சமயங்களில் முத்து மாணிக்கத்துக்கு கார் எப்போது வேண்டுமானாலும் தேவைப்படக்கூடும் என்பதால், அவள் வீட்டுக்குத் திரும்பி வருவது பஸ்ஸில்தான்.

இதைக் கண்டுபிடித்த மனோரஞ்சன், விரைவி லேயே ஒரு நாள், மகாலட்சுமி கல்லூரியிலிருந்து திரும்பி வரும் வழியில் காத்து நின்று, அவளுக்கு நன்றி கூறினான்.

''உங்கள் பேச்சுத் திறமை வாங்கித் தந்த வெற்றி அது'' என்று அந்தப் பெருமையை அவனுக்கே திருப்பி அளித்த மகாலட்சுமி. அத்தோடு நிறுத்தாமல், ''ஆனால், இந்தத் தொழிலில் ஏதேனும் லாபம் வருமா? குப்பைக் கூடைக்குப் போக வேண்டிய, வேண்டாத பொருட்களை வைத்து என்ன தொழில் செய்வீர்கள்?'' என்று கவலை யுடன் கேட்டாள்.



அவளது கவலையைப் போக்குவதற்காகவோ, அல்லது தனக்காக அவள் கவலைப்படுவதே பிடித்ததோ, அவன் பல் வரிசை தெரிய அழகாக நகைத்தான். ''தம் பிடிக்குத் தம்பிடி என்பார்கள். அதாவது நூறு சதவீதம் லாபம். இதில்தான் கிடைக்கும்! சரியான தொடர்புகள் வேண்டும், அவ்வளவுதான். கொஞ்ச நாளில் நான் எவ் வளவு உயரப் பறக்கப் போகிறேன் என்று பார்க்கத்தானே, போகிறாய்?''

ஆனால், அவள் முத்துமாணிக்கத்துடைய மகள் அல்லவா? அவ்வளவு எளிதாக சமாதானம் அடையாமல், ''அப்படி லாபம் வந்தால் அந்தப் பெருமாள், இதை ஏன் விட்டு விட்டுப் போகிறார்?'' என்று மறுபடியும் வினவி னாள்.

''பெருமாள் அதில் நிறையச் சம்பாதித்து விட்டார், மகாலட்சுமி. லேசில் செலவும் செய்ய மாட்டார். மேன் ஷனில் இருந்து கொண்டு, சிக்கனமாக வாழ்ந்து, அவர் சேமித்து அனுப்பிய பணத்தில் அவருடைய பெற்றோர் நிறைய வயல்கள் வாங்கியிருக்கிறார்கள். இப்போது அதைப் பார்த்துப் பராமரிக்க ஆள் தேவையாகி விட்டது. மனைவியும், பிரிந்திருந்து சம்பாதித்தது போதும் என்று வரச் சொல்லி விட்டாள். சரிதான் என்று, காதல் மனைவி யின் கடைக்கண் வீச்சிலே, அவர் கிராமத்துப் பண்ணை யாராகப் போய்விட, அடியேனுக்கு அடித்தது, அதிர்ஷ்டம்!'' என்று மனோரஞ்சன் சொன்ன தினுசில், மகாவும் கவலையகன்று கலகலத்துச் சிரித்தாள்.

விஷயம் இத்தோடு முடிந்திருந்தால், பிரச்சினையே நேர்ந்திராது.

ஆனால், இந்தத் தொழிலின் மூலம் கிடைத்த பொருளா தார வெற்றியினால் பைக் வாங்கியபோது, இந்த

வெற்றிக்குரிய அடிப்படைக் காரணமான மகாலட்சுமி யிடம், அதைக் காட்டாதிருக்க, அவனுக்கு மனம் வர வில்லை.

வீட்டை விடக் கல்லூரிக்குப் போய் அவளைச் சந் திப்பது எளிதாக இருக்கவே, பைக்கை ஓட்டிக்கொண்டு போய், அவளை வியக்க வைத்தான்.

வியப்போடு, அவளுக்கு மகிழ்ச்சியும் உண்டாயிற்று!

இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடாமல் இருப்பது எப் படி? இருவருமாகக் கல்லூரி அருகில் இருந்த பார்லரில், ஐஸ்க்ரீம் வாங்கிச் சாப்பிட்டனர்.

இடையில் ஒரு நாள், மனோரஞ்சன் அவர்கள் வீட் டுக்கே வந்து நின்றான்.

உள்ளூர உதைப்புடன் மகாலட்சுமி என்னவென்று கேட்டால், கம்ப்யூட்டர் ரிப்பேர் பண்ண, அப்பா அனுப்பிய ஆள் என்று தங்கை வந்து, அவனைக் கம்ப்யூட்டர் இருக்குமிடம் கூட்டிப் போனாள்.

மகாலட்சுமி சந்தேகமாகப் பார்த்தபோது, அவன், தனது விசிட்டிங் கார்டை எடுத்துக் காட்டினான்.

அதில், அவனது பிசிஏ பட்டத்தைப் பார்த்ததும், மகா வுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

கூடவே அவளது ஆச்சரியத்தைப் பார்த்துவிட்டு புருவம் உயர்த்தினான் மனோ.

செல்லில் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்த செல்வலட்சுமியிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு ''என்ன? நம்பவே முடியவில்லை போல?'' என்றான் கிண்டலாக.



''அதில்லை...'' என்று அவனது மனம் வருந்தாமல் சொல்லும் விதம் அறியாமல் அவள் இழுக்க, அவனே குறுக்கிட்டுத் தொடர்ந்தான்.

''இதுபோல நாகரீகப் படிப்பு படித்துவிட்டு, வேஸ்ட் பொருள் எடுத்துப் பிரித்துக் கொண்டிருக்கிறேனே என்று இருக்கிறதா? எம்சிஏக்களே மலிந்து விட்டார்கள், பிசிஏ எந்த மட்டும்? அத்தோடு, செய்யும் தொழிலே தெய்வம், மகாலட்சுமி நம்மை உயர்த்துகிற தொழில் எதுவானாலும், அந்தத் தொழில்தான், நமக்குச் செல்வம் தருகிற மகா லட்சுமி. மகாலட்சுமிக்கு மரியாதை தந்துதானே ஆக வேண்டும்?''

வீடியோ கேமில் முழுமையாக ஆழ்ந்திருந்த செல்வ லட்சுமியை ஓரக்கண்ணால் கண்காணித்தபடி மனோ ரஞ்சன் பேசிய விதமும், வார்த்தைகளும், மகாலட்சுமிக்கு சிரிப்பு மூட்டின.

சிரிப்போடு, இன்னொன்றும்,

கிளர்ச்சியுற்று, ''மரியாதை மட்டும்தானா?'' என்று தன்னை மீறி கேட்டுவிட்டு, சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

சிலேடை பேசி, அவளைத் தூண்டி விட்டவன் அவனே என்றாலும், அவளைவிட, அவனுக்குக் கட்டுப்பாடு இருந்தது போலும்.

கண்கள் பளபளக்க ஏதோ சொல்லத் தொடங்கியவன், சட்டென வாயை மூடிக் கொண்டு, கம்ப்யூட்டரைச் சரிப்படுத்தும் வேலையில் ஈடுபட்டான்.

மனோரஞ்சன் வேலையை முடித்துக்கொண்டு கிளம் பும்போது, முத்துமாணிக்கமும் வந்து சேர்ந்தார். மனோ

ரஞ்சனைப் பார்த்ததும் ''ஓகோ! காவேரி மேன்ஷன் தம்பி என்றதும், உன்னைத்தானா? பரவாயில்லை. வரவுக்கும் செலவுக்கும் கட்டி வர வேண்டும் என்றால், இப்படி நாலு வேலை தெரிந்து வைத்திருந்தால்தான் முடியும். கடை மிஷினிலேயும், ஏதோ தகராறு என்றார்கள். அதையும் முடித்துக் கொடுத்துவிட்டுக் கூலியை வாங்கிக் கொள்'' என்று விட்டு உள்ளே போனார்.

கோபமாகத் தந்தையின் முதுகை வெறித்தாள் மகா லட்சுமி.

''ஏய்ய், ஈஸியா! அவருக்குத் தெரிந்த விதமாக அவர் பேசுகிறார்.வேலை கூலி, வியாபாரம் என்று, அவரது வட்டம் அது'' என்று சமாதானப்படுத்தினான் மனோ ரஞ்சன்.

அவரது பேச்சுக்காக மட்டும் அவள் எரிச்சல்பட வில்லை.

கடைக்குப் போனால், உரிய பணமும் கிடைக்காது. அது உடனேயும் கிடைக்காது. வேண்டும் என்றே இழுத் தடிப்பார். அவரே சொன்னது போல, நாலு வேலை செய்து சம்பாதிக்கிறவனுக்கு, நேரம் எவ்வளவு பொன்னானது என்கிற யோசனையே வராது! வந்தாலும் அதற்கு மதிப் புக் கொடுக்க மாட்டார்!

என்னவோ, அவன்தான் கடன் பட்ட மாதிரி காட்டிக் கொண்டு, பிச்சை போடுகிற மாதிரி, பணத்தை எடுத்துப் போடுவார்!

இதெல்லாம் மனோரஞ்சனை வருத்தப்படுத்தி விடக் கூடாதே என்பதுதான் அவளது கவலை!

ஆனால், மனோரஞ்சன் அதையெல்லாம் பெரிதாக நினைத்தாகத் தோன்றவில்லை. ''வாழ்க்கையில் முன்னேற



வேண்டும் என்றால், இது போன்ற பல இடையூறுகளைச் சந்தித்துதான் ஆக வேண்டும்'' என்று இலகுவாகவே எடுத்துக் கொண்டான்.

''சந்தித்து வெற்றி கொள்ளவும் பழக வேண்டும்மா'' என்றவன், கடை கம்ப்யூட்டருக்கு ஏதோ வாங்க நேரும் போலக் காட்டி வீட்டில் செய்த வேலைக்குப் பணத்தை வசூல் செய்த பிறகே, அடுத்த வேலையைத் தொட்டான். அதையும் விரைந்து முடிக்காமல், சாப்பாட்டு நேரம் வரை இழுத்து, அந்த பேட்டாவும் கேட்டு, கடைசியாகக் கொஞ்சம் குறைப்பது போலக் காட்டி பணத்தை வாங்கிக் கொண்டே போனான்.

இதை, அவன் கல்லூரிப் பக்கம் வந்து சொன்னபோது, மகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பாவிடம் இவ் வளவு இலகுவாகப் பணத்தை வாங்கி விட்டானா? அவர், கல்லிலே நார் உரிக்கிறவர் ஆயிற்றே!

ஆனால், ''கூடக் கொஞ்ச நேரம் நிற்க வைத்தால், இன்னொரு பேட்டா போட்டு, மொத்தப் பணத்துக்கும் மேலே கேட்பானோ என்று தோன்றியதோ, பேசிக் கொண்டு இருக்க விடாமல், உடனே பணத்தைக் கொடுத்து விரட்டி விட்டேன்'' என்று தந்தை வீட்டில் வந்து பெருமை பேசியபோது, சிரிப்பை அடக்குவது, அவளுக்குக் கடின மாக இருந்தது.

பஸ்சைத் தவற விடுவதும், கல்லூரி ஆசிரியர்கள் ஸ்பெஷல் கிளாஸ் வைப்பதும், அடிக்கடி நடந்தது.

''என்னப்பா இது? போன வருஷம் நீ ப்ளஸ் டூ படித்த போது அதிகப்படியாக 'கிளாஸ்' வைத்தது போல அல் லவா, இருக்கிறது!'' என்று குமுதவல்லி ஓரிரு முறை அங்கலாய்த்தாள். ஆனால், அவள் பேச்சை யார் மதிப்பது?

''என்றைக்காவது, கல்லூரி வாசல்படியை மிதித்திருந்தால் அல்லவா தெரியும்? குடும்பமே கைநாட்டு!'' என்று முத்துமாணிக்கம் இளக்காரம் செய்தபோது, மகாலட்சுமிக்கு உள்ளூர சற்று வருத்தம்தான்.

ஆனால், அநியாயமாக அம்மா மட்டம் தட்டப்படுகிறாளே என்று தோன்றியபோதும், தன் புதிய சுகத்தை விட்டுவிட, மகாவின் மனம் ஒப்பவில்லை.

எனவே, மனோரஞ்சனும் மகாலட்சுமியும் பலமுறை தனியாகச் சந்தித்தார்கள்.

ஆனால் ஒன்று. இருவருமே வரம்பு மீறிப் பழக ஏற்படவில்லை. ஆண் பெண் உறவில் ஒழுக்கத்துக்கு மரியாதை கொடுத்து வளர்ந்த விதமாக இருக்கலாம். சிறு வயதிலிருந்து வளரும்போதே அறிந்த சமூகச் சட்ட திட்டங்கள் எல்லாமாக ஒருவருக்கு ஒருவர் என்ற எண்ணத்தை வளர்த்து விட்டனவே தவிர, அந்தச் சட்டத் திட்டங்களை மீறும் எண்ணம், இருவருக்குமே தோன்றவில்லை.

கூடவே, அவனுக்குத் தொழிலைக் கவனிக்கும் பொறுப்பும் இருந்தது. இப்போது, உதவிக்கு ஆள் வைத்திருந்தபோதும், ஒரேடியாக வேலையாளிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு, அவளோடு நேரத்தை கழிக்க அவனுக்கு மனமில்லை.

வியாபாரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்த மகாலட்சுமிக்கும், அது விருப்பமில்லை. அப்படி விட்டால் உதவிக்கு வைத்த ஆள், விரைவிலேயே போட்டித் தொழில் தொடங்கி விடுவான் என்று அறிந்திருந்ததாலேயே, அவனது கருத்தோடு, அவளும் ஒத்துப் போனாள்.



ஆனாலும், அவர்கள் வாரத்துக்கு ஓரிரு முறையேனும் சந்தித்தார்கள், பேசினார்கள், ஐஸ்க்ரீம் ரசித்தார்கள், அவரவர் இடத்துக்குப் பிரிந்து சென்றார்கள்.

திருமணத்தைப் பற்றி, மனோரஞ்சன் ஒரு தரம் பேசினான். அவன் தொழிலில் சாதிக்க வேண்டுமாம். நிறையப் பணம் சம்பாதித்த பிறகு, திருமணமாம். பணத்தோடு நல்ல நிலையில் வந்து பெண் கேட்டால்தான், அவனுக்குப் பெருமையாம்!

அவளுக்கும் அதுதானே, பெருமை?

இன்றைய நிலையில் மனோரஞ்சன் வந்து பெண் கேட்டால், முத்துமாணிக்கம் நிச்சயமாக மறுப்பார். அத்தோடு நிறுத்தாமல், வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எள்ளி நகையாடுவார். சுற்றுச் சூழலில், அவளுடைய அன்பனுக்குப் பெரும் தலைகுனிவாக அல்லவா, ஆகிவிடும். பெருமைக்குப் பதில், இந்த சிறுமை அவனுக்குத் தேவையா?

இதிலும் இருவரும் ஒத்த கருத்தோடு இருந்தபோதுதான், அதை மாற்றும் தேவை வந்தது. ஆற்று நீர் ஓட்டம் போல அழகாகச் சென்று கொண்டிருந்த வாழ்வு, தலைகீழாகப் புரண்டது!

முத்துமாணிக்கம், குமுதவல்லி தம்பதியரின் இருபதாவது திருமண நாளை, வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடந்தன.

மகளுக்கும் மருமகனுக்கும் கிராமத்துத் தாத்தாவும் பாட்டியும் வாங்கி வந்த பட்டுச் சேலை வேஷ்டியின் ஜரிகைப் பளபளப்பைப் பார்க்கையில், மகாலட்சுமிக்கு மயக்கம் வந்தது! விலையும் அப்படித்தான். ஒரு வயலை விற்றுப் பணம் எடுத்து வந்தார்களாம்!

எல்லாம் முத்துமாணிக்கத்தின் விருப்பப்படிதான்!

தன் பணப் பெருமையைப் பறைசாற்ற எண்ணிய முத்துமாணிக்கம். இதை ஒரு பொது விழாவாக்கித் தொழில்துறை பிரமுகர்கள் பலரையும் விருந்துண்ண வீட்டுக்கு அழைத்திருந்தார்.

விழா ஏற்பாடுகள் தடபுடலாக நடப்பதைக் கண்டு, உள்ளூர ஒரு சிறு அலுப்புடன் ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்த மகாலட்சுமி! ''வந்து பெண்ணை நேரில் பார்த்து விட்டு, அப்புறம் மற்ற விஷயம் பேசச் சொல்லுப்பா! பார்த்தாலே மயங்கி விழுந்து விடுவார்கள்! பேருக்கேற்ற படி பார்வைக்கும், அவள் மகாலட்சுமியேதான் என்று தெரியுமல்லவா?'' என்று தந்தையின் கனத்த குரல் கூறுவதைக் கேட்டு, அப்படியே உறைந்து போனாள்.

## – 5 –



தந்தையின் வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாத அளவுககு, மகாலட்சுமி முட்டாள் அல்ல.

ஆனால், பள்ளிச் சிறுமி என்ற பெயர் நீங்கி, அவள் கல்லூரியில் சேர்ந்து, ஓர் ஆண்டுகூட முழுதாக முடிய வில்லை. இன்னமும் அவள் முதலாம் ஆண்டு மாணவி தான்! பதினெட்டாம் பிறந்த நாள் கூட, சமீபத்தில்தான் முடிந்தது. இந்த சிறு வயதில், அவளுக்குத் திருமணமா?

அவளுடைய தாயாருக்குக்கூட இருபது வயதில்தான் திருமணம் ஆனதாகக் கேட்டிருக்கிறாள். அடுத்த தலை முறை, அவளுக்குப் பதினெட்டு வயதிலா?

சீச்சீ என்று மனதுள் இகழும்போதே, மனோரஞ்சனின் முகம், மகாலட்சுமியின் நினைவில் தோன்றியது.



பதினெட்டு வயதில் காதல் வேண்டும். கல்யாணம் மட்டும் வெறுப்பாகுமா?

இதே திருமணம், மனோவோடு என்றால், எரிச்சல் படுவாளா? அருவருப்பாகத்தான் நினைப்பாளா?

ஆனால் அவனோடும், அப்போதே மணமுடித்துவிட வேண்டும் என்று அவர்கள் இருவருமே எண்ணவில் லையே!

மனோரஞ்சன் தொழிலில் வென்று, அவள் படித்து முடித்து, அதன் பிறகுதானே திருமணம் என்றுதானே, பேசிக் கொண்டார்கள்!

ஆனால்... திருமணம் செய்துதான் ஆக வேண்டும் என்றால், எப்போது என்றாலும், அது மனோரஞ்சனோடு தான்! அதில் மாற்றுக் கிடையாது!

மனதில் ஒரு நிச்சயத்தோடு, மகாலட்சுமி தாயைத் தேடிச் சென்றாள்.

''அம்மா...'' என்று தொடங்கியவளுக்கு, மேலே பேச வாயெழாது சற்று தடுமாறினாள்.

அந்த வீட்டில் இதுபோல விஷயங்களைப் பிள்ளை கள் பெற்றோரிடம் சகஜமாகப் பேசிப் பழக்கம் கிடை யாது. எனவே, மகாலட்சுமி தடுமாற்றத்துடன் நிற்க, காரணத்தைத் தவறாக ஊகித்துக் குமுதவல்லி விசா ரித்தாள். ''என்னம்மா, தைத்து வந்த சட்டையின் அளவு சரியாக இல்லையா? இல்லையென்றால், காரை எடுத் துப்போய், உடனேயே சரி செய்யச் சொல்லிக் கொடுத்து விட்டு வா. பட்டுச் சேலை பிளவுஸ் சரியாக அமைய வில்லை என்றால், சேலையை பார்க்க நன்றாக இராது போய்விடும். சேலைதான் கட்ட வேண்டும் என்று அப்பா...''

பெற்றவள் மேலே சொன்னது எதுவும், மகாலட்சுமி யின் மனதில் பதியவில்லை.

தனக்கு எதற்கு இந்த விலையில் சேலை என்று, சேலை வாங்கும்போது அவளது மனதில் ஓடிய எண்ணத் துக்கு, இப்போது பதில் கிடைத்திருக்கிறது!

அதை மனோரஞ்சனிடம் சொன்னதும், ''உன் அப்பா வின் பந்தாத்தனம் தெரிந்ததுதானே!'' என்று அவன் கூறியதும் கூட, அவளுக்கு நினைவு வந்தது.

இது வெறும் பந்தா அல்ல! காரியகாரப் பந்தா! பெண் ணைப் பார்க்க வருகிறவர்களை, அப்படியே மடக்கிப் போட்டு விடுகிற திட்டம்! இனிச் சும்மா இருப்பது சரி யல்ல!

தயக்கம் மறைந்துவிட ''அதற்குள் எனக்குத் திருமணம் பேசுகிறீர்களா, அம்மா?'' என்று தாயிடம் நேரே கேட் டாள் மகாலட்சுமி.

குமுதவல்லிக்குப் பயங்கர அதிர்ச்சியாகி விட்டது போல! பேயைக் கண்டது போல பேந்த விழித்து, வாயைத் திறந்து, திறந்து மூடினாளே தவிர, சற்று நேரம் அவளுக்குப் பேச்சே வரவில்லை!

புரியாமல் ''என்னம்மா?'' என்று மகாலட்சுமி கேட்ட பிறகே சுய உணர்வு வந்தவளைப் போல, அவசரமாக மகளின் வாயைப் பொத்தினாள் அன்னை.

வேகமாகச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, எழுந்து, மகாவைக் கைப்பிடியாக அழைத்துப்போய், அறைக்குள் சென்று கதவைச் சாத்தினாள்.

ஒன்றும் புரியாமல் மறுபடியும் ''என்னம்மா?'' என் றாள் பெண்.



மூச்சு வாங்கிக் கொண்டு ''நல்லவேளை, அங்கே வேறு யாரும் இல்லை! இருந்திருந்தால், பெண்ணை வளர்த்திருக்கிற லட்சணத்தைப் பார்! என்று என்னைக் குத்திப் பிடுங்கியிருப்பார்கள்!'' என்று ஒரு தினுசான ஆறுதலோடு கூறினாள் குமுதவல்லி.

''ச்சு! என்ன என்று முதலில் சொல்லுங்கள்!'' என்றாள் பெண் அலுப்புடன்.

''என்னவா? உன் கல்யாணம் பற்றி, நீயே கேட் பாயாடி? அப்படி வெட்கம் கெட்ட பெண்ணாகவா, உன்னை நான் வளர்த்தேன்?'' என்று சினம் காட்டினாள் அன்னை.

மகாலட்சுமிக்கு இன்னமும் தலைகால் புரியாத நிலை தான்.

காலையிலிருந்து இரவு வரை, டீ.வி.யில் சீரியல் ஓடுகிறது! வி.சி.டி.யில் சினிமா வேறு! எல்லாம் காத லும் கல்யாணங்களும்தான். எதைப் பார்க்கவும், வீட்டில் தடை கிடையாது! அவள் மட்டும் திருமணம் பற்றிப் பேசக் கூடாதாமா?

அப்படியா என்று கேட்டாலே, வெட்கம் கெட்ட பெண் ணாகி விடுவாளா?

ஆத்திரத்துடன் எண்ணியவள், உள்ளூர அதிரவும் செய் தாள்.

திருமணத்தைப் பற்றிப் பேசவே கூடாது என்கிற வர்கள், மனோவை மணப்பதாகச் சொன்னால், என்ன கூறுவார்கள்! ஆனால் அதற்காக?

''என்னம்மா, என் கல்யாணத்தைப் பற்றி, நான் கேட்ட தில் என்ன தப்பு?'' என்று எதிர்த்துக் கேட்டாள்.

''தப்புதானடி!'' என்றாள் தாயார் ''நம் குடும்பங்களில், பெண்ணுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையைத் தேடித் திருமணம் செய்து வைப்பது, பெற்றோரின் முக்கியமாக அப்பாவின் பொறுப்பு! அதை, அப்படியே ஏற்றுக் கொள்வது, மகளின் கடமை! தன் திருமணத்தைப் பற்றித் தானே பேசுவது நல்ல பெண்ணுக்கு அடையாள மில்லை! அலைகிறாள் என்று கூடச் சொல்லுவார்கள். அதனாலே, இந்தப் பொறுப்பையெல்லாம் அப்பாவிடம் விட்டுவிட்டு, தினுசு தினுசாக நகை நட்டைப் போட்டு அலங்கரித்துக் கொண்டு, டீ.வி. வீடியோ எதையாவது பார்த்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிரு! போம்மா. யார் காதிலும் விழும்படியாக, இனியொரு தடவை, இதுபோலப் பேசிவிடாதே!''

அதெப்படி பேசாமல் இருப்பது? அப்படி இருந்தால், எவனோ ஒரு குரங்கனை அல்லவா, மணக்க வேண்டியிருக்கும்! ஊகூம். அதெல்லாம் முடியாது! என்னவோ, அவர்கள் காலத்துப் பழக்க வழக்கங்களே இன்னமும் நடைமுறையில் இருப்பதாக அம்மாவுக்கு நினைப்பு! காலம் மாறிவிட்டது என்று தெரியவில்லை!

''என்னம்மா நீங்கள்? உங்கள் தலைமுறை அப்படியே இருப்பதாக நினைத்துக்கொண்டு, நீங்கள் பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. காலம் மாறிவிட்டது. அதனால்...'' என்றவளின் வாய் மீது, மறுபடியும் கை வைத்து அடக்கினாள் குமுதவல்லி.

''ஒருபோதும் மாறாது!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியவாறே கையை எடுத்தவள் தொடர்ந்து பேசினாள். ''நம் வியாபாரக் குடும்பங்களில், பல்லாங்குழிக்குப் பதிலாக டீ.வி. வந்து உட்கார்ந்திருக்குமே தவிர,



அடிப்படை புத்தி மட்டும் மாறவே மாறாது! அதனால் நீயும் வாயை மூடிக் கொண்டு சும்மா இரு! நீ என்னிடம் இப்படிப் பேசியதை அப்பா மட்டும் கேட்டிருந்தால், வெட்டிப் பொலி போட்டு விடுவார்... அதாவது, என்னை!'' என்று அச்சத்துடன் முடித்தாள் அன்னை!

தந்தை செய்யக்கூடியவர்தான்! அதிலும் மனைவி என்றால், சும்மாவே அவருக்கு இளக்காரம்! தேவையோ, நியாயமோ இல்லாத போதும், மறுத்துப் பேச வாயற்று, மகளுக்குச் சேலை வாங்குவதற்கு, வயலை விற்றுப் பணம் கொண்டு வந்து தருகிற வீர மனிதர் பெற்ற பெண் ஆயிற்றே! இவளுக்கு முதுகெலும்பு எப்படி இருக்கும்?

இல்லை. இதில் தாயை நம்பிப் பயனில்லை. திருமணமாகி இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் கணவனுக்காகப் பெற்றவரைக் கசக்கிப் பிழியத் தயாராக இருப்பவள், மகளுக்காக மட்டும் என்ன செய்துவிடப் போகிறாள்? விரல் அசைக்கக்கூட தைரியம் இராது!

சொல்லப் போனால், அன்னையை நம்புவது ஆபத்தும் கூட.

ஒன்று, கட்டினவனிடம் உள்ள பயத்தில் அவரிடமே ஏதாவது உளறிவிடக் கூடும்.

அத்தோடு, மகளுக்கு நல்லது என்று எண்ணிக் கணவனின் திட்டத்துக்குத் துணை போகவும் எண்ணலாம்.

முக்கியமாக, பிரச்சினை வரும்போது... கட்டாயம் வரத்தான் செய்யும். அப்போது, மகளின் திட்டம் பற்றி எதுவும் அறியாத நிலை, கணவரின் கோபத்திலிருந்து குமுதவல்லியைக் காப்பாற்றும்.

இவ்வளவு யோசித்துவிட்டு மகாலட்சுமி, மனோரஞ்சனிடம் பேசினாள்.

அவனால் முதலில் நம்ப முடியவில்லை. ''இந்த ஆண்டுதான் கல்லூரியில் சேர்த்துவிட்டு, கூடவே உன் அப்பா கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்வாரா? ஒரு வேளை, கல்சுரல் மாதிரி, சமையல் தையல் என்று வகுப்புகளில் சேர்ந்தாலும், அந்த எண்ணம் இருப்பதாக நினைக்கலாம்... இப்போது... ஒத்துக் கொள்ள முடிய வில்லையே!'' என்றான் அவன்.

''அதிலெல்லாம் சேர்த்தால், அப்புறம் என் மகள் கல்லூரியில் படிக்கிறாள் என்று பெருமை பேசுவது எப்படி? உங்களுக்கு இன்னும் என் அப்பாவைத் தெரியவில்லையா? இந்தப் படிப்பு வெறும் அலங்கார நோக்கோடு தலையில் பூ வைக்கிற மாதிரி. எப்போது வேண்டுமானாலும் எடுத்து வீசி விடலாம்! தமிழ்க்கொடி வீட்டில் கூட, அதுதான் கடைத் தெருவில் மூன்றாவது கடை... கனி ஸ்டீல் கடைக்காரர் மகளுக்குப் பண்ணினார்களே, நினைவில்லையா?'' என்றாள் அவள் கசப்புடன்.

வகுப்பில் நன்றாக படிக்கிற பெண்களில் ஒருத்தி என்பதால், படிப்பு அவளுக்குப் பிடித்தமே. இடையில் விடுவது, இழப்பாகவே தோன்றியது என்னதான் காதல் என்றாலும், படிப்பை முடித்த பிறகுதான் திருமணம் என்பதுதானே, அவர்களது கனவு கூட!

தமிழ்க்கொடி சிரித்த முகமாக வந்து அழைப்பிதழ் கொடுத்தபோது, அவளுக்கு உள்ளூர ஆச்சரியம்தான்!

யோசித்துவிட்டு, மனோரஞ்சனும் தலையாட்டினான். தொடர்ந்து ''நீ சொல்வது உண்மைதான், மகா. ஆனால் நீ பிடிவாதமாக மறுத்தால், முத்துமாணிக்கம் சார் என்ன பண்ண முடியும்? உன் விருப்பத்துக்கு விரோதமாக உன்னைக் கட்டாயப்படுத்த முடியாதுதானே?'' என்று கேட்டான்.



என்ன இப்படிப் புரியாமல் பேசுகிறானே என்று மகாலட்சுமி அன்று நினைத்தாள். ஆனால், அவனுடைய பெற்றோரைப் பற்றி அறிந்த பிறகு, இன்று வேறு தோன்றியது.

தந்தையின் கட்டாயத்தினால், அவள் வேறு ஒருவனுக்குக் கழுத்தை நீட்டக் கூட நேரிடலாம் என்று, அவனுக்குத் தோன்றவே இல்லை!

அவள் எடுத்துச் சொன்னபோதும் மனோ அதை ஒப்புக் கொள்ளவில்லை. ''நீ உறுதியாக இருந்தால், அவரால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று சொன்னான்.

''நான் உறுதியாகத்தான் இருக்கிறேன், ரஞ்சன். ஆனால் வெறும் வாய் வார்த்தையில் சொன்னால், அவருக்குப் புரியாது. ஏற்க மாட்டார். சின்னப் பெண் படிக்கிற ஆசையில் உளறுகிறாள் என்று, அறைக்குள் போட்டு சாத்திவிட்டு, திருமணத்தை நிச்சயமே செய்து விடுவார். ஒன்று சொன்னால், அவருக்குச் சான்று காட்ட வேண்டும். எனக்கும் ஒரு... ஓர் ஆதாரம்... பற்றிக் கொள்ள ஒரு துணை வேண்டும். அதனால் நீங்களும் அங்கே வாருங்கள்'' என்று அவனிடம் கேட்டாள்.

திகைப்புற்று ''நானா? எனக்கு அழைப்பே இல்லையே!'' என்றான் மனோரஞ்சன்.

''நான் அழைக்கிறேனே, போதாதா?'' என்றபோது, அவளது குரலில் சுதி ஏறியிருந்தது.

நிலைமையின் தீவிரம் என்ன, அவள் எவ்வளவு கதி கலங்கிப் போயிருக்கிறாள் என்று அவனுக்குப் புரியவே இல்லையே என்றிருந்தது. மகாலட்சுமிக்கு.

அவளுடைய குடும்ப விவகாரத்தில் மற்றது அவனுக்குப் புரிந்ததோ என்னவோ. அவளது கோபம் புரிந்துவிட, ''ஈஸி மகா! உனக்காக நான் என்னதான் செய்ய மாட்டேன்? ஏதோ பெரி பெரிய தலைகளையெல்லாம் அழைத்திருப்பதாகக் கேள்வி. சந்தடி சாக்கில் ஓசிச் சாப்பாட்டுக்கு வந்ததாக, முத்துமாணிக்கம் சார் தப்பாக எண்ணுவாரே என்றுதான் தயங்கினேன். அதுவும், இன்னமும் நான் நன்றாகக் கால் ஊன்றியிராத இன்றைய நிலையில்... சரி, சரி. வருகிறேன். எப்படியும், உன் தரிசனம், அதுவும் அலங்கார தரிசனம் கிடைக்கும் அல்லவா? கட்டாயம் வருகிறேன்!'' என்றான் அவன் சமாதானமாக.

மெய்யாகவே, அவளுக்குச் சமாதானமாகி விட்டது.

அவளுடைய தந்தை, மனோரஞ்சனை அவ்வளவு சரியாக நடத்த மாட்டார் என்கிற கவலை அவளுக்கும் இருந்தது.

இன்னும் சில ஆண்டுகள் கழித்து, அவன் தொழிலில் ஜெயித்து, நிறையப் பணமும் சம்பாதித்து விட்டால், 'வாங்க தம்பி' என்று பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொள்வார் என்பதாலேயே, திருமணம் பற்றி மகாலட்சுமிக்கு அவசரமும் இல்லாதிருந்தது.

ஆனால், அந்தச் சில ஆண்டுகால அவகாசம் இல்லாது போகுமானால், இந்தக் கஷ்டம் பட்டுத்தான் ஆக வேண்டும்!

காதல் என்றால் சும்மாவா? 'காற்றில் ஏறி, அவ்விண்ணையும் சாடுவார், காதற் பெண்டிர் கடைக்கண் பணியிலே' என்று பாரதியார் எழுதவில்லை?

இப்போது அவளுடைய தந்தையின் அலட்சியத்தை மனோரஞ்சன் தாங்கிக் கொள்ள வேண்டும். அவ்வளவே.



மற்றதைத் தேவைப்பட்டால், தேவைப்படும்போது அவள் பார்த்துக் கொள்வாள்!

கடைக்கண் என்றால்... தலையை லேசாகத் திருப்பி, ஓரக் கண்ணால் அவனை ஒயிலாகப் பார்த்து, அவள் புன்னகை செய்ய, மெய்யாகவே அவன் கிறங்கிப் போனான்.

''ஏ...ய், இப்படிப் பார்க்காதே! அப்புறம் நல்ல நல்ல தீர்மானங்கள் எல்லாம் மறந்து போகக் கூடும்!'' என்று சற்று கெஞ்சலும், கொஞ்சலுமாக அவன் கூறிய விதத்தில், அவளுக்கு மெய் சிலிர்த்துப் போயிற்று!

அவனிடம், அவளுக்கு இவ்வளவு ஆளுமை இருக்கிறதா? அவனுக்கு அவளிடமும்தான்! அதையும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அப்போது மட்டும் அவர்கள் இருவரில் யார் தொடங்கியிருந்தாலும், அவர் இழுத்த இழுப்புக்கு அடுத்தவர் போய்த்தான் இருப்பார்கள்! மறுக்க முடியாத உண்மை இது.

எல்லைக்கோடு, எல்லைக்கோடு என்கிறார்களே, அது அந்த இடத்தில்தானா? அதைத் தாண்டாமல் நின்றுவிடும் திடம் இருவருக்குமே இருந்ததோ? மீறித் தாண்டியவர்களின் வாழ்வுதான் பெரும்பாலும் கேள்விக்குறியாகி விடுகிறதோ?

ஏதேதோ எண்ணியவாறு, ஓர் இனிய உணர்ச்சிப் பரவசத்தில், அன்றைய தினம் இரவு முழுவதும் விழித்துக் கிடந்தது, இன்றும் மகாலட்சுமிக்கு அப்படியே நினைவு வந்தது!

விழித்துக் கிடந்தது மட்டுமல்ல. எல்லா வகைச் சிறப்புகளோடும், மனமொத்த கணவன் மனைவியாக, எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக அவர்கள் வாழப்

போகும் வாழ்க்கை பற்றி, என்னென்னவோ கற்பனைகள் செய்தாளே, அவைகளும் கூடத்தான்! இப்படித் திரும்பிப் பாராமல் போகக் கூடும் என்று, ஒருதரம் நினைத்துக் கூடப் பார்க்கத் தோன்றவில்லையே!

இப்படி என்றால் அப்படி, இது போல என்றால் இன்னொரு விதம் என்று ஆயிரம் விதமாகக் கற்பனையில் கணக்கிட்டுக் கோட்டை கட்டியவள், அவளுடைய தந்தையைப் பற்றி கணித்தது அல்லவா, தப்பாகிப் போய் விட்டது!

மிகப் பெரிய தப்புக் கணக்கு!

ஸீரோவை விடவும் கீழாக, மைனசில் அவளைக் கொண்டு போய் நிறுத்திவிட்ட தப்புக் கணக்கு!

இப்படி, இப்படிச் செய்தால், வேறு வழியின்றி தந்தை கட்டுப்பட்டுத்தானே தீரவேண்டும் என்று, அப்பாவுக்கு மகளாகத் திட்டமிட்டது எல்லாமே, அவரது ஒரே அடியில் சுக்கு நூறாக அல்லவா, நொறுங்கிப் போயிற்று!

காரணம், அவளது தலைவிதியா? அல்லது தந்தையின் கெட்டிக்காரத்தனமா?

எதுவாக இருந்தாலும், விழாவன்று மாலையில் வருவதும், பரிசு கொடுப்பதும் கிட்டத்தட்ட முடிந்து, ஆங்காங்கே குழுக்களாக நிற்பதும், உட்காருவதுமாக இருந்த விருந்தினர் நடுவில் சந்தனக் கலர் சஃபாரி அணிந்து, எல்லோரையும் விட உயரமாகக் கன கம்பீரத்துடன் வந்து நின்ற மனோரஞ்சனைப் பார்க்கையில், பழைய கால சுயம்வரம் மாதிரி, ஒரு மாலையைத் தூக்கி அவன் கழுத்தில் போட்டுவிடலாமே என்று, மகாலட்சுமியின் மனமும் உடலும் ஒருங்கே துடித்தன!



அவனது கண்களும் அவள் மீதுதான் இருந்தன.

அடர் சிவப்பில், உடல் முழுவதும் ஜரிகைப் பொட்டுகள் நிறைந்த சேலையும், டிஷ்யூ சட்டையும், சிவப்பும் தங்கமுமாக நகைகளும், அவளை ரதியெனவே காட்டின.

அவனது பார்வையில் கன்னங்கள் சிவக்கத் திரும்பியவள், ஏதோ தோன்றத் தந்தையைத் திரும்பிப் பார்த்தாள்.

புருவத்தில் சுளிப்புடன், அவர் மனோரஞ்சனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

எங்கே அழகைக் கண்டாலும், ரசிக்கத் தெரிய வேண்டும்.

ஒருவன் நல்ல உடல்கட்டோடு, பொருத்தமான உடை அணிந்து ஆணழகனாக நின்றால், அதைப் பார்த்து மகிழ வேண்டும்.

அதைவிட்டு, உடல் பயிற்சியே இல்லாமல், தொப்பையும் தொந்தியுமாக சதை சளிந்து தொங்கும் என்னையும் அவனையும் ஒத்துப் பார்த்து வயிறெரியலாமா?

முத்துமாணிக்கம் அதைத்தான் செய்து கொண்டிருந்தார்!

சமயம் பார்த்து வீடியோக்காரர் அவர் பக்கம் திரும்பவும், அவசரமாக முகத்தை அப்பாவி நல்லவர் மாதிரி வைத்துக் கொண்டு, மனோரஞ்சனைக் கை காட்டி, அவர் பக்கம் அழைத்தார்.

சட்டென அவருக்குப் பின்புறமாகப் போய், வந்திருந்த பரிசுப் பொருட்களை அடுக்கி வைக்கிறவள் போல நின்று கொண்டு, மகாலட்சுமி நடப்பதைக் கவனித்தாள்.

அருகில் வந்து ''வாழ்த்துக்கள்!'' என்றுரைத்து, கையோடு கொண்டு வந்திருந்த பூச்செண்டை அவரிடம் நீட்டினான் மனோரஞ்சன்.

ஒரு கணம் தயங்கி, அவனை ஏற இறங்கப் பார்த்தார் அவர் ''என்னப்பா தம்பி, வெள்ளையும் சொள்ளையுமாக வந்திருக்கிறாய்? லாண்டரிக்காரனிடம் வாடகைக்கு வாங்கினாயா?'' என்று முதல் விஷத்தைக் கொட்டினார்.

எதிர்பார்த்தே வந்தவன் போல ''இல்லை சார், என்னுடையதுதான். எங்கேனும் நல்ல விழா நடந்தால், அணிவதற்கு என்று அம்மா வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள். பாருங்கள், அப்படி வாங்கி வைத்திருந்ததால்தானே, இன்று நல்லபடியாக அணிந்து வர முடிந்தது?'' என்று புன்னகையுடனேயே சொல்லி, முத்துமாணிக்கத்தின் வாயை அடைத்தான் அவன்.

ஆனால், முத்துமாணிக்கம் அப்படி யார் பேச்சிலும் மயங்கி விடுகிறவர் இல்லையே! பூங்கொத்தை வாங்குகிறவர் போல அவன் கையைப் பார்த்துவிட்டு ''ஐ, வாட்ச் வேறே வாங்கிக் கட்டியிருக்கிறாயே! பாரம்மா, சொல்லுவதைத் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. என்னவோ, நம்மை அண்டி வந்த பிள்ளை என்பதால் சொல்லுகிறேன், கேட்டுக் கொள். ஒரு தொழில் செய்து, வருமானம் வந்தால், உடனேயே அதை தாம் தூம் என்று இப்படிச் செலவழித்து விடக் கூடாது! லாபத்தைப் போலவே நஷ்டமும் வரும் பார், அந்தக் காலத்துக்காக சேமித்து வைக்க வேணும்! மழை பெய்து சாப்பாடுக்கே இல்லாமல் கஷ்டப்படுகிற காலத்துக்கு என்று, இந்த எறும்பு சேமித்து வைக்குமாமே! அதுபோல இன்றைக்கு பழைய துணி அணிந்தாலும் நாளைக்குச் சாப்பாட்டுக்கே இல்லாமல் போய் விடாது, பார்!'' என்று கன அக்கறை போல புத்தி சொன்னார் அவர்.



பின்னின்று கேட்டுக் கொண்டிருந்த மகாலட்சுமிக்கே ஒரு கணம் மூச்சு முட்டி விட்டது!

என்ன வக்கிரம்! எவ்வளவு வயிற்றெரிச்சல்!

லாபம் என்று மனோரஞ்சன் சந்தோஷப்பட்டு விடக் கூடாதாம். அவனுக்கு நஷ்டமும் கஷ்டமும் கட்டாயம் வருமாம்! சாப்பாட்டுக்கே வழியில்லாத கஷ்டம்!

அந்த நிலை கட்டாயம் வர வேண்டும் என்கிற ஆசையை, வெறியை எப்படிக் காட்டி விட்டார்!

ஆனால், இதையும் கூட எதிர்நோக்கியே வந்தவன் போன்று, மனோரஞ்சன் புன்னகை வாடாமலே ''நல்லதை விரும்பிப் பெரியவர்கள் சொல்வதை, நான் அலட்சியப்படுத்துவது கிடையாது, சார். அடுத்து எதையும் வாங்கும் போது, சேமிப்பையும் மனதில் வைத்துக் கொண்டு வாங்குகிறேன்'' என்று பதில் சொல்லிவிட்டு 'எப்படி' என்பதுபோல, மின் வெட்டாய் மகாலட்சுமியின் ஒரு பார்வையைச் செலுத்தியவாறே, மேடையை விட்டு இறங்கிச் சென்றான்.

உள்ளூரப் பெருமை பொங்கியது, அவளுக்கு! என்ன அருமையான பதில் கொடுத்து விட்டான்!

நஷ்டம் வராது, லாபம்தான் வரும். அதுவும் சேமிப்புக்கும் மேலேயே சம்பாதிப்பேன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டுப் போகிறானே! எவ்வளவு தன்னம்பிக்கை!

இப்படிப்பட்டவன், அவளிடம் மயங்கிப் போயிருக்கிறான்!

ஆனால், இந்தப் பெருமையெல்லாம் கிடுகிடுத்துப் போகும்படி, அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் நடக்கலாயின.

முதலாவது 'பட்டுப் பட்டாடை பூட்டி, பகட்டான கிரீடம் சூட்டி' என்று சொல்வார்கள், அது போலப் படாடோபமான அணிமணிகளுடன் ஒரு கூட்டம், அல்லது பெரிய குடும்பம் வாயிலைத் தாண்டி உள்ளே வந்தார்கள்.

மனைவியிடம் சைகை செய்துவிட்டு, மேடையிலிருந்து இறங்கிச் சென்று, வந்த கூட்டத்தில் முக்கியஸ்தர் போலத் தோன்றிய ஒருவரைக் கட்டித் தழுவி வரவேற்றார், முத்துமாணிக்கம்!

தந்தையின் டெலிபோன் பேச்சு நினைவு வர, மகாலட்சுமியின் மூளைக்குள் அபாய மணி அடித்தது!

## — 6 —



இப்போது வந்த மனிதர்கள்தான், தந்தை வரச்சொன்ன மாப்பிள்ளை வீட்டு மனிதர்கள் என்று, மகாலட்சுமிக்கு நிச்சயமாயிற்று!

போதும், போதாதற்கு, "மகாக் கண்ணு, இங்கே வாம்மா!" என்று முத்துமாணிக்கம் அவளை அன்பொழுக அழைக்க வேறு செய்தார்!

உறுதிப்படுத்தப் படாவிட்டாலும், உள்ளூர சந்தேகம் இருந்ததால் "இந்த சாமான் அடுக்க வேண்டும்ப்பா" என்று பதில் உரைத்துவிட்டு, வேலை செய்வது போல பாவனையில், மேடையின் ஒரு தூண் மறைவில் ஒளிந்து நின்றாள்.

மகளது மறைமுகமான மறுப்பையும், முத்துமாணிக்கம், தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார். "எங்கள் மகா, மகா



கெட்டிக்காரி! அம்பாரமாகக் கிடக்கும் பரிசுப் பொருட்களைப் பார்த்த பிறகு, அதை அப்படியே போட்டுவிட்டு வர, அவளுக்கு மனசில்லை! அரண்மனையே என்றாலும் ஒரு பொருள் தொலையாமல் பத்திரமாகப் பார்த்துக் கொள்வாள். அவ்வளவு கவனம்!" என்று பெருமையடித்தார்.

"வாருங்கள் உட்காருங்கள்" என்று இருக்கை காட்டி உபசரித்தவர், இன்னொரு பக்கமாக அமர்ந்திருந்த மனோரஞ்சனைப் பார்த்ததும், அதுவும் அவன் மேடையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்ததைப் பார்த்ததும், முகம் கடுத்தார்.

என்ன இந்தப் பயல், கூப்பிடாமலே வந்திருக்கிறான்! அதுவும் வெள்ளையும் சொள்ளையுமாக என்னமோ இளவரசுப் பட்டம் கட்டினவன் மாதிரி நல்ல உடையில்! அதற்கும் மேலாக, அவரும் மனைவியும் மேடையில் இல்லாதபோதும், அங்கேயே பார்வை வேறு!

அங்கே இருப்பவள், மகள் மட்டுமல்லவா?

அப்படியென்றால், அவருடைய மகளை மயக்கி மணந்து விட்டால், அவருடைய சொத்தில் பாதியை எளிதாக அடைந்து விடலாம் என்று நினைத்தானா? ராஸ்கல்!

எப்பேர்ப்பட்ட கோடீசுவரச் சம்பந்தம் பிடித்து வந்திருக்கிறார்! இதில் குறுக்கே வர, இந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு என்ன தைரியம்?

இவன் என்னதான் ராஜா வேஷம் போட்டாலும், அவரைத் தாண்டியல்லவா, மகளிடம் நெருங்க முடியும்?

எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடுகிற மூட்டாள் நரி என்று எண்ணியவாறு மேடையை நோக்கியவருக்கு

அடுத்த அதிர்ச்சியாக, மகாலட்சுமியும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

முகத்தில்... முகத்தில் ஒருவிதமான... கிறக்கமா? சேச்சே! இருக்காது. இந்தப் பட்டுச் சேலையும் நகைகளும் அணிந்திருப்பதால், சும்மாவே அழகான பெண், மேலும் டாலடிக்கிறாள், அவ்வளவே!

மற்றபடி, முத்துமாணிக்கத்துடைய மகள், காசு பணத்தைக் கணக்குப் பார்க்காமல், கண்ட பிச்சைக்காரப் பயலிடம் மயங்குவாளா என்ன? நிச்சயம் மாட்டாள்!

ஆனால், எப்படியும் இவனைத் திரும்பிப் பார்க்காமல் ஓட வைக்க வேண்டும்.

அடுத்தவரைக் குன்ற வைக்க, அவருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியது இல்லை.

புதிதாக வந்தவர்களை வரவேற்று உட்கார வைக்கும் பாவனையிலேயே திரும்பியவர், அப்போதுதான் பார்த்தவர் போல, மனோரஞ்சனிடம் பேசினார் ''என்ன தம்பி, வந்தவன், கூடமாட வேலையைப் பார்க்காமல், சொத்தென்று உட்கார்ந்து விட்டாயே! விருந்தை நினைத்துச் சாப்பிடாமலே வந்து விட்டாயா? அதற்காக, நீ முதலில் போய் உட்கார்ந்து விடாதே! டீலருங்க எல்லாம் சாப்பிடப் போனார்கள். அதைக் கொஞ்சம் போய்ப் பார்! யாரும் விட்டுப் போகாமல், பார்த்து உட்கார வை! பரிமாறுகிறவர்களுக்கு என்ன தெரியும், யார் வந்து உட்கார்ந்தாலும், வெந்ததை அள்ளிக் கொட்டுவான்கள். யார் யாரை உட்கார வைக்க வேண்டும் என்று, நமக்குத்தானே தெரியும்? போய்ப் பாருப்பா! கண்ட பன்னாடையும், சமயம் பார்த்து, உள்ளே வந்து, பூந்துவிடப்



போகிறான்கள்! போ. போ. போய்ச் சாப்பாட்டு ஹாலைப் பார்!'' என்று துரிதப்படுத்துவது போல, அவனை, அங்கிருக்க விடாமல் விரட்டினார்.

அவன் எழவும், ''தள்ளிக்கோப்பா'' என்று அந்த இடத்தில் இன்னொருவரை உபசரித்து உட்கார வைத்தார்.

நேரடியாக அவனைப் 'பன்னாடை' என்று நேராகச் சொல்லவில்லை! ஆனால் இங்கே நீ ஓர் எடுபிடிதான் என்று, தெளிவாகவே தெரிவித்தார் முத்துமாணிக்கம்.

முதல் முறையாக, மனோரஞ்சனின் கண்களில் சினம் துளிர்த்தது. அவன் ஒன்றும் அழைப்பில்லாமல் வரவில்லையே! இவ்வளவு பணக்கணக்குப் பார்க்கிறவர், யாரையும் கூப்பிடாதே என்று மகளிடம் சொல்லியிருக்க வேண்டும்!

முகம் இறுக நோக்கியவனை மகாலட்சுமியின் கண்களில் தெரிந்த கெஞ்சல் அமைதிப்படுத்தியது.

''இதோ! போய் பார்க்கிறேன் சார். டீலர்களின் பழக்கம் எனக்கும் நல்லதாயிற்றே! வாழ்த்திவிட்டுச் செல்ல வந்த இடத்தில், இப்படியொரு வாய்ப்புக் கிடைத்தால் விட்டு விடுவேனா? இதோ போகிறேன் சார்!'' என்று சாப்பாட்டு ஹாலை நோக்கி நடந்தான் மனோரஞ்சன்.

திரும்பி நின்று, மனோரஞ்சன் சற்று நிமிர்ந்தாற் போலவே செல்வதைக் கவனித்த முத்துமாணிக்கத்துக்கு, மனம் லேசாக அதிர்ந்தது.

என்ன இந்தப் பையன்? ஒன்று அழுகையை அடக்கும் முயற்சியில் இருப்பான், அல்லது விழுந்தடித்து

ஒதுங்கி ஓடி விடுவான் என்று பார்த்தால், அவர் சொன்ன வேலையைச் செய்வதாக... அதுவும், இளித்த முகத் தோடு கூறிவிட்டுப் போகிறானே என்று, குழப்பம் வந்தது.

எதற்கும்... என்று சற்று முன்னே போய் எட்டிப் பார்த் தால், மேடையில் தூண் மறைவிலே நின்று, மகா லட்சுமியும், அந்தப் பயலைத்தான் பார்த்துக் கொண் டிருந்தாள்.

அவருடைய மகள் மகாலட்சுமி எப்படி தரம் தெரி யாமல்... தாய் வீட்டுப் புத்தி வந்து விட்டது போல!

அவரது கட்டளைப்படி, கோடீசுவரக் குடும்பத்துக்குக் குளிர்பானம் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்த மனைவியின் முதுகில் சப்பென்று, ஓங்கி ஒன்று வைக்க வேண்டும் போலத் தோன்றியதை அடக்கிக் கொண்டு, முத்துமாணிக்கம் யோசித்தார்.

மகாலட்சுமிக்கு சின்ன வயது. வாலிப வயதில் நல்ல உடையில், பார்ப்பதற்கு கொஞ்சம் நன்றாக இருப்ப வனைப் பார்த்ததும், மனது கொஞ்சம் கிறங்குகிறது. இயற்கையின் வேலை! அவ்வளவே.

ஆனாலும், இதை முளையிலேயே கிள்ள வேண்டும். விஷ மரமாக வளர விட்டுவிட்டு, அப்புறம் கோடா லியைத் தேடக்கூடாது!

வேகமாக யோசித்து முடித்துவிட்ட முத்துமாணிக்கம், அதன் பிறகு மனோரஞ்சனை உட்கார விடவில்லை. ஒரே இடத்தில் நிற்கவும் விட்டாரில்லை.

விருந்துக்கு நடக்கும் இடத்துக்கு வந்தவர் ''என்ன தம்பி, அந்த இலையில் பதார்த்தமே இல்லையே! உனக்கு பந்தி பார்க்கத் தெரியவில்லையே! பரிமாறுகிற ஆள் வேறு வேலையாக இருந்தால், இப்படி எடுத்து, நாமே பரிமாற வேண்டும்ப்பா!'' என்று பரிசாரகனிட மிருந்து வாளியைப் பிடுங்கி, தானே ஓர் இலையில் எடுத்து வைத்தார்.



அத்தோடு விடாமல், வாளியை அவன் கையைப் பிடித்துக் கொடுத்து ''இதைப் போல வைப்பா!'' என்று விட்டுப் போனார்.

போகிற போக்கில் ''எது வேணுமானாலும், மனோ தம்பி கிட்டே கூச்சப் படாமல் கேளுங்கள். தம்பிப் பொறுப் பாகச் செய்யும்'' என்று கூறிவிட்டுப் போனார்.

ஆத்திரத்துடன் அவன் திரும்புகையில், எங்கிருந்தோ வந்த மகாலட்சுமி ''அப்பா உங்களை அழைத்து வரச் சொன்னார்'' என்று கூட்டிப் போனாள்.

''இங்கே என்ன நடக்கிறது?'' என்று அடிக்குரலில் கேட்டான் மனோரஞ்சன்.

இங்குமங்கும் பார்த்துவிட்டு, ''மனோ, விவரித்துக் கூற, இப்போது எனக்கு அவகாசமில்லை. ஆனால், எனக்கு ஒரு திட்டம் இருக்கிறது. அது சரிவர நிறைவேற வேண்டும் என்றால், என்ன நடந்தாலும் நீங்கள் இங் கேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். கோபப்பட்டு, வெளியேறி விடக்கூடாது. சரியா? என்னிடம் நம் பிக்கை இருக்கிறது அல்லவா?'' என்று ஓரக்கண்ணால் பார்த்துக் கேட்டாள்.

முகம் கனிய ''இல்லாமலா, உன் தந்தை பற்றித் தெரிந்தும், நீ விரும்பிய மாதிரி உடையணிந்து இங்கே வருவேன்? ஆனால்... சரி, உன் விருப்பம் போல நடத்து. இப்போதென்ன? போய்ப் பரிமாற வேண்

டுமா?'' என்று முயன்று எரிச்சலை மறைத்துக் கேட்டான் அவன்.

''அது வேண்டாம், ரஞ்சன். ஆனால்... உங்களுக்குத் தான் நன்றாகச் சமாளிக்கத் தெரியுமே... அப்பா கூப்பிடுகிறார்!'' என்றவள் சிட்டாகப் பறந்து விட்டாள்.

அவள் என்னதான் வேகமாகச் சென்றபோதும் ''என்ன மகா, உன்னை எவ்வளவு நேரம் கூப்பிடுவது? எங்கே போனாய்?'' என்று முத்துமாணிக்கம் எரிச்சல்பட்டார்.

''அதில்லையப்பா. சேலை கட்டிப் பழக்கம் இல்லையா? எங்காவது இழுத்துக் கொள்கிறது. தட்டி விடுவது வேறு. பையப் பையப் பார்த்து நடந்து வந்தேன்! கத்திப் பேசக்கூடாது என்கிறீர்களா? உங்களுக்குக் கேட்கும்படியாகப் பதில் சொல்லவும் முடியவில்லை!'' என்று கோவையாகக் கூறினாள் பெண்.

சாப்பாட்டு அறைப்பக்கமிருந்து வந்தாளோ என்று சிறு சந்தேகம் இருந்தாலும், அது பற்றிக் கேட்க மனமின்றி, ''சரி சரி வா. சில விருந்தினருக்கு, உன்னை அறிமுகப்படுத்த வேண்டும்'' என்று அழைத்துப் போனார் தந்தை.

முத்துமாணிக்கத்துக்கு இரண்டு இடத்தில் இருக்க வேண்டிய பிரச்சினை ஏற்பட்டது.

ஒன்று வந்திருக்கும் மாப்பிள்ளை வீட்டாரை மனம் கோணாமல் உபசரித்து, சீர் செனத்தி பற்றிப் பேசி முடிக்க வேண்டியிருந்தது.

அடுத்தது, மனோரஞ்சன் விஷயம்! இது, ரொம்பப் பெரிய விஷயமாகத் தோன்றாவிட்டாலும், பலதையும் கவனித்துத் தன் முயற்சியாக முன்னேறியவருக்கு ஒரு



சிறு நெருடலையும் அலட்சியமாக விட மனம் வரவில்லை.

எனவே பெரிதும் திருமணம் பேச வந்தவர்களிடம் பெருமளவு நேரம் பேசுவதும், இடையிடையே மனோரஞ்சனைக் கவனிப்பதுமாகச் சுற்றி வந்தார்.

மகள் நல்ல அழகி என்று அவருக்குத் தெரியும். மாப்பிள்ளைப் பையன் எந்த அளவுக்குச் சொக்கி விழுகிறானோ, அந்த அளவுக்கு நகை, தொகைச் செலவைக் குறைத்துப் பேசலாம் என்பது அவரது கணிப்பு!

எனவே, மகளை அவர்கள் கண் முன்னே காட்டிக் கொண்டே இருக்கலாம் என்று பார்த்தால், அவள் காணாமல் காணாமல் போய்க் கொண்டிருந்தாள்.

அதுவும், மனோரஞ்சனின் பார்வை வட்டத்தில் இருக்கிறாளோ என்று தோன்றிய விஷயம் வேறு அவருக்கு எரிச்சலூட்டியது!

அந்த நாயும் 'விருந்தாளியாக உட்காராதே' பரிமாறுவதைப் பார் என்றெல்லாம் மட்டமாக நடத்தினாலும், விடாக் கொண்டனாக, அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தன.

உள்ளே தனியான ஏசி அறையில் வருங்கால உறவினராகக் கூடிய கோடீசுவரக் குடும்பத்தை வைத்துப் பேசிக் கொண்டிருக்கும்போதே, மற்ற விருந்தினரின் வசதியை ஒரு தரம் பார்த்து வருவதாகச் சொல்லி, அங்குமிங்கும் ஓடித் தேடிய ஒரு தரமும், மகள், அந்தப் பிச்சைக்காரப் பயலோடு பேசுவதை அவர் நேரடியாகப் பார்க்கவில்லை.

ஆனாலும்... அழைத்தால், அந்தப் பக்கம் எங்கிருந்தோ தானே வருகிறாள்!

யாரிடமும் இதுபற்றிக் கேட்பதும் தவறு. அவரே மகள் பற்றி ஒரு புரளியைக் கிளப்பி விட்டது போல ஆகி விடும்!

திருமணம் பேசி முடிக்குமுன் சாப்பாட்டுக்கு கை நனைக்க மாட்டோம் என்று வருங்கால சம்பந்தி வீட் டாருக்கு கொறிப்பதற்காக வறுத்த முந்திரியை மகள் கையில் கொடுத்தனுப்பிவிட்டு, மனோரஞ்சனைத் தேடிப் பார்த்தார் முத்துமாணிக்கம்.

ஒருவேளை, அவர் விரட்டியது தாங்காமல் போய் விட்டானோ, என்னவோ? அப்படிப் போய்விட்டிருந் தால் நல்லதுதான் என்று எண்ணியவாறு, மறுபடியும் ஏசி அறையில் அமர்ந்திருப்போரிடம் சென்றார்.

அப்பாடி, அந்த ஓட்டத்தில் உண்டது எல்லாம் செரித்து விடும் போல இருக்கிறதே என்று எண்ணிய வாறு அவர் ஏசி அறைக்குள் செல்வதற்குள், அவ ருடைய மூத்த மகள், அங்கிருந்து காணாமல் போயிருந் தாள்.

சும்மா அல்ல! மாப்பிள்ளைப் பையனை ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கும்படி செய்துவிட்டு,

மகளுக்கு செய்து வைத்திருக்கும் நகைகளைப் பற்றிக் குமுதவல்லி பையனுடைய தாயாரிடம் ஒப்பித்துக் கொண்டிருப்பதையும், பெரிய தலைகள் அதிலே கவன மாக இருப்பதையும் பார்த்துவிட்டு, ஜன்னல் அருகே போய் நின்று கொண்டு, இளவட்டங்கள் குழுமியிருந்த இடத்தைப் பார்த்து, ஓர் அசட்டு நகை புரிந்தாள் மகா லட்சுமி!

அவள் எதிர்பார்த்தது போலவே, ஒரு கிசுகிசு பேச்சின் பின், இளசுகள் செட்டில் இருந்து ஒரு பெண்



மகாலட்சுமியிடம் வந்தாள். சற்று குள்ளம், நகைகளை அள்ளித் தட்டிக் கொண்டு வந்திருந்தாள்.

அவளைக் கவனியாதது போல, ஜன்னலை லேசாகத் திறந்து வெளிப்புறமாக கையை ஆட்டினாள் மகாலட்சுமி.

''யார்...'' என்று எட்டிப் பார்க்க முனைந்தவளுக்கு ''யாருமில்லையே!'' என்று அவசரமாகப் பதில் சொன்ன தோடு, ஜன்னலை மறைத்தாற்போல நின்றுகொண்டு ''வறுத்த முந்திரி சாப்பிடவில்லையா? நல்ல நெய்யிலே வறுத்தது'' என்று ஆசை காட்டுவது போல! கூடவே அது ஒரு பெரிய விஷயம் போலவும்!

ஜன்னல் பக்கம் திரும்பிய தலையைக் கட்டுப்படுத்தி நிறுத்துவது போல, ஓர் அசைவு.

ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க்க முயன்று, முடியாமல் போகவும், ''உ.... உன்னிடம், என் அண்ணன் பேச வேண்டுமாம்'' என்றாள் அந்த நகைக்காய்ச்சி மரம்.

''உ... உங்கள் அண்ணனா? கண்டவர்களோடு எல்லாம், நான் பேச மாட்டேனே!'' என்று எடுப்பாக உரைத்தாள் மகாலட்சுமி.

எரிச்சலுற்று ''கண்டவரா? என் அண்ணன், உன் னைக் கட்டிக் கொள்ளப் போகிறவர்!'' என்று மகாவை விட எடுப்புடன் மொழிந்தாள் அந்தப் பெண்.

''என்னது? உங்களுக்கும் அண்ணனா? ஐயோ, ரொம்ப வயதான..வரா...'' என்று விழி விரித்துக் கேட் கும்போதே, தலையைத் திருப்பி, ஜன்னல் வழியே வெளியே பார்த்து, ''ஐயோ, அவர் கிளம்புகிறாரே!'' என்று சன்னக் குரலில் முணுமுணுத்தபடியே ஜன்னலை மூடியவள், வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

தந்தையின் கண்ணில் படாமல் அங்கிருந்து அகன்ற மகாலட்சுமி, ஏசி அறைக்கு வெளியே சற்றுத் தள்ளி இருந்த மரத்தை நோக்கி வேகமாகச் சென்றாள்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தபோதும், அவள் கேட்டுக் கொண்டபடி அங்கே மனோரஞ்சன் நிற்பதைக் கண்டு, அவளது முகம் மலர்ந்தது.

''இன்னும் எவ்வளவுதான் என்னைப் பொறுத்துக் கொள்ளச் சொல்லப் போகிறாய்? நம் தெருக் கடைக் காரர்கள் முன்னிலையில் அவர்கள் சாப்பிட்ட பிறகு, கடை ஆட்களோடு சேர்ந்து சாப்பிடச் சொல்லுகிறார். நல்ல சாப்பாடு கிடைக்கிறபோது, கூச்சப்படாமல் சாப்பிட வேண்டுமாம். எனக்குத் தேவைதானா? நான் என்றைக்கு இவரிடம் சாப்பாட்டுக்கு வந்து நின்றேன்? இதற்கு மேல் என்னால்...'' என்று அவன் பொரிந்து கொட்டுவதை, அவள் கவனிக்கவே இல்லை!

மாறாக, ஏசி அறையின் ஜன்னல் திறப்பதும், அண்ணன் தங்கை இருவர் முகமும் அங்கே தெரிவதை ஓரக் கண்ணால் பார்த்தவளுக்குச் சிரிப்புதான் பொங்கியது.

மலர்ந்த முகத்தை ஜன்னல் புறமாகக் காட்டியபடி ''இனிமேல் வேண்டாம், ரஞ்சன். இனி ஒருகணம் கூட, நீங்கள் இங்கிருந்து அவமானப்பட வேண்டாம். கிளம்புங்கள்'' என்று அவனுக்கு அனுமதி கொடுத்தாள்.

அவன் புரியாது பார்க்கவும் ''ஐயோ. போங்கள் மனோரஞ்சன்! இனியும் நீங்கள் நிற்பது அவசியமே இல்லை. ஏனென்றால், என் திட்டம் கிட்டத்தட்ட நிறைவேறி விட்டது. நிம்மதியாகப் போய், ஹோட்டலில் எனக்கும் சேர்த்து பிரியாணி சாப்பிடுங்கள்! பை!'' என்று



சிரித்தபடியே அவனுக்குக் கைகாட்டியவாறே உள்ளே திரும்பிச் சென்றாள்.

அதுவரை, மகாலட்சுமியின் திட்டம் மிகச் சரியாகத் தான் நிறைவேறியிருந்தது.

அவளிடம் ஒரு வார்த்தை கேளாமல், பத்தாவது தேறாத பணக்கார மைனரை, வருங்கால மருமகனாகத் தேர்ந்தெடுப்பார்களாமா? அவளும், பிடித்து வைத்த பொம்மை மாதிரி 'ஙே' என்று கழுத்தை நீட்டுவாளாக்கும்!

கொட்டிக் கொள்ள, பிஸ்தா ரோலும், வறுத்த முந்திரியும் பாதாம் கீருமாக்கும்?

இதற்குமேல், எல்லா விதத் தகுதிகளும் உடைய அவளுடைய ரஞ்சனை, இன்றைக்குப் பெரும் பணம் இல்லை என்கிற ஒரே காரணத்துக்காக, அவமதிப்பதைப் பார்த்துக்கொண்டு, அவள் அம்மா இருப்பாளாமா!

அதுவும், யோசிப்பதற்கு கொஞ்சம் மூளையும், செயல்படுவதற்குக் கொஞ்சம் தைரியமும் உள்ள அவள்!

அவள்தான் கேள்விப்பட்டிருக்கிறாளே, இது போன்ற குடும்பங்களில் ஆண்கள் எவ்வளவு வேண்டுமானாலும் ஊர் மேய்வார்கள். ஆனால் மனைவி மட்டும், இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் கண்ணை காதை மூடிக் கொண்டு படி தாண்டாப் பத்தினியாக, கற்புக்கரசி கண்ணகியாக இருக்க வேண்டும்!

இனிமேல், அந்தக் குடும்பம் அவளை நினைத்தேனும் பார்க்குமா?

இத்தனையையும் அவள் மீது தந்தைக்குத் துளி சந்தேகமும் ஏற்படாமலே செய்து முடித்தாயிற்று! மகாலட்சுமி என்றால் சும்மாவா?

வெற்றி மிதப்பில் இப்படியெல்லாம் எண்ணியவாறு, மனோரஞ்சன் கண்ணுக்கு மறையும்வரை திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றதுவரை, இப்போது மகா லட்சுமிக்கு மிகத் தெளிவாகவே நினைவு வந்தது.

அதன் பிறகு நடந்தவைகளும் எதுவும் மறக்க வில்லை!

இதுவரை நடந்தது சந்தோஷம் என்றால், பின்னர் நேர்ந்தது, நெஞ்சைக் கசக்கிப் பிழிந்த பெரும் துன்பம்! எண்ணிப் பார்க்கக் கூட இயலாத வேதனை!

அதுவும், நல்ல தீர்வு என்றேனும் கிட்டக்கூடும் என்ற நம்பிக்கைக்கே இடமில்லாமல், அவளுடைய தந்தை முத்துமாணிக்கத்தால், முழுதாக அழிக்கப்பட்டு விட்ட ஆனந்தம்.

யாரோ சாணக்கியராமே, மாபெரும் ராஜதந்திரி, அரசியல் பற்றி அர்த்த சாஸ்திரம் எனும் நூலை எழுதியவர் என்று படித்திருக்கிறாள், அவரது காலில் குத்தியது என்பதற்காக, ஒரு புல்வகைத் தாவரத்தை வேரோடு பிடுங்கி எடுத்து, தீயிட்டுக் கொளுத்தி, அடியோடு அழித்தாராம்.

அதேபோல மனோரஞ்சனின் மனதில் மகாலட்சுமி மீது பூத்திருந்த அன்பை அடியோடு அழித்து, தானும் அதே சாணக்கிய ரகம் என்று, அவளுடைய தந்தை, அவளுக்குப் புரிய வைத்தபோது, அவள் என்னமாகத் துடித்துத் துவண்டு போனாள்!

அவளுக்குச் செத்துவிட வேண்டும் போலக் கூட இருந்ததே! பெற்றவளின் பராமரிப்பு மட்டும் இல்லை என்றால், அது நடந்தும் இருக்கலாம்!



மகளைத் திடப்படுத்துவதற்காக யோகா, தியானம் என்று அழைத்துப்போய், செய்ய வைத்து, மறுபடியும் மகாலட்சுமியை மனுஷியாக்கியது, குமுதவல்லிதான்.

வெளிஉலகம் தெரியாத அசட்டு அம்மா என்று மகாலட்சுமி நினைத்த அதே அன்னை!

அதே போலவே, தந்தையைப் பற்றியும் அப்போது அவள் புதிதாகத்தான் அறிந்தாள் எனலாம். அதுவரை அவர் வெறும் படாடோடப் பேர்வழி என்று மட்டுமே நினைத்திருந்தாள். அதனாலேயே, மனோரஞ்சன் கொஞ்சம் சம்பாதித்து விட்டால், எல்லாம் சரியாகிவிடும் அதற்கான அவகாசத்தை மட்டும் ஏற்படுத்திக் கொண்டால் போதும் என்ற கருத்து அவளுக்கு!

கோடீசுவரக் குடும்பத்தை விரட்டுவதில் வெற்றி பெற்றாயிற்று என்ற மிதப்புடன் மனோரஞ்சனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு திரும்பி வந்தபோது, திடுமெனக் கோப விழிகளுடன் முத்துமாணிக்கம் குறுக்கே வந்து வழி மறித்தபோதுகூட 'அடடா' என்று இருந்ததே தவிர, மகாலட்சுமி ரொம்ப ஒன்றும் பயந்து விட வில்லை!

''என்ன இது? தனியாக அந்தப் பயலோடு உனக்கு என்ன பேச்சு?'' என்று தந்தையை உறுமிய போதும்கூட, அப்படித்தான். அதே மனநிலைதான்.

அனுபவமற்ற பதினெட்டு வயது இளமையின் துணிச்சல்! முக்கியமாகப் பெற்றவர் பற்றிய அறியாமை!

கூடவே, அதுதான் பார்த்துவிட்டாரே, இனி மூடி மறைப்பானேன் என்று தோன்றிவிட, ''அப்பா, நான் அவரைத் தான் மணந்து கொள்ளப் போகிறேன், இது சத்தியம்!'' என்றாள் உறுதியான குரலில்.

''ஏய்...'' என்று கண்களில் சிவப்பேறத் தொடங்கிய முத்துமாணிக்கம், சட்டென நிதானித்தார்.

சுற்றிலும் பல ஜோடி விழிகளும் செவிகளும் கூர்மை பெறுவதை, மகாலட்சுமிக்கே உணர முடிந்தது!

சட்டென குரலை தணித்து ''உறுதியான முடிவு பண்ணி விட்டாய் போல? எதற்கும், இப்போது இது பற்றிப் பேச வேண்டாம். அடுத்த வாரம் ஒரு நல்ல நாள் பார்த்து, அடுத்த புதன்கிழமையே நல்ல நாள்தான் என்று எனக்கு ஞாபகம். அன்றைக்கு அந்தப் ப... பையனை வரச் சொல்லு. மேற்கொண்டு பேசி முடிக்கலாம்'' என்றார் தந்தையாக.

ஆஹா என்று உற்சாகத்தில் பூரித்துப் போனாள் பெண்.

தலையில் இடி விழப் போவது தெரியாமல்!

# – 7



முத்துமாணிக்கம் கொதித்துப் போயிருந்தார்.

ஊருக்குப்போய், அங்குள்ள மற்ற பெரியவர்களுடன் கலந்து பேசி, எழுதுவதாகச் சொல்லி கோடீசுவரத் திருமண கோஷ்டி கிளம்பவுமே, அவருக்குக் காரணம் புரிந்து விட்டது. எப்படியோ, அந்தப் பயலும், அவருடைய பெண்ணுமாக, ஏதோ திரிசமன் பண்ணியிருக்கிறார்கள்!

மற்றபடி தேன் குடித்த நரி என்பார்களே, அதுபோல மகாலட்சுமியைப் பார்த்ததில் இருந்து இளித்துக்



கொண்டிருந்த மாப்பிள்ளைப் பையன் திருமணம் நிச்சயம் ஆகாமல், அங்கிருந்து கிளம்பியிருக்க மாட்டான்.

ஆனால், கிளம்பியே விட்டார்களே! பெரிய சம்பந்தம் கைநழுவிப் போய்விட்டது! இனி, அது பற்றி நினைத்துப் பயன் இல்லை!

ஆனால், இன்னொரு தரம் இப்படி நடக்கக்கூடாது!

சோறு துணிக்குப் பஞ்சமில்லாத நிலை! அடுத்த வேளை சாப்பாட்டுக்கோ, கிழிந்த துணியை எப்படி மாற்றுவது என்றோ கவலைப்படவோ, அதற்காக வேலை செய்யவோ தேவை இல்லை அல்லவா?

நல்ல உயரமும், எடுப்பான தோற்றமும், படித்த களையுமாக அந்த வக்கற்ற கழுதையைக் கண்டதும், மகளுக்கு தலை சுற்றி விட்டது. ஆனால், இந்தப் படிப்பையும் தோற்றத்தையும் வைத்து, நாளைக்குத் தொங்க தொங்க வைர மாலையோ, பிஎம்டபிள்யூவோ வாங்க முடியுமா என்று அவளுடைய புத்தி கெட்ட மகளுக்கு யோசிக்கத் தெரியவில்லை.

யோசிக்க வைக்க வேண்டும், எப்படி?

முத்துமாணிக்கத்தின் குயுத்தியான மூளை வேகமாக வேலை செய்து, வழி கண்டுபிடித்தது!

முதலில், இந்த சோளக்கொல்லைப் பொம்மையைக் கண்ணால் பார்க்க விடாமல் பண்ண வேண்டும்!

மறுநாள் ஊருக்குக் கிளம்பிய தாத்தா பாட்டியோடு, இரு பேத்திகளும் கூடச் சென்றார்கள்.

சந்தேகத்துடன் தயங்கிய மூத்த மகளிடம் ''நீ செவ்வாய்க்கிழமைக்குள் திரும்பி வந்துவிட வேண்டும். மகா,

மறுநாள் மனோரஞ்சன் வருவான் அல்லவா? கல்யாண விஷயம் பேசி முடிக்க, நீ இருக்க வேண்டுமே! ஆனால் வயதானவர்கள்! ரொம்ப ஆசைப்படுகிறார்கள், அவர்கள் மனதைத்தான் நோகடிப்பானேன்? போனேன் என்று போய்விட்டு, முடிந்த அளவு விரைவாக இருவரும் வந்து விடுங்கள்'' என்று விளக்கிச் சொன்னார் முத்து மாணிக்கம்.

''கட்டாயமாக புதனன்று, நீ இங்கே இருக்க வேண் டும். நினைவிருக்கட்டும். மனோரஞ்சனிடமும் வரச் சொல்லிவிடு!'' என்று அவர் சேர்த்துச் சொல்லவும், மகா லட்சுமியின் ஐயம் அடியோடு மறைந்தது.

மனோரஞ்சனைத் தைரியமாக வீட்டிலிருந்தே செல் லில் கூப்பிட்டு அவள் சொன்னபோது, அவனுக்கும் சந்தேகம்தான்.

இன்றைய கடைத் தெரு புழக்கத்தினால், முத்து மாணிக்கம் லேசில் விட்டுக் கொடுக்கிறவர் அல்ல என்று அவன் தெரிந்து கொண்டிருந்தான். அவரது நாடித் துடிப்பே பணம் என்றும்!

எனவே, அந்தப் பணத்தைச் சம்பாதிக்கிற வரைக்கும், இந்தத் திருமணப் பேச்சு வேண்டாமே என்றிருந்தது, அவனுக்கு.

''என்ன ரஞ்சன் நீங்கள்? இன்னும் யாரேனும் பணக் கார இடத்தில் சம்பந்தம் பேசி வந்து, அப்பா மனம் அங்கே சாயுமுன், சுட்டோடு சூடாக இதைப் பேசி முடித்து விட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டால், நீங்கள் என்னென்னமோ சொல்லுகிறீர்களே! உங்களுக்கு நான் வேண்டுமா, வேண்டாமா?'' என்று மகாலட்சுமி



குறையோடு நேரடியாகக் கேட்கவும் அவன் தழைந்து போனான்.

அப்போதும் அவனுக்குத் தன் தாயை இதற்காக வரவழைக்க மனமில்லை.

என்னதான் வேறு வழியின்றி மகள் விருப்பத்துக்கு முத்துமாணிக்கம் தலையாட்டினாலும், அவரது திட்டம் வீணாகிப் போன கோபத்தில் ஒன்றிரண்டு குத்து களாவது குத்தாதிருக்க அவரால் முடியாது. அதிலும், பணத்தில் குறைந்தவர்கள், அவருக்குக் கிள்ளுக்கீரை!

அவரது குத்தல் என்னவாக இருந்தாலும், மகாலட் சுமிக்காகத் தானே தாங்கிக் கொள்ளலாம். தாயாருக்குத் துன்பம் வேண்டாம் என்று கருதினான் மனோரஞ்சன். அத்தோடு தாயாரே காதல் திருமணம் செய்தவர் என்பு தால், தன் விருப்பத்தை அன்னை மறுக்கப் போவ தில்லை என்பதும், அவனுக்கு நிச்சயமே!

எனவே, மேன்ஷன் நண்பர்கள், கடைத் தெருவில் பழக்கமானவர்களோடு வருவதாக, மகாலட்சுமியிடம் சொன்னான்.

எப்படியோ அவன் வந்து, திருமணத்தை உறுதி செய்து விட்டால் போதும் என்பது அவளுக்கு எனவே, உற்சாகத்துடனேயே மகாலட்சுமி தன் தாத்தா பாட்டி யுடன் ஊருக்குப் போனாள்.

பெரியவர்கள் இருவரும் முத்துமாணிக்கத்தால் நன்றாக அடிபட்டவர்கள். பெண்ணைக் கொடுத்தா லேயே ஒரு தூசுக்குச் சமமாக மதிக்கப்பட்டவர்கள். தாங்க மாட்டாமல், குமுதவல்லியே, தன் வீட்டுக்குத் தேவையற்று வரவேண்டாம் என்று, பெற்றோரின் வருகையை நிறுத்தியிருந்தாள்.

இதன் பயனாக, கண்ணால் கூட அதிகம் பார்க்க முடியாதிருந்த பேத்திகளை நாலு நாட்கள் பக்கத்திலேயே வைத்துப் பார்க்க முடிந்ததே, அவர்களுக்கு பெருமகிழ்ச்சியாக இருந்தது.

இளநீரும் தவணும் வெட்டிக் கொடுப்பதும், தோட்டத்தில் கொய்யாவும், இலந்தையும் பறித்துக் கொடுப்பதுமாக, அன்பால் குளிப்பாட்டினார்கள். மாம்பழம் பிசைந்த பதனீர் வேறு!

செல்வலட்சுமி இதில் ஒன்றிப் போய்விட, மகாலட்சுமியின் மனம் சென்னையிலேயே இருந்தது.

அங்கேயும், காவேரி மேன்ஷனில் தங்கியிருந்த மனோரஞ்சனிடம்தான்!

இதுவரையும் படிப்பு, அவனது முன்னேற்றம் என்று கட்டுப்பாட்டுக்குள் இருந்த மனம், இப்போது கட்ட விழ்ந்த கன்றாக எங்கெங்கோ சுற்றியது. ஏதேதோ கற்பனைகள்! சே, நானா இப்படியெல்லாம் நினைக்கிறேன் என்று அவளே வெட்குறும் அளவில் எதிர்காலக் கனவுகள்!

செவ்வாய்க்கிழமை சென்னை போய்ச் சேரும் விதமாக, உற்சாகத்துடன் கிளம்பிய போது தாத்தா பாட்டியின் முக வாட்டம் மகாலட்சுமிக்கு குற்ற உணர்ச்சியைத் தந்த போதும், அது, அதிக நேரம் நிலைக்கவில்லை.

மனம் பூராவும் மனோரஞ்சன் இருக்கையில் மற்ற எதற்கும் இடம் ஏது?

காரிலிருந்து இறங்கியதுமே, மகாலட்சுமி, புது உற்சாகத்துடன் தந்தையைத் தேடிச் சென்றாள். அவரும், நல்ல வேளையாக வீட்டில் இருந்தார்.



மகளைப் பார்த்ததும் ''வாம்மா!'' என்று பாசமாக வரவேற்று உட்கார வைத்தார் ''உன் மனோரஞ்சனிடம் நாளைக் காலை பத்து மணிக்கு, இங்கே வந்துவிடச் சொல்லு. காலை உணவை முடித்து விட்டே வரச் சொல்லு. அவர்கள் பழக்கம் எப்படியோ? எல்லாமே பேசி முடிக்குமுன், நம் வீட்டில் கை நனைப்பார்களோ, என்னவோ?'' என்றார் முத்துமாணிக்கம்.

கை நனைக்க மாட்டோம் என்றுவிட்டு, பிஸ்தா ரோலும், வறுத்த முந்திரியுமாக வெளுத்துக் கட்டிய கும்பலின் நினைவில், மகாலட்சுமிக்கு சிரிப்பு வந்தது.

தந்தை குத்தலாக எடுத்துக் கொள்வாரோ என்று அஞ்சி, சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''சரிப்பா'' என்று பணிவாக பதில் சொன்னாள் மகள்.

அதேபோல மனோரஞ்சனுக்கு போன் செய்து, மறு நாள் கட்டாயம் வருமாறு நினைவூட்டினாள். பத்துமணி என்று தந்தை குறிப்பிட்ட நேரம் சொன்னாள்.

என்ன உடை என்பது பற்றிப் பேசி, சற்று நேரம் கலாய்த்துவிட்டு, அவன் அன்றைய வேலையைப் பார்க்கப் போனான்.

எல்லாம் சந்தோஷமாகவே இருந்தது.

இரவு கணக்கு முடித்து, கடை எடுத்து வைத்துவிட்டு வரும்வரை காத்திருந்து, மனோரஞ்சன் வருவது பற்றியும், அவனோடு வருகிறவர்களின் எண்ணிக்கை பற்றியும், தந்தையிடம் தெரிவித்தாள்.

''சந்தோஷம். நான் சாப்பிட்டு வரும்வரை, உட்கார்ந்திரு. உன்னிடம் ஒன்று காட்ட வேண்டும்'' என்று விட்டு குளிக்கப் போனார்.

இரவு பன்னிரண்டு மணிக்கு வந்தாலும், குளித்து விட்டு, இட்டிலியோ, தோசையோ சூடாக வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டு வீடியோவில் ஒரு திரைப் படத்தைப் பார்த்துவிட்டுப் படுக்கப் போவது முத்து மாணிக்கத்தின் வழக்கம்.

சுடச்சுடப் போடப் போட என்ற, அந்த நேரத்து உணவைச் சூடாகத் தயாரித்துப் பரிமாறுவது குமுதவல் லியின் வேலை.

உணர்ச்சியற்ற முகத்துடன் சட்னியைத் தாளித்துக் கொண்டிருந்த தாயைப் பார்க்கையில், மகாலட்சுமிக்கு சற்று எரிச்சல் கூட உண்டாயிற்று!

மகளுக்குத் திருமணம் நிச்சயமாகப் போகிறது! இந்த அம்மா சற்று சந்தோஷமாக இருந்தால் என்ன?

ஒருவேளை, அந்த கோடீசுவர சம்பந்தம் தட்டிப் போயிற்றே என்று, வருத்தம் போலும். அப்படியானால் படட்டும் என்று ஏளனமாக எண்ணியபடி, கை போன போக்கில் டீ.வி.யில் சேனல்களை மாற்றி, மாற்றி மனம் பதியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மகாலட்சுமி.

நிதானமாக தோசைகளை உண்டு முடித்து, பாலையும் குடித்து, ஏப்பம் விட்டார் முத்துமாணிக்கம்.

எழுந்து போய்க் கையைக் கழுவியவர், மனைவி கொடுத்த டவலில் கையைத் துடைத்தபடி, ''இந்தா, சாப்பிட்டுவிட்டு, நீ பாட்டில் போய்ப் படுக்கப் போய் விடாதே. இங்கே வந்து ஓர் ஓரமாக உட்கார்ந்திரு'' என்று உத்தரவிட்டுவிட்டு வந்து சோபாவில், நடுநாயகமாகத் தன் வழக்கமான இடத்தில் உட்கார்ந்தார்.

டீ.வி.யை அணைத்துவிட்டு, தந்தை காட்டப்போகும் விந்தைக்காக மகாலட்சுமி காத்திருந்தாள். மனதில்



ஏதேதோ எண்ணங்கள், ஆசைகள்! ஆனால் எதுவும் தந்தை குணத்துக்கு ஒத்து வருவதாகவும் தோன்றாமல், லேசான படபடப்புடன் தந்தையைப் பார்த்தாள்.

கடையிலிருந்து கொண்டு வந்த ஃபைல்கள் டீபாய் மேல் கிடந்தன. கையை நீட்டி, மஞ்சள் நிறத்தில், மூலைப் பகுதிகளில் முக்கோண வடிவில் நீல நிற ப்ளாஸ்டிக் உறை போடப்பட்டிருந்த ஒரு ஃபைலை எடுத்து, முத்து மாணிக்கம் மகளிடம் கொடுத்தார்.

''கல்லூரி வரை போய்ப் படிக்கிறாய். இதைப் படித் தால் புரிந்து கொள்வாய்தானே? புரியாவிட்டால், என்னைக் கேள். முதலில் படித்துப் பார்'' என்று காலை ஆட்டியபடி சோஃபாவில் வசதியாகச் சாய்ந்து கொண டார் அவர்.

தாயின் உணர்ச்சியற்ற முகம் நினைவு வர, மகாலட் சுமியின் வயிற்றுக்குள் ஏதோ செய்தது.

சமாளித்துக் கொண்டு ஃபைலைப் படிக்கத் தொடங் கியவளுக்கு முகம் வெளுத்தது. உலகமே தட்டாமாலை சுற்றத் தொடங்கியது!

பரபரப்புடன் அடுத்த காகிதத்தை, அப்புறம் இடை யிடையே வேகமாகப் பார்வையை ஓட்டியவளுக்கு நெஞ்சுக்குள் ரயிலே ஓடிற்று.

தந்தை புத்தியைக் காட்டிவிட்டாரா? ஆனால்...

பார்வையை உயர்த்தி ''அப்பா, எ... என்ன இது?'' என்று திகைப்பும் கலக்கமுமாகக் காற்றாகிவிட்ட குரலில் கேட்டாள்.

''ஆங்? படித்தாய்தானே? திருட்டுப்பயல்! இந்தத் திருட்டு நாய்க்கு, முத்துமாணிக்கத்துடைய மகள்

வேண்டுமாமா? நடக்குமா?'' என்றார் அவர் எகத்தாள மாக.

ஐயோ! புத்தியைக் காட்டியே விட்டாரே! இவர் பேச்சை நம்பி!

''பொய் இதை நான் நம்ப மாட்டேன். மனோ அப் படிப்பட்டவர் கிடையாது. இது, ஏதோ உங்களுடைய திரிசமன்! முழுக்க முழுக்கப் பொய்!'' என்றாள் மகா லட்சுமி ஆத்திரத்தில் குரல் நடுங்க.

மற்றபடி, தங்கள் கடைகளில் அட்டை போன்ற கழிவுப் பொருட்களை எடுக்கும்போது, ஊடே கடையில் விற்கும் நல்ல சாமான்களையும் வைத்துத் திருடிச் சென்ற தாக அத்தனை கடைக்காரர்களும், காவல் துறைக்குப் புகார்க் கடிதம் எப்படிக் கொடுப்பார்கள்? அதுவும், இவர் கையில்?

அவள் கையிலிருந்து ஃபைலை வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டார் முத்துமாணிக்கம். ''பொய்யா, இந்தப் புகார்களை எழுதித் தந்திருக்கிற அத்தனை பேரும், காவல் நிலையம், கோர்ட் எல்லா இடங்களிலும், இது தான் உண்மை என்று சத்தியமே செய்வார்கள். தெரி யுமா?''

''அவர்களிடம் உங்களுக்கு உள்ள செல்வாக்கை வைத்துச் சொல்ல வைப்பீர்கள்! ஆனால், இது முழுப் பொய் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். மனோரஞ் சனிடம் கோபத்தில், திட்டம் போட்டு, இதைத் தயாரித்து வைத்திருக்கிறீர்கள்!''

நேராக நிமிர்ந்து உட்கார்ந்தார் முத்துமாணிக்கம். ''ஆமாம். அப்படித்தான். என் வார்த்தைக்காக சுப்ரீம்



கோர்ட் வரை வந்துகூட, இதே பொய்யைப் புகார் கொடுத்த எல்லோரும் சொல்வார்கள், சொல்லவும் வைப்பேன்'' என்று மகளின் நெஞ்சுக்குள் அமிலம் ஊற்றினார் தந்தை.

இதற்கு என்ன செய்வது என்று அறியாது அவள் திணறுகையில், அவரே தொடர்ந்தார். ''ஆனால் பரவா யில்லைடி. சரியாக ஊகித்து, முத்துமாணிக்கத்துடைய மகள் என்று காட்டி விட்டாய். வெறும் மண்ணாந்தை யாக இருக்கிறாளே, இவள் பிறப்பிலேயே தப்போ என்று எனக்கு ஒரே...'' என்று ஏளனப் பேச்சை, ''அப்பா!'' என்று கிரீச்சிட்டு நிறுத்தினாள் பெண்.

கல்லாய் இறுகி அமர்ந்திருந்த தாயைப் பார்த்துவிட்டு ''என்ன பேச்சு பேசுகிறீர்கள்!'' என்று கொதித்தாள்.

''ஏய் சும்மா கத்தாதேடி! என் ரத்தத்துக்குப் பணத் துடைய மதிப்பு தெரிய வேணும். அதை விட்டு ஒரு பன்னாடையைப் போய்க் கட்டிக் கொள்வேன் என் றாளே! விட்டு விடுவேனா?'' என்றார் அவர் வஞ்சினத் தோடு.

தாயை மறந்து, மகாலட்சுமியின் கவனம் மனோரஞ்ச னிடம் சென்றது ''இதை அன்றே சொல்லியிருக்காமே, அப்பா?'' என்றாள் அழாக் குறையாக.

''சொல்லிவிட்டு, ராவோடு ராவாக, இருக்கிற நகை களை அள்ளிக் கொண்டு, அவனோடு நீ ஓடுவதற்கா? இதற்கெல்லாம் வழி வைத்துக் கொடுக்க, உன் அப்பன் ஒன்றும் முட்டாள் அல்ல, முதலில் அதைத் தெரிந்து கொள்!''

தெரிந்து கொள்வதற்கென்ன? அதுதான் உச்சந்தலை யில் ஆணி அறைந்து காட்டி விட்டாரே! ஆனால்...

''அப்படியெல்லாம் கேவலமாக நாங்கள் நடக்க மாட்டோம் அப்பா!'' என்றவள், அவர் உதட்டைப் பிதுக்கவும், ''சத்தியம் அப்பா'' என்றாள் குரலில் கேவலோடு.

''உன் சத்தியத்தைக் குப்பைத் தொட்டியில் போடு! ஒரு பிச்சைக்காரப் பயலை கட்டிக் கொள்ள நினைத்தவள், என்ன கேவலத்தைச் செய்ய மாட்டாய்?''

அவளை நம்பவே போவதில்லை என்றால், என்ன செய்யப் போகிறார்?

ஃபைலின் மேல் பார்வை விழ, அவளது நெஞ்சு பதறியது.

திருட்டு பற்றிப் புகார்? இதை வைத்து, அவனைக் கைது கூடச் செய்யலாமே!

ஐயோ! அதுதான் அவரது திட்டம்! அத்தனை பேர் நடுவில், அவனைக் கைது செய்து அவனை அவமானப் படுத்துவது!

''அப்பா! எனக்குக் கல்யாணமே வேண்டாம்ப்பா! மனோவை வரவேண்டாம் என்று சொல்லி...''

அவள் சொல்லி முடிக்குமுன் ''வரணும்!'' என்று கர்ஜித்தார் முத்துமாணிக்கம்! ''அவன் கட்டாயம் வர வேணும்! அவர் கதாநாயகன் இல்லை? அந்தக் கழுதை வந்தால் தானே கல்யாணம் களை கட்டும்!'' என்று வன்மத்துடன் அவர் பேசப்பேச, மகாலட்சுமியின் முகம் சுண்ணாம்பாய் வெளுத்தது.

''அப்பா நீங்கள் அ... அவரை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று காற்றுக் குரலில் கேட்டபோது, அவளது உடல் முழுதுமே நடுங்கத் தொடங்கியிருந்தது.



''அவன் மாப்பிள்ளையில்லை? கையிலே காப்பு மாட்டப் போகிறேன். இரும்புக் காப்பு!'' என்று நக்கல் பேசியவரின் காலில் விழுந்தாள் பெண்.

''ஐயோ! வேண்டாம்ப்பா, வேண்டாம்ப்பா! அவருக்கு ரொம்ப அவமானமாகிவிடும். தொழிலே அழிந்து போகும்ப்பா, வாழ்க்கையே நா... நாசமாகி... வே... வேண்டாம்ப்பா! அது வேண்டாம்ப்பா!'' என்று கெஞ்சிக் கதறி, மன்றாடினாள்.

சற்று நேரம் மகளைக் கதறவிட்டு வேடிக்கை பார்த்தார், முத்துமாணிக்கம். பிறகு, ''என்ன நடக்கும் என்று தெரியுதில்லை? அப்போது, நான் சொல்கிறபடி செய்'' என்றார்.

கண்ணீரில் நனைந்த முகத்தைத் தூக்கிப் பெற்றவரைப் பார்த்தாள் மகள் ''எ... என்ன செய்ய வேண்டும்?'' என்று தோற்ற குரலில் கேட்டாள்.

''முதலில் போய் உட்கார்'' என்றவர். அவள் பழைய படி அமர்ந்ததும் ''நாளைக்கு அவன் வரும்போது, எல்லோர் முன்னாலும் வைத்து 'இந்த ஆள் மேல் எனக்கு ஆசையே கிடையாது. சும்மா சும்மா வந்து தொந்திரவு பண்ணினதாலே, எதுவானாலும், அப்பாகிட்டே பேசிக் கொள் என்று சொன்னேன். அவ்வளவுதான். அதற்குள் இந்தக் கூத்து அடித்து விட்டான், மற்றபடி இந்த ஆளை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது' என்று சொல்ல வேணும். இந்தக் கண்கலக்கம், அழுகை எதுவும் இல்லாமல், நிஜம் மாதிரி சொல்ல வேணும்'' என்று கூறி முடித்தார்.

தந்தையை வெறித்துப் பார்த்தாள் மகாலட்சுமி.

இதுவும்தான். மனோரஞ்சனுக்கு எவ்வளவு பெரிய அவமானம்! அவன் வேறு சொல்லி அழைத்து வரும்

அத்தனை பேர் முன்னிலையில், அவனுக்கு எவ்வளவு தலைக் குனிவாகிவிடும்?

அதை, அவள் மெல்ல, கெஞ்சுதலாகச் சொன்ன போது, ''கையில் காப்பு மாட்டுவதா? இதுவா? எது மேல் என்று, நீயே முடிவு செய்து கொள்'' என்றார் அவர் இரக்கமற்று.

நிராசையுடன் நோக்கியவளின் மனதைப் படித்தவர் போல, ''கையை பிளேடாலே கீறி, மின்சாரக் கம்பியைத் தொட்டு, இப்படி ஏதாவது பண்ணி வைக்கலாம் என்று நினைத்தாய் என்றால், முதலில் இதைக் கேட்டுக் கொண்டு செய். ஏதாவது வழியிலே, அவனை வரவிடாமல் செய்தாலும்கூட, மவளே, இதுதான் முடிவு! இந்த ஃபைல் அப்படியே போலீசுக்குப் போய்விடும். அவன் வரணும், நீ இந்த வசனம் சொல்லணும். இனி உன் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூடத் தைரியம் வராதபடி, எல்லார் முன்னிலையிலும், அவன் தலைகுனிந்து திரும்பிப் போகணும். இதிலே, ஒரு சிறு மாற்றம் நேர்ந்தாலும், அப்புறம் அவன் கதி ஜெயில்தான்! நினைவிருக்கட்டும்'' என்று, கடுமையான குரலில் எச்சரித்தார்.

அடுத்து மனைவியைப் பார்த்து ''இந்தாடீ, இவளை நீ வளர்த்த லட்சணத்துக்கு, உன்னைப் புளியம் விளாராலே அடித்தே கொன்றிருக்க வேணும். உன் அதிர்ஷ்டம், விட்டு வைத்திருக்கிறேன். ஆனால், நான் சொன்னதற்கு மாறாக எதுவும் நடந்தது என்று வை! அப்புறம், நிச்சயமாய் உன் விதி அதுவேதான்!'' என்றவர், அத்தோடு விஷயம் முடிந்தது என்பதுபோல, ஃபைலைக் கையோடு எடுத்துக் கொண்டு எழுந்து சென்றார்.



அவர் சென்று சற்று நேரம் கழித்து, குமுதவல்லி எழுந்து, மகள் அருகே வந்து ஒட்டி உட்கார்ந்தாள். தாயின் தோளில் மகாலட்சுமி தலை சாய்க்க, இரவு முழுவதும், இருவரும் அதே நிலைதான்.

வேறு வழியில்லாததால், மகாலட்சுமியும் தந்தை கூறியது போலவே செய்தாள்.

ஆனால், அன்றைய அவலம், அத்தோடு முடியவில்லை!

## 8



இதில், மனோரஞ்சனைக் குற்றம் சொல்ல முடியாது. முதலில் இருந்தே, அவனுக்கு இதில் விருப்பம் கிடையாது.

மகாலட்சுமியின் வற்புறுத்தலுக்காக வந்தவன், இப்போது அவளே எதிரிட்டுக் கொள்ளவும் கொதித்துப் போனான்.

அப்போதும், அவன் உடனே அவளைக் குற்றம் சொல்லவில்லை.

''மகாலட்சுமி, இது உன் அப்பாவின் வேலை என்று எனக்கு தெரிகிறது. நீ பயப்படாதே. உனக்கு நான் இருக்கிறேன். என்னையே கொன்று விடுவதாகக் கூட, அவர் உன்னை மிரட்டியிருக்கலாம். ஆனால், அப்படியெல்லாம் கொல்வது எளிதல்ல. இப்போதே என்னோடு வந்துவிடு. காவல் நிலையத்தில் புகார் செய்தால், அவர்களே நமக்குத் திருமணம் செய்து வைப்பார்கள். வாம்மா...''

ஒருவேளை, அவன் சொன்னது போலச் செய்திருக்க வேண்டுமோ?

ஆனால், அதே காவல் நிலையத்தில், கடைக்காரர்களின் புகாரைக் கொடுத்தால், அவனையே கைது செய்து விடுவார்களே என்று, அந்த அச்சம்தான். அன்று மகாலட்சுமிக்குப் பெரிதாகத் தோன்றியது! வயிற்றுப் பிழைப்பும் போய், அவனது வாழ்க்கையே அழிந்து போகுமே!

''சொல்கிறதைப் பாருங்கப்பா. சும்மா சும்மாப் பின்னாலே அலைகிறான், வீட்டுக்கு வந்து உங்களைப் பார்க்கச் சொன்னேன், நல்ல புத்தி சொல்லி அனுப்புங்கப்பா என்றாள் என் மகள். சரிதான் என்று பார்த்தால், இவன் என்னமோ திட்டத்திலே வந்து, காவல்துறையே, இவன் பைக்குள்ளே இருக்கிற மாதிரி பேச்சு வேறு! ஏயப்பா, என் பொண்ணு வந்தால் தாராளமாகக் கூட்டிப் போப்பா. போய்க் காவல் நிலையத்திலே வைத்துத் தாராளமாகக் கல்யாணமே கட்டிக் கொள்ளு. ஆனால், அப்புறம்? அவளுக்கு வயிறு நிறையச் சாப்பாடு போட உன்னாலே முடியுமா? இவ்வளவு படித்துவிட்டு, உன் வயிற்றை நிரப்பவே, கடை கடையாகக் குப்பை பொறுக்குகிறாய். அடுத்த வயிற்றுக்கு என்ன செய்வாள் என்று ஒருத்தி யோசிக்க மாட்டாளா?'' என்று கேட்டார் முத்துமாணிக்கம்.

அவரது பேச்சிலேயே குறிப்பெடுத்து ''அப்பா சொல்வது போல, உங்களது படிப்பு கூட, உங்களுக்குப் பயன் படவில்லையே, மனோரஞ்சன். குப்பைத் தொட்டிக்குப் போக வேண்டிய கழிவை எடுத்துப் பிரித்துப் பிழைப்பு நடத்துகிறவர்! உங்களைப் போய் ஒருத்தி... அதுவும் நான் எப்படி... என்று எதுவும் யோசியாமல், ஏதேதோ கோட்டை கட்டி விட்டீர்களே!'' என்றாள் மகாலட்சுமி.



அவளை வெறித்துப் பார்த்துவிட்டு ''ஓஹோ, இப்போது புரிகிறது!'' என்றான் மனோரஞ்சன். ''முத்து மாணிக்கத்துடைய மகள், பணக்கணக்குப் போட்டிருக்கிறாய். கனம் குறைந்த என் தட்டு ரொம்ப மேலே போய்விட்டது! எத்தனை கோடீசுவரச் சம்பந்தங்கள் வரிசையில் நிற்கிறார்களோ! குறுக்கிட்டு விடக் கூடாது அல்லவா? திரும்பிப் பாராமல் என்னை ஓட வைக்கிற வழி! கெட்டிக்காரி! திட்டம் திட்டம் என்றாயே, இப்படி என்று, எனக்குத் தெரியாமல் போய் விட்டது. முத்து மாணிக்கம் சாருடைய மகள் என்று தெள்ளத் தெளிவாக நிரூபித்து விட்டாய்! சந்தோஷம்! மீண்டும் என்றேனும் வந்து, உன்னைத் தொல்லை செய்வேனோ என்று கலங்க வேண்டாம். இந்தப் பிறவியில், இனி உன் முகத்தில் விழிக்கிற நிலையே வராமல், கடவுள் என்னைக் காப்பாற்றட்டும்! ஆனாலும்... சே!'' என்று வெறுப்பும் அருவருப்புமாக அவன் திரும்பிச் சென்றபோதுதான், கடைசியாக, மகாலட்சுமி அவனைப் பார்த்தது!

அப்போது கூட கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுமோ என்று நிமிர்ந்து அவன் முகத்தை அவள் நேராகப் பார்க்கவில்லை!

அதன் பிறகு, மறுநாளே, மனோரஞ்சன் காணாமல் போய்விட்டான் என்றார்கள்.

பைக்கில் ஏறி, இரவோடு இரவாக எங்கோ போனானாம்.

செல்லுமுன், மேன்ஷன் கணக்கை பாக்கி இல்லாமல் கொடுத்து விட்டானாம்.

கடைகளுக்கும் அப்படியே! ஆனால் எங்கே போனான், என்ன ஆனான் என்று யாருக்கும் தெரியவில்லை. காற்றுப் போலக் காணாமலே போய்விட்டான்.

இதிலேயே வளர்ந்து காட்டுகிறேன் என்றவன், எல்லா வற்றையும் விட்டு, எங்கேயோ போய்விட்டான். வயிற்றுப் பாட்டுக்கே என்ன செய்கிறானோ?

''பரவாயில்லை, போனவன், நீ என் மகள்தான் என்று சர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டுப் போனான். இனிமேல், எனக்குச் சந்தேகம் வராது!'' என்றார் முத்துமாணிக்கம் குரூரத் திருப்தியுடன்.

செத்த பாம்பை அடிக்கிறோம் என்று தெரியாத குரூரம்!

எதையும் உணரக்கூட முடியாதவளாக, மகாலட்சுமி முடங்கிக் கிடந்தாள். பாடாய்ப் பட்டு, மகளை மீண்டும் மனுஷியாக்கியது. குமுதவல்லிதான்.

கொஞ்சம் தெளிவு வந்ததும், அந்த ஃபைலை அழித்து விடக்கோரி, தந்தையிடம் மகாலட்சுமி கேட் டாள்.

''யே... கொஞ்சம் தெம்பு வந்ததும் உன் பெண்ணின் புத்தி எங்கே போகிறது, பார்! இவளையாவது, நம்புவ தாவது? அது என்னிடமே இருக்கட்டும். நீ இன்னும் கொஞ்சம் ஒழுங்குக்கு வந்த பிறகு பார்ப்போம்'' என்றார் முத்துமாணிக்கம்.

அந்த ஃபைலைப் பற்றிப் பேசுவதே பிழையாக எண்ணப்படும் என்று உணர்ந்த மகாலட்சுமி, அந்தப் பேச்சை அத்தோடு விட்டாள்.

தந்தையைப் பற்றியும் முழுதாகத் தெரிந்து விட்டதல் லவா?



தாயின் கவனிப்போடு, காலம் என்கிற அருமருந்தும் சேர்ந்து கொள்ள, மகாலட்சுமி இயல்பாக இருக்கத் தொடங்கினாள். செல்வலட்சுமியின் கலகலப்பு வேறு!

மேலே, படிப்பைத் தொடர மகாலட்சுமி விரும்பி னாள்.

முத்துமாணிக்கம் லேசுப்பட்டவர் இல்லையே! மகளைச் சோதித்தார்.

திருமணத்துக்காகப் பெரிய பெரிய இடங்களில் கேட் கிறார்கள். இப்போது எதற்காகப் படிப்பு என்று கேட் டார்.

ஆனால், இப்போது மகாலட்சுமியும் தந்தையை அறிந்து விட்டவள் அல்லவா?

''அதற்கென்னப்பா? தேதி நிச்சயித்ததும், நிறுத்தி விட்டால் போகிறது! பெரிய படிப்பு முடித்த பெண் என்று இல்லாவிட்டாலும், படித்துக் கொண்டிருக்கிற பெண் என்கிற பெருமையாவது இருக்குமே!'' என்றாள் முகம் வாடாமலே.

ஆறேழு மாதங்களுக்குப் பிறகு, முத்துமாணிக்கம் முதல் முறையாக மூத்த மகள் பேச்சுக்குச் செவி சாய்த் தார்.

இத்தனை மாதங்களில், சந்தேகப்படும்படியாக அவள் ஒரு போதும் நடக்கவில்லை. கூடவே, திருமணத்தையும் மறுக்கவில்லை! மகளிடம் கொஞ்சம் நம்பிக்கை உண் டாயிற்று.

அத்தோடு, இவளை நிறுத்திவிட்டு சின்னவளை மேலே படிக்க வைத்தாலும், என்ன என்ன என்று கேள் விக்கு இடமாகும்.

ஓர் ஆண்டு விட்டுப் போனாலும், மகாலட்சுமி நன்றாகப் படித்ததால் கல்லூரியில் நல்ல பெயர் கிடைத்தது. அவள் மனதுக்கு மாறுதல் கிடைத்தது.

ஆனால், வேறு மனிதனோடு மணம் என்பதை, அவளால் கொஞ்சமும் ஏற்க முடியவில்லை. நேரடியாகத் தந்தையிடம் மறுத்தால், விளைவு வேறு மாதிரி ஆகிவிடும் என்கிற தெளிவு இருந்ததால், தங்கை சொன்னது போல, வெளியே தெரியாமல் தில்லுமுல்லு செய்து, திருமண ஏற்பாடுகளைத் தடுத்து வந்தாள். முதல் முதலாக அவளைப் பார்க்க வந்த கோடீசுவரக் குடும்பத்தின் வக்கிர புத்தியும், ஓரளவு அவளுக்கு உதவி செய்தது எனலாம்.

அவன் திரும்பி வரவே மாட்டான் என்று, அவளுடைய தந்தையைப் போலவே, அவளும் நிச்சயமாக நினைத்திருந்தாள்.

எனவே, என்றேனும் மனோரஞ்சனைச் சந்திக்கக் கூடும் என்ற நம்பிக்கை அவளுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை. மகிழ்ச்சியோடு அவனிடம் கூறிய அவளது பேச்சேகூட, அவளைத் தவறாக நினைக்க ஏதுவாக அமைந்து விட்ட பிறகு, அவன் திரும்பி வருவான் என்று எதிர்பார்க்க வாய்ப்பே கிடையாதுதானே? உள்ளே எவ்வளவு வலித்தாலும், ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மை இது!

நினைத்து வேதனைப்படுவதைவிட, நினையாதிருக்க முயல்வது மேல்!

முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்று விட்டதாகக் கூட, மகாலட்சுமி எண்ணினாள்.



தங்கையின் திருமணத்தின்போது கூட, எந்த விதமான வருத்தமும் இல்லாமல் உற்சாகத்துடன்தான், அவள் செயல்பட்டாள்.

ஆனால் அவனைப் பார்த்த அந்த ஒரு வினாடியில், உலகம் இப்படி எல்லாம் மாறிப் போய்விடுமா?

மனதில் இருந்து ஒதுக்கி விட்டதாக எண்ணிய எல்லாமே அன்றுதான் நடந்தது போல, ஒரு வார்த்தை, சிறு அசைவுகூட மறக்காமல் அப்படியே நினைவு வருவது என்றால், அவள் என்ன முயன்று, என்ன ஜெயித்தாள்?

இப்போது மகாலட்சுமிக்குப் பயமாக இருந்தது.

திருமண அழைப்பில் பெண், பெண்ணுடைய தந்தை பெயர் எல்லாம் பார்த்துதான் இருப்பான். யார் என்று தெரியாமலே அங்கே அவன் வரவில்லை. எனவே, அங்கே அவன் எந்தவித அதிர்ச்சியும் அடைந்து விடவும் இல்லை.

தெரிந்தே வந்திருக்கிறான். வந்தவன், திட்டமிட்டே அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை! சொன்ன சொல்லை நிறைவேற்றுகிறான்!

அவளது முகத்தைக் கூடப் பார்க்கக்கூடாது என்ற பிடிவாதத்தில் பார்க்கப் பிடிக்காத வெறுப்பில் மனோரஞ்சன் இருக்கிறான்! இருந்து காட்டுகிறான்! ஆனால் அவள்?

அவளுக்கு முழு அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். நல்ல வேளையாக அவனது பெயரிலேயே அவளும் ஓரளவு விழித்துக் கொண்டபடியால், ஒரேடியாக அதிர்ந்து கேவலப்பட்டு விடாமல், அந்தச் சமயத்தில், அவளும் சமாளிக்க முடிந்தது.

ஆனால்...

கட்டுப்படுத்த முயன்றும் முடியாமல், மீண்டும் மகாலட்சுமியின் கண்களில், கண்ணீர் அருவி பொங்கியது!

இப்படி நினைத்து நினைத்து அழுவதுதான், அவளது கதி என்று ஆகப் போகிறதா? கூடதே! நிச்சயமாகக் கூடாது!

மீண்டும் முசுமுசு என்று பெருகிய கண்ணீரைக் குளியலறைக்குச் சென்று முகத்தில் குளிர் நீர் அடித்து, ஓரளவு குறைத்தாள்.

மீதியையும் நிறுத்த வேண்டுமே! தாயுடன் சென்று பயின்ற யோகாவும் தியானமும் கை கொடுக்கும்! முகத்தைத் துடைத்துக் கொண்டு பூஜையறையை நோக்கி நடந்தாள்.

அடிக்கடி சென்று, மணிக்கணக்கில் அமர்ந்திருந்து பழகிவிட்ட இடம். விளக்கைப் போடும் தேவையே இல்லாமல் மெல்ல நடந்து சென்றவள், திடுமெனத் தன் பெயர் காதில் விழவும், திகைத்து நின்றாள்.

பெற்றோர் அறையைத் தாண்டித்தான் பூஜை அறை.

வரவேற்புக் கூடம், விருந்தினர் அறை, சாப்பாட்டு, சமையல் அறைகள், வேலையாட்கள் புழங்கும் பகுதி எல்லாம் கீழ்த்தளத்திலும், வீட்டினர் தங்கும் இடங்கள், பூஜை அறை, இரும்புப் பெட்டி அறை முதலியவை மாடியிலும் இருந்தன.

பெற்றோர் அறையில் பேச்சுச் சத்தம் கேட்பது என்றால், ஏதோ படம் பார்த்துவிட்டு, இரவு டீ.வி. பார்த்து முடித்துவிட்டு, பெற்றோரும், இப்போதுதான் படுக்கப் போகிறார்களா?



ஆனால், அவள் பெயர் ஏன் வந்தது?

தன்னையறியாமல், மகாலட்சுமி நின்று கேட்டாள்.

அடுத்துப் பேசியது குமுதவல்லி, ''ஏங்க, இந்தப் பையனாவது, மகாவுக்கு நல்லபடியாக முடியுமா? ஒவ்வொரு தரமும் கிட்டி முட்டி நிச்சயம் ஆகிற மாதிரிப் பேசுவதும், பிறகு கிணற்றிலே போட்ட கல் போலக் கடைசி நேரத்திலே வக்கரித்துப் போய் விட்டதையும் நினைத்தால், அடி வயிற்றிலே பகீர் என்று, படபடப்பாக இருக்கிறது'' என்று கவலையோடு சொல்லிக் கொண்டிருந்தாள் பெற்றவள்.

''அடி போடி, கிறுக்கி! போ! இந்தக் கணக்குப் புத்தகத்தை அலமாரியில் வைத்துவிட்டு வா, சொல்கிறேன்'' என்று மனைவியை ஏவினார் முத்துமாணிக்கம்.

கணவன் ஏவினதைக் குமுதவல்லி செய்துவிட்டு வந்த ஓரிரு நிமிஷங்களுக்குப் பிறகு, மறுபடியும் அவரது குரல் ஒலித்தது.

''கேளுடி, இப்போது பேசுகிறோமே, இந்தப் பையன் விஷயத்திலே பிரச்சினையே வராது! ஏன் தெரியுமா? அன்றைக்கே உன் பெண்ணின் பின்னாடி திரிந்தான், அவன் இந்த ஐந்து ஆண்டில் சொத்து பத்துக்களை இன்னமும் இரண்டு பங்கு பெருக்கி வைத்திருக்கிறேன்! எந்த மடையன் வேண்டாம் என்பான்?'' முத்துமாணிக்கம் கர்வத்துடன் கேட்டார்.

குமுதவல்லிக்கு இது சரியான காரணமாகப் படவில்லை போலும், ஏற்கனவே கணவர் பார்த்த பையன்கள் யாரும் கல்யாணம் வரை, வரவில்லையே!

அத்தோடு ''அந்தப் பையனும் பெரிய பணக்காரன் தான் என்கிறார்களே! செல்வாவே சொன்னாள்!'' என்று

மணமான மகள் பெயரை அவசரமாகச் சேர்த்துச் சொன்னாள் குமுதம். இல்லையென்றால் ''கண்ட ஊர்ப் பட்ட நாய்கள் பேச்சைக் கேட்டு உளறுகிறாயா?'' என்று திட்டுவார்!

அவள் எதிர்பார்த்த விதமாக, சுதி ஏறாமலே முத்து மாணிக்கம் பேசினார்.

''அட போடி, இவளே! பணக்காரன் ஆகிறபோதுதான், பணத்துடைய அருமை தெரியும். முன்னைவிட இப் போதுதான், ஓசியிலே அதைப் பெருக்கிற ஆசை... பேராசையும் வரும்! ஆசைப்பட்ட பெண்ணும் கிடைத்து, இரண்டு பங்கு பணமும் கிடைத்தால், எவன் விடு வான்?'' என்று கேட்டார் அவர்.

கணவரின் பேச்சில் ஏதோ உறைக்க ''ஆசைப்பட்ட பெண் என்கிறீர்களே! அந்தப் பையன் மகா மேல் ஆசைப்பட்டான் என்று, உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் மனைவி.

''ம்? ஒன்றுக்கு இரண்டாகக் கோழி முட்டை மாதிரி வைத்திருக்கிறாயே, அந்தக் கண்ணை நன்றாகத் திறந்து, ஒழுங்காகப் பார்த்தால், உனக்குக் கூடத் தெரியும்!'' என்றார் அவர் இளக்காரமாக.

அவரது நியாயமற்ற பேச்சு எரிச்சலூட்ட, அவளும் திருப்பிக் கொடுத்தாள். ''எனக்கு கண்ணில் கோளா றுங்க. லேசர் பண்ணனும் என்று டாக்டர் சொல்கிறார். எவ்வளவுதான் சம்பாதித்தாலும், இதற்குச் செலவு முப்பது, நாற்பது ஆகுமே என்று, அந்தச் சிகிச்சையை நீங்கள் செய்ய விடுவது இல்லை. வயதான மாதிரி தெரியும் என்று வெளியே செல்லும்போது, கண்ணாடியை



யும் போடக்கூடாது என்கிறீர்கள்! இந்த என் முட்டைக் கண்ணாலே பார்க்கும்போது எல்லாமே கொஞ்சம் கொச கொச என்றுதான் தெரியும். தெளிவாகத் தெரியாது'' என்று ரொம்பத் தெளிவாக பதில் தந்தாள்.

பரவாயில்லையே என்று மனதுக்குள் தாயாருக்கு சபாஷ் போட்டாள் மகாலட்சுமி.

மனைவியின் குற்றச்சாட்டு சரியானதே என்பதால், காதில் விழாதது போல அதை ஒதுக்கி, முத்துமாணிக்கம் முதலில் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கு வந்தார்.

''ஏய், அவன் அந்தப் பையன்டி. நம் கடைத் தெருவில் கழிவு அட்டை, தூசு, தும்பு எல்லாவற்றையும் வாங்கி விற்றுக் கொண்டிருந்தானே, வீட்டுக்குக் கூட வந்து பெண் கேட்டானே, நினைவில்லை?'' என்று அடையாளம் சொல்ல, குமுதவல்லி கண்களை விரித் தாள்.

அந்தப் பொல்லாத நாளின் பின்னர், மகள் பட்ட துன்பம் அவளால் மறக்கக் கூடியதா?

ஆனால், கணவரிடம் அவ்வளவு அவமானப் பட்ட பிள்ளை, மகளையும் கூட மிரட்டி, அவனைக் கண்டபடி பேச வைத்தாரே, அதையெல்லாம் மறந்து, அவன் எப்படி மகாவை மணப்பான்?

இத்தனைக்கும், இந்த வீட்டுப் பணம் கூடத் தேவை யில்லாமல், அவனே சம்பாதித்துப் பெரிய ஆளாகி இருக் கிறான்!

சர்வ ரோக நிவாரணி என்று சொல்வார்கள். எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்தை அப்படிச் சொல்வார்கள். அதுபோல, எல்லாப் பிரச்சினைகளையும் பணம் தீர்த்து

விடும் என்பது, முத்துமாணிக்கத்தின் நிச்சயமான நம்பிக்கை.

ஆனால், அவருடைய மனைவியால் அப்படி உறுதியாக எண்ண முடியவில்லை.

ஒரு பெண் என்றால், திருமணம், பிள்ளைகள்தான் உலகம் என்பது, அவளுக்கு. அந்த உலகத்தை கணவரின் பணத்தால், மூத்த மகளுக்கு இதுவரை அமைத்துத் தர முடியவில்லைதானே?

எனவே, உலகம் தெரிந்த சின்ன மகளிடம் இது பற்றிப் பேச வேண்டும் என்று குமுதவல்லி தனக்குள் முடிவு செய்தாள்.

அறைக்குள் பேச்சு நின்றதும், சற்று யோசித்துவிட்டு, மகாலட்சுமி, தன் அறைக்குத் திரும்பிச் சென்றாள்.

மனோரஞ்சன் தன்னை மணப்பான் என்று, அவள் சிறிதும் நம்பவில்லை. ஆனால், ஏதேனும் அதிசயம் நிகழ்ந்து, அவளுக்கும் மனோரஞ்சனுக்கும் திருமணம் நடந்து விடாதா என்று ஆசைப்படாதிருக்கவும் அவளால் முடியவில்லை. நடக்க முடியாத காரியத்தை கடவுளிடம் முறையிடவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, தன் அறைக்கே திரும்பிப் போய், ஜன்னல் வழியே வானத்தை வெறித்த வண்ணம், அசையாமல் படுத்துக் கிடந்தாள் அவள்!

'வேண்ட முழுதும் அறிவோய் நீ' என்று ஒரு தேவாரப் பாடலில் மகாலட்சுமி படித்திருக்கிறாள். அவளுக்கு என்ன வேண்டும் என்று அந்தக் கடவுளுக்குத் தெரியும். அவரே பார்த்துச் செய்யட்டும்.

மறுநாள் காலையில், மகாலட்சுமி அயர்ந்து உறங்குவதைப் பார்த்துவிட்டு, குமுதவல்லியே காலைப் பூஜை வேலைகளைச் செய்தாள்.



ஆண்கள் வெளியே சென்று விடும் நேரம் என்று கணக்கிட்டு, குமுதவல்லி, சின்ன மகளுக்கு போன் செய்தாள்.

தாய் சொன்ன விவரம் கேட்டு, செல்வலட்சுமிக்கு ஒரே ஆச்சரியம். ''நம் வீட்டுக் கம்ப்யூட்டர் ரிப்பேருக்கெல்லாம் வந்தவராம்மா? நான் சரியாகக் கவனிக்கவே இல்லையே! செல்லில் கேம் விளையாடிக் கொண்டே இருப்பேனா, அவர் முகத்தைச் சரியாகப் பார்த்ததே இல்லை! ஆனால், நீங்கள் சொல்லுகிற தகராறு பற்றி, எனக்கு எதுவுமே... தெரியாதே! வீட்டில் நடந்தது என்கிறீர்கள்?''

''அப்போது நீ பள்ளிக்குப் போயிருந்தாய்டி. அந்த ஆண்டு, மகா கல்லூரிக்கே போகவில்லையே, நினைவில்லை?'' என்று தாயார் நினைவூட்டிய பிறகே, அவளுக்குக் கொஞ்சம் நினைவு வந்தது.

''ஆமாம்மா. எப்போது பார்த்தாலும் படுத்தே கிடப்பாளே, ஏதோ உடம்பு சரியில்லை என்று நினைத்தது... சாரிம்மா. அதற்கு மேல் எனக்கு ஒன்றும் நினைவில்லையே'' என்றாள் பெண், சிறு வருத்தத்துடன்.

எப்படி நினைவிருக்கும்? நீதான் உன்னை மட்டுமே நினைக்கிறவள் ஆயிற்றே என்று நினைத்தாலும், குமுதம் அதை வாய்விட்டுச் சொல்லவில்லை.

''விடும்மா. அப்போது நீ சின்னப் பெண்தானே? பழசை ஆராயாமல், இப்போதைய விஷயத்துக்கு வா, நீ ஏதாவது செய்ய முடியுமாடா? அதாவது மாப்பிள்ளையிடம் சொல்லி...''

''என் மாமாவிடமே சொல்லுவேன்மா! அவருக்கு மகா மேலே தனிப் பிரியம். திருமணத்தின்போது,

பார்த்துப் பார்த்துச் செய்தாள் என்று சொல்லிக் கொண்டே இருப்பார். எங்கள் பெரிய அத்தை. அவர்கள்தான்மா, மனோரஞ்சன் அம்மா, அவர்களுக்கும், மகனுக்குச் சீக்கிரமே திருமணம் செய்து பார்க்க ரொம்ப ஆசை! அக்காவுக்கும் இது கூடி வருகிற வேளை என்று தோன்றுகிறது. அனேகமாகச் செய்து விடலாம்மா!'' என்றாள் அவள் நம்பிக்கையோடு.

சும்மாவே தமக்கையை மணம் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருந்தவள், செல்வலட்சுமி.

அதுவும் இதே மனோரஞ்சனையே! யாரென்று தெரியாமலே செய்தது! யாரென்று தெரிந்த பிறகோ, இதை நடத்தி முடித்தே ஆக வேண்டும் என்ற வேகம், அவளுக்கு வந்தது.

முதலில் கணவனிடம் போய் எல்லாவற்றையும் கொட்டினாள். இருவரும் கலந்து ஆலோசித்து விட்டு, விஷயத்தை பெரியவர்களுக்குக் கசிய விட்டார்கள்.

நேரடியாக மனோரஞ்சனிடம் போக, இருவருக்குமே தயக்கமாக இருந்தது. அவனுக்கும் மகாலட்சுமிக்கும் இடையே ஏதோ பிரச்சினை இருந்ததால்தானே, இருவரும் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்பின்றி இருந்திருக்கிறார்கள்!

ஆனால், இருவருமே வேறு இணையை நாடாதது, அவர்களிடையே தோன்றிய பொறி, அணையவில்லை என்பதைத்தானே காட்டுகிறது?

எனவே இந்த முயற்சி செய்வதில் தப்பே இல்லை என்றே, கணவனும் மனைவியும் கருதினர்.

''நல்ல ஜோடி! என்று செந்தில்நாதன் சந்தோஷப்பட்டார். ''ஏற்கனவே நினைத்தேன் இப்போது இரட்டிப்பு சந்தோஷம்'' என்றார்.



''படவா, இந்த ரதியை மனதில் வைத்துக் கொண்டு தான், கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தாயா? என்ன மாதிரி ராட்சசியைக் கொண்டு வந்து காட்டப் போகிறாயோ என்று கலங்கிப் போயிருந்தேன்! கடவுள் புண்ணியத்தில் மகாலட்சுமியே எனக்குக் கிடைத்து விட்டாள்!'' என்று தாயார் அகமகிழ்ந்து கூறியபோது, மறுத்துப் பேச, மனோரஞ்சனுக்கு வாய் வரவில்லை!

திருமணம் முடிவாகிவிட்ட மாதிரியே, குடும்பத்தில் எல்லோரும் பேசலாயினர்.

கருணாகரி திருமண ஏற்பாடுகளைத் தீவிரமாகத் திட்டமிடத் தொடங்கவும், தடுக்க இயலாமல், மனோரஞ்சன் திணறிப் போனான்.

வெகுவாக யோசித்துவிட்டு, மகாலட்சுமிக்கு போன் செய்தான்!

## – 9



செல் திரையில் மனோரஞ்சனின் எண்ணைக் காணவும், மகாலட்சுமிக்கு சற்று நேரம் ஒன்றுமே ஓடவில்லை. இவன் என்ன சொல்லப் போகிறான்?

வீட்டில் எல்லோரும் திருமணம் அது. இது என்று பேசி மகிழ்ந்தாலும், மகாலட்சுமியால், அதில் முழுமையாகக் கலந்து கொள்ள முடியவில்லை.

அவன் எப்படி மறப்பான் என்ற கேள்வி சதா நெஞ்சைக் கலங்கடித்துக் கொண்டே இருந்தது.

இப்போதும் கலக்கத்துடனேயே அவள் செல்லை ஆன் செய்ய ''யார் என்று தெரிகிறதா?'' என்று கேட்டான் அவன்.

''ம் தெரிகிறது.''

''ஆமாம் நானேதான். அதே எண்தான். உன்னைப் போல, ஆளோடு செல் எண்ணையும் தூக்கி எறிந்து விட வில்லை.''

அவள் எறியவில்லை. முத்துமாணிக்கம்தான். ''அந்த பயலுக்குத் தெரிந்த எண் உன்னிடம் இருக்கக்கூடாது'' என்று அவளது செல்லைப் பிடுங்கி 'ஸிம்' கார்டை எடுத்து உடைத்துப் போட்டார்.

ஆனால், இதையெல்லாம் சொன்னால் நம்புவானா? அவனுக்கு மேல் ஒரு சர்வாதிகாரி இருந்து ஆட்டிப் படைக்கிற அனுபவம் அவனுக்கு இல்லை. என்றாலும், முத்துமாணிக்கம் என்கிற மனிதரைப் பற்றி, அவனுக்கும் கொஞ்சம் தெரியும்தானே?

அவள் யோசித்து முடிவு செய்யுமுன், அவன் அவசர மாகப் பேசினான் ''இதோ பார், பழைய கதை பேசுவ தற்காக நான் இப்போது உன்னைக் கூப்பிடவில்லை. அதற்கு நீ தகுதியானவளும் இல்லை. நீ என்ன எண்ணி உன் தங்கை மூலமாக நம் கதையைப் பரப்பினாயோ, அந்த நோக்கம் நிறைவேறி விட்டது. இங்கே எல் லோரும் நம் திருமணம் உறுதியாகி விட்ட மாதிரியே பேசுகிறார்கள். அதிலும் என் அம்மா, அப்படியே மனம் பூரித்துப் போயிருக்கிறார்கள். வாழ்க்கையில் வெகுவாக அடிபட்டவர்கள் என் தாய் இது நடக்காது என்று, அவர் களிடம் நேரடியாக மறுக்க எனக்குப் பிரியமில்லை. அதனால், உன் பக்கமிருந்து இந்தத் திருமணத்தைத்



தொடங்கியது போலவே, நீயே நிறுத்திவிடு. இதைச் சொல்லத்தான் போன் செய்தேன்'' என்றான் அழுத்த மான குரலில்.

இன்னும் தாங்குகிற சக்தி அவளுக்கு இருக்கிறது!

எவ்வளவு சாதாரணமாகச் சொல்லுகிறான் ஏன்? அவளுக்கு மட்டும் தாயில்லையா? அவளுடைய தாயும், இப்படி ஒரு கணவனிடம் மாட்டிக் கொண்டு, ரொம் பவே அடிபட்டவள்தான்! இன்னமும் பட்டுக் கொண் டிருக்கிறவளும் கூட.

சட்டென மகாலட்சுமி சுதாரித்தாள். இந்த மாதிரி யோசிப்பதற்கோ, பேசுவதற்கோ, இது நேரமில்லை.

நடந்ததை எடுத்துச் சொல்லி, மனோரஞ்சனுக்குப் புரிய வைக்க வேண்டும். அவனுக்குப் புரிந்துவிட்டால்...

வினாடிக்குள் பொன் மயமாக மனதுள் விரிந்த கனவு களைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, ''உங்களிடம் நான் பேச வேண்டும், ரஞ்சன்'' என்றாள் மகாலட்சுமி.

கணநேர அமைதியை அடுத்து ''உனக்கு என்ன தைரியம் இருந்தால், என்னை அப்படிக் கூப்பிடுவாய்?'' என்று சீறினான் மனோரஞ்சன்! ''இவ்வளவு பணம் சம்பாதித்து விட்டதாலேயே, உனக்கு நான் ஏற்றவன் ஆகிவிட்டேன் போல! ஆனால் பெண்ணே, முதலில் இதைக் கேட்டுக்கொள். பெரிய பணக்காரனான எனக்கு, உருப்படியாகச் செய்ய நிறைய வேலைகள் இருக் கின்றன. அதைவிட்டு, பொழுது போகாத பணக்காரப் பெண்களின் மகிழ்ச்சிக்காக வெட்டிப் பேச்சுப் பேச எனக்கு நேரம் இல்லை'' என்றதோடு செல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பேச நேரம் இல்லை என்பதைச் சொல்லிக் காட்டுகிறானாம்! விட்டேற்றியாக நினைக்க முயற்சித்தாலும், உள்ளே வலித்தது. முன்பும், அவன் அடிக்கடியோ, அதிக நேரமோ பேசியது கிடையாது. ஆனால் மனமற்றுப் பேச்சை முடிப்பது நன்றாகத் தெரியும்.

ஆனால் அந்த வருத்தத்தை மிஞ்சியது, அவனது பேச்சின் பொருள்.

திருமணத்தை நிறுத்தும்படி அவளே சொல்ல வேண்டுமாமே!

'வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ' என்று பாரதியார் பாடியது போல, இல்லவே இல்லை என்று அவள் அளவில் முடிந்தே போயிருந்த பேறு, எங்கேயோ சுற்றி, இன்று எப்படியோ வந்து கைக்குக் கிடைக்கும் போல இருந்தால், அதை அவளே தூக்கி எறிய வேண்டுமாமே!

இதை எப்படி ஒப்புவது?

இத்தனைக்கும் இதில் அவள் மேல் தப்பு கிடையாது. மனதைக் கல்லாக்கிக் கொண்டு, அன்று அவள் செய்தது எல்லாமே, மனோரஞ்சனுக்காகத்தான். எனவே, அவன் சொல்வதில் நியாயமும் இல்லை!

நடந்தது என்னவென்று மனோரஞ்சனுக்குத் தெரியாதுதான். ஆனால், விளக்கம் கூற அவளுக்கு ஒரு வாய்ப்பாவது கொடுக்க வேண்டாமா?

அவன் கொடுக்காத வாய்ப்பைத் தானாக எடுத்துக் கொள்ள, மகாலட்சுமி பலமுறை முயன்று பார்த்தாள்.

பலமுறை, தொடர்பு துண்டிக்கப்பட்ட பின் 'ஸ்விட்ச் ஆஃப்' என்றே வரலாயிற்று. எத்தனை முறைதான் தணிந்து, தழைந்து முயற்சிப்பது என்று அவளுக்கு அலுத்துப் போயிற்று.



ஒருவர் பலமுறை கூப்பிட்டால், என்ன என்று ஒரு தரமேனும் கேட்க வேண்டும். இல்லையென்றால் பலனை அனுபவிக்க வேண்டும். அப்படி வேண்டுமானால், கல்யாணத்தை அவனே நிறுத்திக் கொள்ளட்டும் என்று, மகாலட்சுமி சும்மா இருக்கலானாள்.

எந்த நிமிஷம் திருமணம் நிறுத்தப்பட்டு விட்டதாக, யாரிடமிருந்து தகவல் வருமோ என்று, உள்ளூர அவளுக்குத் தவிப்புதான். ஆனால் மனதை மறைத்து வளைய வருவதில், அவள்தான் இப்போது மகா கெட்டிக்காரி ஆயிற்றே!

திருமண ஏற்பாடுகள், மணநாளைக் குறிக்கும் அளவுக்கு முன்னேறின. மணநாள் மட்டுமல்ல, அதற்கு முன்னும் பின்னும் என்னென்ன சடங்குகளை, எந்தெந்த வேளைகளில் செய்வது என்றெல்லாம் சேர்ந்து திட்டமிடத் தொடங்கினார்கள்.

எல்லோரும் கூடிக் கூடிப் பேசியது, செல்வலட்சுமியின் புகுந்த வீட்டில்தான்.

சிட்டுப்போல சந்தோஷமாக அவள் ஓடியாடி வேலை செய்தது, எல்லோர் முகத்திலும் புன்னகையை வரவழைத்தது!

செந்தில்நாதனும், அவருடைய மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு ''அக்காவும் தங்கையும் ஒரே குணம். தங்கை கல்யாணத்தில் மகாலட்சுமியும் இப்படித்தானே, ஓடி ஓடி வேலை செய்தாள்!'' என்று பெருமைப் பட்டுக் கொண்டனர்.

முத்துமாணிக்கம் தம்பதிக்கோ மிகுந்த பெருமை! புகுந்த வீட்டாரிடம், சின்ன மகள் நல்ல பெயர் எடுத் திருக்கிறாளே!

எல்லோரும் செந்தில்நாதன் வீட்டில் குழுமியிருக்க, அந்த நேரத்தில் மனோரஞ்சன், மகாலட்சுமிக்குப் போன் செய்தான்.

குறுக்கீட்டுக்கு இடமின்றி, மற்றவர்கள் அறியாதபடி பேச வசதி என்பதால், மகாலட்சுமிக்குச் சந்தோஷம்தான். ஆனால், அவன் பேசிய விஷயம்தான், ஒரே வேதனை யாக இருந்தது.

அவன், அவ்வளவு சொன்ன பிறகும், பிடித்து வைத்த பிள்ளையார் போலச் சும்மா உட்கார்ந்திருக்கிறாளே! மனதில் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்? மணமாகிவிட்டால், 'மஞ்சள் கயிறு மாஜிக்'கில் எல் லாம் சரியாகிவிடும் என்று எண்ணினாளா? வீணான பகல் கனவு! எந்த மந்திரத்திலும் மயங்கி விழுவதற்கு, மனோரஞ்சன் இன்னமும் முட்டாள் அல்ல! எந்தத் தந் திரத்திலும் அவன் ஏமாறவும் மாட்டான்! என்ன முயன் றாலும், தோற்று, துன்பத்துடன் முடங்கப் போகிறவள் அவள்தான். அந்தத் துன்பம் வேண்டாம் என்று நினைத் தால், அவளாகத் திருமணத்தை நிறுத்துவது நல்லது!

ஓரிரு முறை குறுக்கிட முயன்று முடியாமல் போகவே, அவன் பேசி முடிக்கும் வரை, வாயை மூடிக் கொண்டு மகாலட்சுமி சும்மா இருந்தாள்.

''என்ன சொல்லச் சொல்ல, இப்படிச் சும்மா இருந் தால் எப்படி?'' என்று அதற்கும் எரிந்து விழுந்தான் மனோ ரஞ்சன்.



என்னவோ தோன்றியது மகாலட்சுமிக்கு. ஒரு வகையில்... இந்த ஒரே ஒரு வகையில் மட்டும், இவனும் அவளுடைய தந்தை முத்துமாணிக்கத்தைப் போலத் தான்.

இதே திருமணத்தை நிறுத்துகிற வேலையை, அவரும் அவளைத்தான் செய்யச் சொன்னார், இன்று இவனும் அப்படியே!

ஒருவேளை... தந்தையைப் பற்றி, தந்தையால் நேர்ந்தது பற்றி, இப்போது சொல்ல முடிந்தால்?

''நீங்கள் உங்கள் அம்மாவிடம் சொல்ல முடியாது என்கிறீர்களே, நான் மட்டும் என் அம்மாவிடம் எப்படிச் சொல்வது? அதுவும் என் அப்பா பற்றி, உங்களுக்கே தெரியுமே!'' என்று மெல்ல நூல் விட்டுப் பார்த்தாள் மகாலட்சுமி.

இதிலிருந்து அப்பா பற்றிய பேச்சுத் தொடர்ந்து, அப் படியே பழைய கதை பற்றிச் சொல்ல வாய்ப்புக் கிடைக் காதா என்ற ஆசை!

ஆனால், ''உன் அப்பனைப் பற்றியும் தெரியும், அவர் பெற்ற மகள், உன்னைப் பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் நாடித் துடிப்பே பணம்தானே? அதற் காக என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள்! ஆனால், மற்றவர்களை மாதிரி, என்னை வளைக்க முடியாது! இப்போது இந்தத் திருமணம் மட்டும் நடந்தால், பிற்பாடு நீ ரொம்பவும் கஷ்டப்படப் போகிறாய்! நினைவிருக் கட்டும்!'' என்று, கடுமையான குரலில் எச்சரித்ததோடு, மனோரஞ்சன் பேச்சை முடித்தான்.

அவனது குரலும், வார்த்தைகளும் மகாலட்சுமியை மிகவும் பாதித்தன.

கஷ்டப்படுவாய் என்கிறானே! அதுவும் 'ரொம்பவும்!' என்ன செய்யப் போகிறான்?

மனோரஞ்சனின் மனஉறுதி, மகாலட்சுமி அறிந்ததே. நல்ல நிலைமைக்கு வர வேண்டும் என்று பிடிவாதமாக உழைத்து, ஐந்தே ஆண்டுகளில் குறிக்கோளை அடைந் திருக்கிறான். இதே சென்னைக்குக் குடி வந்ததே, பார்த் தாயா, பார்த்தாயா என்று அவளுக்குக் குத்திக் காட்டும் நோக்கமோ என்ற சந்தேகமும் அவளுக்கு உண்டு.

இப்போது, அவளைக் கஷ்டப்படுத்துவதைக் குறிக் கோளாகக் கொண்டு செயல்படத் தொடங்கினால்?

தனி வாழ்வில் துன்புறுத்தினால், பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பிறர் முன்னிலை திட்டி, கேவலமாகப் பேசி, கை நீட்டி, வீட்டை விட்டு விரட்டி... வக்கிரத்தோடு செயல்பட்டால் எத்தனையோ கொடுமைகள் செய்யலாமே! இன்னொரு பெண்ணின் தொடர்பைக் கூட ஏற்படுத்திக் கொள்ளலாம்!

மனோரஞ்சன் நல்லவன்தான். ஆனால் ஐந்து ஆண்டு களுக்கு முன் நடந்த அவமானத்துக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவன் எண்ணி விட்டால், என்ன தான் செய்ய முடியாது?

சற்று யோசித்துவிட்டு, மகாலட்சுமி தாயிடம் சென் றாள்.

திருமணத் தேதி எல்லாம் நிச்சயித்துவிட்டுத் திரும் பியதில் இருந்து, குமுதவல்லி மகிழ்ச்சியோடு இருந் தாள். மகளுக்கு என்ன மாதிரிப் பட்டுச் சேலை, நகை என்ற கற்பனையில் இருப்பவளிடம், இந்தப் பேச்சை எடுக்கவே மகாலட்சுமிக்குத் தயக்கமாக இருந்தது.



ஆனால், மனோரஞ்சன் சொல்கிற மாதிரி, பிற்பாடு மகாலட்சுமி கஷ்டப்பட்டால், அப்போது இதே அம்மா, இன்னமும் கஷ்டப்படுவாள்தானே?

மனதை திடப்படுத்திக் கொண்டு, மகாலட்சுமி பேச்சைத் தொடங்கினாள். ''அம்மா, இ... இந்தத் திரு மணம் பற்றி எனக்கு ஒரு குழப்பம்'' என்றாள் தயக்கத் துடன்.

''என்ன செல்லம்? என்ன கலரில் சேலை வாங்குவது என்றா? நம் வழக்கப்படி அரக்கு, சிவப்பு...''

மனதை இரும்பாக்கிக் கொண்டு மகள் குறுக்கிட் டாள். ''அதில்லையம்மா, அன்றைக்கு அன்றைக்கு... அதுதான், ஐந்து ஆண்டுகள் முன்னாலே, மனோரஞ்சன் நம் வீட்டுக்கு வந்து, ரொம்ப அவமானப்பட்டு, மிகவும் கோபமும் வெறுப்புமாகப் போக நேர்ந்தது...''

''ஏய், இப்போது எதற்கடி, அந்தப் பேச்செல்லாம். அதெல்லாம் வேண்டாம் என்று ஒதுக்கி, மறந்து நல்ல படியாகக் கல்யாணம் முடிவாகி இருக்கிறது. இப்போது போய் எதையோ நினைத்து நீயும் குழம்பி மற்றவர் களையும் குழப்பாதே! வாயை மூடிக்கொண்டு சும்மா இரு!'' என்று தன் பதட்டத்தை மறைக்கப் பெண்ணை அதட்டினாள் குமுதவல்லி.

''அப்படியில்லை அம்மா. நீங்களே யோசித்துப் பாருங்கள், மனோரஞ்சனுக்கு எப்படியும் உள்ளூர நம்மீது... எப்படியும் என் மேல் கோபம் இருக்கும். எ...ல் லாருமாகச் சேர்ந்து திருமணம் என்றதில், மறுக்க முடி யாமல் சும்மா இருந்திருக்கலாம். எதற்கும், அவருக்குச் சம்மதமா என்று ஒரு வார்த்தை கேட்டு விடுவது

நல்லதில்லையா?'' என்று ஒரு வழியாகச் சொல்லி முடித்து விட்டாள், மகாலட்சுமி.

பிரச்சினையைத் தெரியப்படுத்தி ஆயிற்று. இனி, இது அவனிடம் போகும்போது, திருமணத்தை நடத்து வதோ, நிறுத்துவதோ அவனது விருப்பத்தை அவனே நிறைவேற்றிக் கொள்ளட்டும். பொறுப்பு அவனுடை யது!

அன்று மாலையே, மணமகனுக்குப் பெண் வீட்டார் வாங்க வேண்டிய உடை பற்றிப் பேசுவதற்காக, முத்து மாணிக்கமும், குமுதவல்லியும் மனோரஞ்சனின் வீட் டுக்குச் செல்வதாக இருந்தது.

இருவரும் கிளம்புமுன், தாயை தனியே அழைத்து ''கட்டாயம் கேட்டு விடுங்கம்மா'' என்றாள் மகாலட்சுமி.

''என்னமோ நல்ல விஷயம் அப்படிப் பேசக்கூடாது, இப்படி இருக்கணும் என்று என்னை அறுப்பாயே. இப்ப வும் நல்ல காரியமாகத்தானே போகிறோம். முகத்தைக் கொஞ்சம் சிரித்தாற்போலத் தான் வைத்துக் கொள்ளேன்! அல்லது, நீ சிரிக்கிற லட்சணமும் இதுதானோ? அந்தக் குட்டி வேறே, கிளம்புகிற போது வந்து உன் காதைக் கடித்துவிட்டுப் போகிறாள்... ஏய், கேட்கிறேனில்லை? என்னடி விஷயம்?''

அதற்கு மேல் மறைக்க மாட்டாமல், குமுதவல்லி விஷயத்தைச் சொன்னாள். மறைப்பதை விடவும், எந்த வழியிலாவது நினைத்ததைச் செய்து முடிக்கிற கணவர், இந்தத் திருமணத்தையும் எப்படியாவது நடத்திவிட மாட்டாரா என்கிற ஆசைதான் அவளுக்கு!

''நினைத்தேன்!'' என்றார் முத்துமாணிக்கம் எரிச்ச லோடு. ''வேளை கெட்ட வேளையில் ஏதாவது சள்ளை



பண்ணுவதே, அந்தக் கழுதைக்கு வேலையாகிப் போய்விட்டது. அன்றைக்கே ஆசைப்பட்டவன், ஏதாவது பண்ணி, முந்தானையில் முடிந்துகொள்ளத் தெரியவில் லையே! இதே, சின்னவளைப் பார்! சும்மா பார்க்க வந்தது தான். அன்றைக்கே சுண்டு விரலில் பற்றிக் கொண்டு விடவில்லை? இப்போது போய் சம்மதமா துரையே என்று, கேட்கச் சொல்லுகிறாளாக்கும்? சுத்த மட்டி, சரிசரி. விடு. எல்லாம் கேட்டு விட்டோம். திருமணத் துக்குச் சம்மதம் சொல்லி விட்டார் என்று முடித்துவிடு'' என்று வழி சொன்னார்.

குமுதவல்லி இதற்கும் பயந்தாள். ஏதோ காரணம் இருக்கப் போய்த்தானே, மகாலட்சுமி இந்தக் கேள்வி கேட்கச் சொல்லியிருக்கிறாள்? இந்த நேரம் சமாளிக்கப் போய், மகளுக்கு, பிறகு பெரிய பிரச்சினை ஆகிவிடக் கூடாதே! அத்தோடு, ஒரே போன் பேச்சில் உண்மை வெட்ட வெளிச்சம் ஆகிவிடுமே!

''அதெப்படிங்க ஒரேடியாகப் பொய் சொல்ல முடி யும்?'' என்று தொடங்கியவள் வாக்கியத்தை முடிக்கு முன்னரே முத்துமாணிக்கம் பாய்ந்தார்.

''ஆமாமடி, நீ பெரிய அரிச்சந்திரன், மகாத்மா காந்தி பரம்பரை பார், உன் வாயாலே, இதுவரை பொய்யே சொன்ன தில்லையாக்கும்! சும்மா என்ன புருடா விடுகிறாய்?'' என்றார் அவர் ஏளனமாக.

முத்துமாணிக்கத்தோடு குடும்பம் நடத்த வேண்டு மானால், அவ்வப்போது சின்னச் சின்னப் பொய்கள் சொல்லாமல் முடியாது. அவரும் கடப்பாரையை விழுங்கி, சுக்குக் கஷாயம் குடித்து ஜீரணிக்கிறவர் என்பதால்

அந்தந்த நேரத்து மனநிலையைப் பொறுத்து, இந்தப் பொய்களைப் பெரும் குற்றமாகக் கருதுவது இல்லை.

ஆனால், இது போலச் சமயங்களில் குத்தவும் செய் வார்.

இப்போது என்ன பேசினாலும், தப்பாகவே பொருள் கொள்ளப்படும் என்பதால், குமுதவல்லி அமைதியைக் கடைபிடித்தாள்.

சற்று யோசித்துவிட்டு ''சரி, இது பற்றி நான் பேசு கிறேன். நீ வாயைத் திறக்காதே'' என்றார் முத்து மாணிக்கம்.

ஒரு மாதிரியான திருப்தியோடு, குமுதவல்லி தலை யாட்டினாள்.

தட்டு நிறையப் பழங்களோடு சென்றவர்களை, மனோரஞ்சனுடைய தாயார் கருணாகரி இன்முகத்தோடு வரவேற்றாள்.

அவர் காட்டிய மேஜையில் தட்டை வைத்துவிட்டு டிரைவர் அகலும்போதே, ''வாங்கப்பா, வாங்கம்மா!'' என்ற படி செல்வலட்சுமி மாடியிலிருந்து வேகமாக இறங்கி வந்து உபசரித்தாள். ''சாரிப்பா என்னதான் உங்கள் மகள் என்றாலும், கல்யாணம் ஆகிவிட்டதால், நான் இப்போது மாப்பிள்ளை வீட்டுக்காரிதானேப்பா? அதனால், இங்கே வந்துவிட்டேன். உங்கள் இரண்டு மாப்பிள்ளைகளும் மாடியில் இருகிறார்கள். உங்கள் புது மாப்பிள்ளைக்குக் கூ..ச்சமாக இருக்குமில்லையா? அதனால் அனுபவஸ்த ரான என் கணவர், அவருக்குத் துணையாக இருக்கிறார்'' என்று நகை முகத்துடன் அவள் அறிவித்த விதத்தில், ஹாலில் இருந்த எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.



அதற்குள் செந்தில்நாதன் மனைவியுடன் வந்து சேர, வீடு கலகலத்தது.

''மாமா, அத்தைகூட வந்தாயிற்று. புது மாப்பிள்ளை தைரியமாகத் தரிசனம் தரலாம்'' என்று மாடிப் படியருகில் நின்று செல்வலட்சுமி உரக்கக் குரல் கொடுக்க, இளை ஞர்கள் இருவரும் இறங்கி வந்தனர்.

ஒரு சிறு விஷயத்துக்குப் போய், எல்லோரையும் கூட்டித் தொல்லை செய்வானேன் என்பது போல மனோ ரஞ்சன் ஏதோ சொல்லியிருப்பான் போல!

பேச்சின் தொடரே போல ''முதலில் எனக்கே கூட, இப்படித்தான் தோன்றியது. ஆனால் யோசித்துப் பார்த் தால் இந்தப் பரபரப்பு, கலகலப்பு எல்லாம் தேவை யாகத்தான் தெரிகிறது. அண்ணா, சும்மா என்றால் அவரவர் வேலையில் சொந்த பந்தங்களைச் சந்திப்பதே, நமக்கு அபூர்வமாகி விடுகிறது. எனவே வாய்ப்புக் கிடைக்கும்போது, இப்படிச் சேர்ந்து கலகலத்து, மனதில் இருக்கும் அன்பை முழுமையாக வெளிப்படுத்திக் கொள் கிறார்கள். சுனிலாவுக்குக் கூட, வருவதற்கு ரொம்ப ஆசை. ஆனால் வயிற்றுப்பிள்ளைக்காரி, சற்று ஓய்வாக இரு என்று, அம்மாதான் அவளை நிறுத்தி விட்டார்கள்'' என்று சுகந்தன் சொல்லிக் கொண்டு வந்தது எல்லோருக் கும் கேட்டது.

''சின்ன மாப்பிள்ளை சொல்வது, ரொம்ப சரி'' என் றார் முத்துமாணிக்கம் மிகவும் பவ்யமாக.

''பாருங்கள், நான்தான் முதல் மாப்பிள்ளை! ஆனால் இப்போது சின்ன மாப்பிள்ளை ஆகி விட்டேனாம்'' என்று கூறி சுகந்தன் சிரித்தான்.

''ஹையோப்பா, சின்ன மாப்பிள்ளையாக இருக்கப் பிடிக்கவில்லை என்றால், அது, உங்கள் கஷ்டம். நான் எப்போதும் அம்மா அப்பாவுக்குச் சின்ன மகள்தான். உங்களுக்காக, என் அக்காவுக்கே, நான் அக்கா ஆக முடியாதுப்பா!'' என்று செல்வலட்சுமி மறுக்க, எல்லோரும் நகைத்தனர்.

''இதுதான் தம்பி! இந்த சந்தோஷத்துக்காகத்தான் இந்த விழாக்கள்!'' என்றார் செந்தில்நாதன்.

''அதில்லை சித்தப்பா. சின்ன வயதுக்காரர்கள் என்றால் பரவாயில்லை. இதற்காகப் பெரியவர்களை எல்லாம் அலைக்களிப்பது என்றால், எனக்கு ரொம்ப அதிகப்படியாகத் தெரிகிறது'' என்றான் மனோரஞ்சன்.

இந்த மாதிரி மறுப்பைத் தெரிவிக்கிறானோ?

கலக்கத்தை மறைத்தபடி கணவனைப் பார்த்தாள் குமுதவல்லி.

'சும்மாயிரு' என்பது போல எச்சரிக்கை பார்வையைச் செலுத்திவிட்டு, ''அப்படிச் சொல்ல முடியுமா, மாப்பிள்ளை? வீடு விட்டால் கடை, கடையிலிருந்து கிளம்பினால் வீடு என்று முடங்கிப் போகிறோம். வீடே, சாப்பிடவும் தூங்கவும்தான் என்று ஆகிவிடுகிறது. தொழில் என்றால், தினமும் பிரச்சினைதானே? இப்படிச் சில நல்ல, சந்தோஷமான விஷயங்களில் கலந்து கொள்வதுதானே, எங்களுக்கும் இறுக்கம் தளர வைக்கும் மருந்தே! அதற்காகத்தான், எந்த நல்லதையும் சற்று அதிகப்படியாகவே கொண்டாடுவது'' என்று முத்து மாணிக்கம் விளக்கினார்.

''உங்களுக்கு அப்படி. என்னைப் பொறுத்தவரையில், எப்போது நம் வீட்டில் ஒரு விழா வரும் என்று ஏங்கிப் போயிருந்தேன். வரவே வராதோ என்று பயந்திருந்ததால், ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயமும், வெறும் போன் பேச்சுக்கூட, எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாகவே இருக்கிறது'' என்று புன்னகையோடு கூறினாள் கருணாகரி.



''பெரியம்மா சொல்வது காதில் விழுகிறதா? இனியும் மறுத்தால், நீ தாய் சொல் தட்டிய தனயன் ஆகி விடுவாய், அண்ணா!'' என்று சுகந்தன் மனோவிடம் கலாய்த்தான்.

இந்த பக்கம் கருணாகரியிடம் ''ஏன் அண்ணி?'' என்று கேட்டாள் குமுதவல்லி, ''மருமகனின் வசதிக்கும் தோற்றத்துக்கும் பெண்ணைப் பெற்றவர்கள் அலை மோதி வந்திருப்பார்களே!'' என்று சொல்லிவிட்டு, வெளியே தெரியாமல், நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

பேசாதே என்றதை மீறி பேசியதற்கு, வீடு போனதும், சரியான மண்டகப்படி காத்திருக்கிறது!

ஆனால், இயல்பாக எடுத்துக் கொண்டு கருணாகரி பதிலிறுத்தாள். ''பெண் வீட்டார் வந்து என்ன செய்வது, மகாலட்சுமியோட அம்மா? இவன் தான் முடியவே முடியாது என்று ஒரே பிடியாக இருந்து விட்டானே? அதெல்லாம், உங்கள் மகளை நினைத்து என்பதே, எனக்கு இப்போதுதானே தெரிய வந்திருக்கிறது! ஆனால் ஓர் அருமையான பெண்ணிடம் மனதைக் கொடுத்திருக்கிறான். அதை நினைத்து சந்தோஷப்படலாம்!''

''அருமை என்பது, உண்மை அண்ணி. சுகன் திருமணத்தின்போதே, நாங்களும் மகாலட்சுமி பற்றி, இதே போல நினைத்தோம்'' என்று செந்தில்நாதன் கூற, மனைவி சாந்தா ஒத்துப் பேசினாள்.

நல்ல வாய்ப்புக்காகக் காத்திருந்த முத்துமாணிக்கம், இப்போது பேச்சில் நுழைந்தார். ''தப்பெல்லாம் என்னது தான், அம்மா! இப்படி நல்ல குடும்பம் என்று தெரியாமல், நான்தான் புத்தி கெட்டுப் போய் தப்புப் பண்ணி விட்டேன்... அதற்காக என்னை மன்னிக்க வேண்டும்'' என்று பணிவும் வருத்தமுமாகத் தழைந்து பேசினார் அவர்.

மனோரஞ்சனின் கண்களில், ஒரு கணம் கனல் வீசியதைக் கவனித்ததோ என்னவோ, ''மாப்பிள்ளை, முக்கியமாக நீங்கள்! அன்று நடந்த தப்புக்கு, தயவு பண்ணி மன்னிக்க வேண்டும்'' என்று தழுதழுத்த குரலில் கூறிக் கை கூப்பினார் அவர்.

காரியம் ஆக வேண்டுமானால், கழுதையின் காலைப் பிடிக்கவும் தயங்காதவர் முத்துமாணிக்கம் என்பதை அறிந்த இருவர், மனைவி குமுதவல்லியும், மனோரஞ்சனும்.

இந்த நடிப்பு ஜெயிக்க வேண்டுமே! என்று வேண்டியபடி குமுதவல்லியும், மற்றவர் முன் சீற்றத்தை வெளிப்படையாகக் காட்ட இயலாமல் தயங்கி மனோரஞ்சனும் சும்மா இருக்க, இளகிப் போன கருணாகரி, பெருந்தன்மையோடு குறுக்கிட்டுப் பேசினாள். ''சேச்சே, என்ன சம்பந்தி நீங்கள்? இந்தச் சின்னப் பையனிடம் போய், மன்னிப்பு அது இது என்று கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்? அன்றைக்கு நீங்கள் இருந்த உயரம், நாங்கள் தாழ இருந்த நிலை... நீங்கள் மகாலட்சுமியைக் கட்டிக் கொடுத்திருந்தால்தான், அதிசயம்! இன்றானால் நிலைமை பற்றி, ஒருவருக்கும் குறைவிருக்க வழியில்லை. எல்லாம் நல்லது என்றே நினைப்போம். இனி துணி எடுப்பது பற்றிப் பேசத்தானே, வந்தீர்கள்? அதைப் பார்க்கலாம்.''



''அப்படி இல்லைம்மா. மாப்பிள்ளை மனதில் குறையிருக்கக் கூடாது என்பது எனக்கு! அத்தோடு, பழமொழியே இருக்கிறதே, உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பது பற்றி! நான் தப்பு செய்தவன் மன்னிப்புக் கேட்டுத்தானே, ஆக வேண்டும்!'' என்றார் அவர் குரல் கரகரக்க.

''அதுதான் தேவையில்லை என்கிறார்களே, என் அண்ணி! விடுங்கள், சம்பந்தி. நாம் கூடியிருக்கும் விஷயத்தைப் பார்ப்போம்'' என்றார் செந்தில்நாதன்.

துணிமணி பற்றி எல்லா விவரங்களும் பேசி முடித்த பிறகு, ''எல்லாம் உங்களுக்குச் சம்மதம்தானே?'' என்று மனோரஞ்சனிடம் கேட்டு, ''எல்லாம் சம்மதம்தான். ஐந்து ஆண்டுகளாகக் காத்திருப்பவனிடம் போய் கேட்கிறீர்களே!'' என்று வீட்டுப் பெரியவர்களும் சின்னவர்களும் சேர்ந்து கிண்டலடிக்க, மாறு கூற முடியாமல், மனோரஞ்சனும் கூடச் சேர்ந்து சிரித்து வைத்தான்.

மருமகனுக்குச் சம்மதமே என்று தாயார் சந்தோஷமாகச் சொல்லவும், மகாலட்சுமிக்கு ஓரளவு நிம்மதியாயிற்று. அவன் கேட்டது, இது இல்லைதான். ஆனாலும், கல்யாணமே குறியாக, அவள் சும்மா இருக்கவில்லைதானே?

அவ்வப்போது நெருஞ்சியாக மனதில் உறுத்தியதையும் மீறிக்கொண்டு, ஐந்து ஆண்டுகளுக்கு முன், தாத்தா வீட்டில் கண்ட கனவுகள் மெல்ல எட்டிப் பார்க்கத் தொடங்கின.

எந்தத் தடையும் இல்லாது, திருமணமும் சிறப்பாக நடந்தேறியது. இரவில் கணவனும் மனைவியும் தனியாகச் சந்திக்கும் நிலையும் வந்தது.

ஆனால், கட்டில் நிறைய ரூபாய் நோட்டுக் கட்டுகளைக் கொண்டு திகைத்து நின்றவளிடம், மனோரஞ்சன் சொன்னான் ''மறுக்கச் சொல்லியும், பிடிவாதமாக நீ என்னை மணந்தது, இதற்காகத்தானே? ஆசைப்பட்டதைக் கட்டியணைத்துக் கொண்டு சந்தோஷமாகத் தூங்கு'' என்றான் ஏளனமும் வெறுப்புமாக.

புலி வந்தே விட்டது!

## 10



**ஆ**க, அவ்வப்போது குத்திய முள்தான் நிஜம். மற்ற ஆசைக் கனவுகள் அத்தனையும் முட்டாளின் சொர்க்கம்.

மன்னிக்கவோ, மறக்கவோ, மனோரஞ்சன் தயாரில்லை என்று, தெளிவாகக் காட்டி விட்டான்!

மகாலட்சுமிக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. என்றாலும், என் கனவுகள் எல்லாம் பாழாகப் போய்விட்டனவே என்று அவள் உட்கார்ந்து அழவில்லை. ஒரு பெரும் துன்பத்திலிருந்து மீள்கையில் பயின்று பெற்ற மனத்தெளிவு, அவளை யோசிக்க வைத்தது.

எல்லா இளம் பெண்களைப் போல ஏதேதோ ஆசைகள் அவளுக்கும் இருந்த போதும் மற்ற பெண்கள் போலன்றி, அவளுக்கு நேர்ந்திருந்த மாறுபட்ட நிகழ்வுகளின் காரணமாக, பிரச்சினையை வெளியே இருந்து யோசிக்கும் சக்தியும் அவளுக்குக் கிடைத்திருந்தது.



இப்போது நடந்திருப்பது, ஏற்கனவே நடந்திருந்த ஒரு படு மோசமான சம்பவத்தின் பின் விளைவு. பாதிக்கப்பட்டவனின் பிரதிபலிப்பு.

அன்றைய சம்பவத்தில், அவளது பங்கும் இருந்தது என்பதால், ஒரு சிறு அளவிலேனும் பதிலடியை அவள், ஏற்கனவே எதிர்பார்த்துதான் இருந்தாள். அவ்வப்போது கொஞ்சம் குத்தல் பேச்சு, மட்டம் தட்டுதல்... இப்படி சில பல.

தந்தையிடம், தாயார் எத்தனை பொறுத்துப் போகவில்லை? அதே போலத் தானும் முதலில் சகித்துக் கொண்டால், பிறகு சரியாகிப் போய்விடும். காலம் செல்லச் செல்ல, பார்த்துப் பழகப் பழக, ஓரளவு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்ட பின், நடந்ததை எடுத்துச் சொல்லி, வாழ்க்கையை, இருவரின் வாழ்க்கையையுமே சீர்ப்படுத்திக் கொள்வது, என்று அவள்!

இந்த மன நிலையில் மணம் புரிந்து கொண்டவளை, அவனது முதல் தாக்குதல் சற்றுத் திணற வைத்து விட்டது.

எவ்வளவு பணத்தைக் கொணர்ந்து, படுக்கையில் கொட்டி வைத்திருக்கிறான்! இவனது நிறுவனமும் 'முத்து ஸ்டோர்ஸ்' கடை மாதிரி தினமும் கையில் பணமாக வந்து சேரக்கூடியது அல்ல! பெரும்பாலும் காசோலைகளில் பணப் பரிமாற்றம் செய்வது. இவ்வளவு ரூபாய் நோட்டுகளையும் பாங்கிலிருந்து எடுத்து வந்து, படுக்கையில் போட்டு வைத்து, இப்படி வசனமும் பேசுவது என்றால், பழிவெறி ரொம்பத் தீவிரமாக இருப்பதாக அல்லவா தெரிகிறது!

யோசிக்கும்போதே, இந்த வீட்டிலேயே முதல் இரவை வைத்ததே, மனோரஞ்சனின் விருப்பப்படிதான் என்பது, மகாலட்சுமிக்கு நினைவு வந்தது.

இவ்வளவு பணத்தை... குறைந்தது ஒரு கோடியாவது இருக்கும், இதைத் தூக்கிக் கொண்டு, வேறு எங்கும் அலைவது ஆபத்து என்பதோடு, கஷ்டமும் கூட. அத னால்தான், வீட்டில்... என்கிற திட்டம்!

தான் முதலில் எண்ணியது போலக் கொஞ்சம் பொறுத் துப் போனால், காலப் போக்கில் சரியாகிவிடக் கூடிய சிக்கலாகத் தெரியவில்லையே என்று கவலையுடன் அவனைப் பார்த்தாள் மகாலட்சுமி!

அவளையே கவனித்துக் கொண்டு இருந்தவன் போல, ''என்ன பணத்துக்கு மதிப்புப் போட்டு விட்டாயா? ஒரு கோடி! உன் பணக்காரத் தகப்பன், என்றாவது, இவ்வளவு பணத்தை உன் கண்ணில் காட்டியிருப் பானா? அந்த அலட்டல் நாயகத்தின் கஞ்சத்தனம் பற்றித் தான், எனக்கும் தெரியுமே! அந்த வகையில், இவ்வளவு பணத்தை ஒரு சேரப் பார்ப்பதே, உனக்குப் பேரானந்த மாக இருக்கும் என்று நினைக்கிறேன்! தொடுவதும் என்றால்...'' என்று இளக்காரக் குரலில் சொல்லிக் கொண்டே போனவன், அவள் ஏதோ பேச முயற்சிப் பதைக் கவனித்துவிட்டு, ''பொறு, முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன்'' என்று மேலே தொடர்ந் தான். ''உனக்கு முல்லா கதைகள் பிடிக்குமே. அதில், அவர் கோட்டுக்கும் தொப்பிக்கும் சாப்பாடு ஊட்டிய கதை நினைவிருக்கிறதா? அவை இல்லாமல் விருந் துக்கு வரக்கூடாது என்பதால், அவைகளுக்குத் தானே விருந்து என்று, விருந்து பதார்த்தங்களைச் சட்டைக்கும்



தொப்பிக்கும் ஊட்டினாராம். தொடர்பு புரிகிறதா? இந்தப் பணம்தான். உன்னை எனக்கு மனைவியாக்கி இருக்கிறது. பணத்துக்காகத்தான், இந்த என் பணத்தைத் தானே நீ மணந்திருக்கிறாய், இல்லையா? ரொம்ப நல்லது. இந்தப் பணத்தையே தொட்டுத் தடவி சந் தோஷப்படு! அந்த மகிழ்ச்சியை கெடுக்க நான் தயா ரில்லை. மற்றபடி, நீ மட்டுமல்ல, உன் நிழல் கூட என் மேல் படக்கூடாது. நினைவிருக்கட்டும்!'' என்று பேச்சின் கடைசிப் பகுதியை, உறுமலாக முடித்தவன், அறையின் ஒரு மூலையில் இருந்த கதவைத் திறந்து உள்ளே சென்று, கதவை உட்புறமாக அழுத்தி சத்தம் வரும் வகை யில் தாளிட்டான்.

பின்னே வந்து தொல்லை செய்யாதே என்று, அடித்துச் சொல்கிறானாம்!

வெட்கமற்று, அவன் பின்னே ஓடி, கதவைத் திறக்கு மாறு கெஞ்சிக் கூத்தாடுவாள் என்று எண்ணினா னாக்கும்!

அவன் அறிந்த மகாலட்சுமி, அவ்வளவு ரோஷமற்ற வளா?

இந்தப் பணத்தை இப்படிச் சட்டென கண்ணில் தெரியும் விதமாக வைத்திருப்பது மிகவும் ஆபத்தாகி விடக்கூடும். எனவே, பெட்ஷீட்டை அதன் மேல் விரித்து போட்டு மூடினாள்.

சுற்றிலும் பார்த்தாள். அறையின் மறுபுறமும், கதவு தெரிந்தது. ஆனால், உரிமையோடு அதைத் திறந்து பார்க்க மனம் வரவில்லை.

அந்தப் பெரிய அறையின் ஒருபுறத்தில் படுக்கை கிடக்க, மறுபக்கத்தில் இரண்டு சோஃபாக்களும், சிறு

வட்ட மேஜையுடன் கிடந்தன. ஒரு சோஃபாவில் பெரும் பாரமாகக் கனத்த தலையைச் சாய்த்து அமர்ந்தாள்.

காலையில் மனோரஞ்சன் வந்து பார்க்கும்போதும், அவள் அப்படியேதான் அமர்ந்திருந்தாள்.

தூங்கித்தான் விழித்தாளோ, அல்லது ஆள் அரவம் உணர்ந்து மூடியிருந்த கண்களைத் திறந்தாளோ, எதிரே கணவனைக் கண்டதும், அவசரமாக எழுந்தாள்.

இரவு முழுவதும் அசைவற்று அமர்ந்திருந்ததாலோ என்னவோ, லேசாகத் தடுமாறியவள், சட்டென அப்ப டியே அசையாது நின்று சமாளித்தாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் பேசாமல் நின்றவன் ''இங்கே வா'' என்று வந்த திசைக்கு எதிர்ப் புறமாகத் திரும்பி நடந்தான். அங்கிருந்த இன்னொரு கதவைக் காட்டி, ''இது உனக்கான தனி அறை. இப்படி சோஃபாவிலேயே கிடந்திராமல், இதையேனும் பயன் படுத்தியிருக்கலாமே'' என்றான், குற்றம் சாட்டுவது போல.

''என் அறை என்று எனக்குத் தெரியாது. உரிமையற்று எதையும் பயன்படுத்த எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் அவள்.

''குத்தலாகப் பேசி விட்டதாக நினைப்பா?'' என்றான் அவன் சினம் துளிர்க்க.

''நான் சாதாரணமாக என் பழக்கத்தைச் சொன்னேன். அது, குத்தலாகப் பட்டால், தப்பு என்னது ஆகாது.''

கதவருகே நின்றபடியே பேச்சு நடந்தது.

அன்றாட வாழ்வு பற்றி, அவளுக்கு, மனோரஞ்ச னுடன் பேச வேண்டியிருந்தது. ஒன்றும் சொல்லாமல், அவன் அலுவலுக்குச் சென்று விட்டால், அவள்



திண்டாடிப் போவாள். ஆனால், பேச வேண்டும் என்று, அவனிடம் கேட்கவோ, அதற்கு ஒரு பேச்சு வாங்கிக் கட்டிக் கொள்ளவோ மகாலட்சுமிக்கு மனமில்லை.

அவள் யோசிக்கும்போதே, ''உன் பொருட்கள் உள்ளே இருக்கின்றன. காலை வேலைகளைச் சற்று சீக்கிரமாக முடித்துக் கொண்டு வா. இங்கே அன்றாட வாழ்வு பற்றிச் சொல்ல வேண்டும்'' என்றான் அவனே!

அவள் கேட்கத் தயங்கியது அவன் வாயாலேயே வெளிவரவும், உள்ளூர நிம்மதியோடு அறைக்குச் சென் றாள் அவள்.

வேகவேகமாகப் பல் துலக்கிக் குளித்தபோதும், தலையைத் துவட்டியபடியே மகாலட்சுமி வெளியே வருவதற்கு, இருபது நிமிஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஐந்தாறு நிமிஷங்கள் முன்னதாக முடித்திருக்கலாம். ஆனால், கட்டி வைத்திருந்ததைப் பிரித்து, பேஸ்ட், பிரஷ் எல்லாம் எடுத்து முடிக்கச் சற்று நேரம் பிடித்து விட்டது.

என்ன சொல்வானோ என்ற கலக்கத்துடனேயே வந் தால், நல்லவேளையாக அவன் சோஃபாவில் அமர்ந்து பத் திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

அரவம் கேட்டு நிமிர்ந்தவனின் பார்வை, மீண்டும் பத்திரிகைக்கு இறங்கியது.

பார்க்கக்கூடப் பிடிக்காத வெறுப்பு என்ற வலியை மறைத்துக் கொண்டு, ''ஏதோ சொல்ல வேண்டும் என் றீர்களே!'' என்று கேட்டாள் மகாலட்சுமி.

''இம் உட்கார்'' என்று பத்திரிகையை மடித்து, முன்னே இருந்த சிறு மேஜை மேல் போட்டான், மனோரஞ்சன்.

ஒரு வினாடித் தயக்கத்தின் பின், ''என்ன என்று உனக்கே புரிந்திருக்கும். அம்மாவிடம் மறுத்துப்பேச முடியாமல் தான், நம் திருமணமே நடந்தது. இப்போது நம் தனி வாழ்வு தெரிந்தாலும், கஷ்டப்படுவார்கள். அதனால், இந்த நிலை, நாலு சுவர்களுக்கு வெளியே போகக் கூடாது'' என்றான் தாழ்ந்த குரலில் தெளிவாக.

என் அம்மா மட்டும் பூரித்துப் போவார்களா என்று எண்ணியதைக் கூறாது ''அதையே, நான் உங்களிடமும் எதிர்பார்க்கலாமா?'' என்று கேட்டாள் அவள்.

''அதிலென்ன சந்தேகம்? மற்றவர் முன்னிலையில், உன்னையோ, உன் தந்தையையோ கூட, நான் அவ மரியாதையாக நடத்தவில்லையே'' என்று பதில் கொடுத்தான் மனோரஞ்சன்.

அவமதித்தால் கூடத் தப்புச் சொல்ல முடியாதுதான். ஐந்து ஆண்டுகளுக்கு முந்திய காட்சி வலியுடன் நினைவு வர, ''இப்போது நீங்கள் குத்துகிறீர்களா?'' என்று கம்மிய குரலில் வினவினாள் அவள்.

கூடவே, எப்போதும் மனதில் இருக்கும் விளக்கம் சொல்லும் வேகம் உந்த ''ரஞ்சன், அன்று நான் அப்படி நடந்ததன் காரணம்...'' என்று தொடங்கினாள்.

''ஏய்.. பொறு'' என்று அதிகாரமாக கை உயர்த்தி, அவளை அடக்கினான் மனோரஞ்சன். ''நான், உன்னிடம் எல்லாவற்றையும் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. முதலாவது, இந்த ரஞ்சன் என்ற அழைப்பு, இனி ஒரு போதும் உன் வாயிலிருந்து வரக்கூடாது. உன் ரஞ்சனாக என்னை நீ எப்போதுமே, எண்ணியது கிடையாது. அன்று, பணக்காரப் பெண்ணின் பொழுது சுவாரசிய



மாகக் கழிய உதவியதற்கு கிடைத்த பட்டம், இப்போது, பணத்துக்காக 'ரஞ்சனாக'த் தெரிகிறேன். அந்த அழைப்பைக் கேட்கவே அருவருப்பாக இருக்கிறது. அதை அன்பு என்று எண்ணி ஏமாந்ததை நினைக்கை யில் ஆத்திரம் வருகிறது. இப்போதே, பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு பேசுகிறேன். இன்னொரு தடவை இப்படி அழைத்து, எனக்கு வெறி பிடிக்க வைக்காதே'' என்று எச்சரித்தான். ''அத்தோடு, பழைய கதையைப் பேசியும் எனக்கு வெறுப்பு மூட்டாதே. அது வும் முடிந்த கதைதான். விட்டுத் தொலை'' என்று எரிச்சலோடு கூறி முடித்தான்.

அதெப்படி விட முடியும்? அவளது நியாயம், சொல் லாமல் எப்படி புரியும்?

''இப்படிச் சொன்னால், எப்படி ர... வந்து, மனோ ரஞ்சன்? அன்று நடந்தது என்ன என்று முழுதாகத் தெரிந்தால்தானே, என் மேல் தப்பு இல்லை என்று, உங்களுக்குப் புரியும்? ஆனால், அதைக் கேட்கவே மாட்டேன் என்றால் எப்படி?'' என்று விடாமல் கேட்டாள் மகாலட்சுமி.

''ச்சு. அப்படிப் பெரிதாக என்ன நடந்ததாகச் சொல்லி விடப் போகிறாய்? மிஸ்டர் முத்துமாணிக்கம், என்னைக் கொன்றுவிடத் திட்டமிட்டிருந்ததாகச் சொல்லுவாய். அதற்குப் பயந்து, அவர் சொன்னபடி ஆடியதாகவும் அளப்பாய். அவ்வளவுதானே? ஆனால், இந்தக் கதையைச் சொல்லுமுன், இன்னொன்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு சொல்லு. இந்த மாதிரி ஏதும் சொல்லியிருந் தால் பயப்பட வேண்டாம் என்று உன்னிடம் சொன் னேன். உன்னைக் காவல் நிலையத்துக்கே அழைத்துப்

போய் பாதுகாப்போடு திருமணம் செய்வதாகவும் சொன்னேன். ஆனால், நீயோ...! ஆனாலும் பரவா யில்லை. நீ செய்ததிலும் ஒரு நன்மை விளைந்திருக் கிறது. இல்லாவிட்டால், சீக்கிரமாக பணக்காரன் ஆக வேண்டும் என்கிற வெறி, எனக்கு வந்திருக்காது. ஒரே குறியாக, இப்படிப் பணம் சேர்த்தும் இருக்க மாட்டேன். அந்த வகையில், உனக்கும், உன் தந்தைக்கும் நன்றிதான் செலுத்த வேண்டும். அத்தோடு விடு'' என்று மேலும் வெறுப்பை உமிழ்ந்தான் மனோரஞ்சன்.

இல்லை. அவன் சொல்லுகிற மாதிரி இல்லை. அது என்ன மாதிரி மிரட்டல் என்று தெரிந்தால், அவன் இளகவும் கூடும்! ஆனால்...

''இது நீங்கள் சொல்லுகிற மாதிரி, வழக்கமான மிரட்டல் இல்லை, மனோரஞ்சன். ஆனால், இங்கே உள்ள வழக்கம் எனக்குத் தெரியாது. ஒருவேளை, நீங்கள் அத் தையைப் போய்ச் சந்திக்கத் தாமதம் ஆகிறது என்றால், பிறகு சொல்கிறேன்'' என்றாள்.

சீக்கிரமாகச் சொல்ல வேண்டும் என்று, அவளுக்குத் துடிப்புதான். ஆனால் வேறு கவனத்தில், இவன் இதை அரைகுறையாகக் கேட்டு, விஷயம் புரியாமல் ஒதுக்கி விடக் கூடாதே!

''ஏன் பிறகு? கதையை தயார் பண்ண, அவகாசம் தேவையா?''

கண்களை ஒருதரம் இறுக மூடித் திறந்தாள், மகா லட்சுமி. ஒரு மூச்சை எடுத்துவிட்டு, ''எந்த அவகாசமும் எனக்குத் தேவையில்லை, மனோரஞ்சன். இது, கதையும் அல்ல. தாய், மகனின் எந்தப் பழக்க வழக்கமும்



என்னால் கெடக்கூடாது என்று நினைத்தேன். அவ் வளவே. மற்றபடி, நீங்கள் எப்போது கேட்பதானாலும் சொல்லத் தயாராகவே இருக்கிறேன்! இந்த வினாடியே என்றாலும்!'' என்று அழுத்தமாகக் கூறி முடித்தாள்.

''எப்படியும் சொல்லியே தீருவது என்று இருக் கிறாய்!''

''வேறு வழியில்லை, மனோரஞ்சன்! சொன்னால் தானே உங்களுக்குப் புரியும்?''

''புரியாமல் என்ன? உன் தந்தையின் பிடிவாதம்தான், ஊரறிந்தது ஆயிற்றே! அதில் கொஞ்சமாவது, உனக்கு வந்திராதா? மனதளவில், நீ அவரது பிம்பமாகக் கூட இருக்கலாம். எப்போது பார்த்தாலும், நாயாய் விரட்டிக் கொண்டே இருப்பதை தவிர்ப்பதற்காகவேனும், இப் போதே சொல்லித் தொலைத்து விடு'' என்றான் அவன் எரிச்சலைக் கொஞ்சமும் மறையாத குரலில்.

''ஆனால், அத்தை?''

''ரொம்பத்தான் உருகுகிறாய்! ஆனால் உருக்கம், என் அம்மாவுக்குத் தேவைப்படாது. அம்மா காலையிலேயே காபி குடித்து விடுவார்கள். பொதுவாக, அடுத்து நாங்கள் சந்திப்பது, காலை உணவின்போதுதான், இடையில் குடிப்பதற்கு ஏதாவது தேவை போல இருந்தால், சமைய லறைக்குப் போய்க் கேட்டு வாங்கிக் குடித்து விடுவேன். நீயும் அதையே செய்யலாம். இப்போது ஏதாவது வேண்டுமென்றால்...'' என்று அக்கறையற்றுக் கேட்டான் அவன்.

தொண்டை காய்ந்து வறண்டு போனால் கூட இந்த வாய்ப்பை இடையில் அவள் விடமாட்டாளே!

மகாலட்சுமி மறுப்பாகத் தலையசைக்கவும், தோளைக் குலுக்கி ''காலை உணவுக்கு இன்னும் நேரம் இருப்ப தால், அதற்குள் உன் கதையை, அளந்து முடி! எப்படி யும், எட்டரை மணிக்குள் முடிந்து விடும்தானே?'' என்று அலட்சியமாகக் கேட்டான் அவன்.

நம்பக்கூடாது என்ற முடிவோடு கேட்கிறான். ஆனால், மறைவாகத் துப்பாக்கியை வைத்து மிரட்டுகிற, வழக்கமான கதையில்லை என்று உணரும்போது, உண்மையோ என்று, கட்டாயமாக யோசிக்கத் தோன் றும் என்ற நம்பிக்கையுடன், மகாலட்சுமி தொடங்கி னாள்.

அதிலும், அந்தத் தெரு கடைக்காரர் தன்மை பற்றி அறிந்தவன் என்பதால் நம்பவும் கூடும்.

தாத்தா வீட்டிலிருந்து சந்தோஷமாகத் திரும்பி வந்த தில் இருந்து, நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் அவள் சொல்லச் சொல்லச் சிலை மாதிரி முகத்தில் எந்தவித மாற்றமும் இன்றியே, மனோரஞ்சன் கேட் டான்.

தந்தை தயாரித்திருந்த, அந்த மஞ்சளில் நீல நிற மூலைகளுடன் கூடிய ஃபைல் பற்றி, விளக்கமாகச் சொன்னபோதுகூட, அவனிடம் வேறுபாடு இல்லாதது, அவளுக்குச் சற்று வருத்தம்தான்.

ஆனால், இதென்ன சினிமா, நாடகக் கதையா, அப் புறம், அப்புறம் என்று கேட்பதற்கு? மனதை ஒருமுகப் படுத்திக் கவனத்துடன் கேட்கிறான் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டு, முழுதையும் தொடர்ந்து சொல்லி முடித்தாள், மகாலட்சுமி.



அவளது பேச்சு நின்றதும், மனோரஞ்சனின் மணிக் கட்டைத் திருப்பிக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

''பரவாயில்லை. காலை உணவுக்குச் செல்ல, இன் னும் முப்பது நிமிஷங்களுக்கு மேலாக அவகாசம் இருக்கிறது. அதற்குள் நீ தயாராகி விடுவாயல்லவா?'' என்று சாதாரணமாக வினவியவனைத் திகைப்புடன் பார்த்தாள் மகாலட்சுமி.

எவ்வளவு நம்பிக்கையோடு, எல்லாம் சொன்னாள்! பெரிதாக ஆர்வத்தைக் காட்ட வேண்டாம், அதில் சந் தேகம் கேட்கும் அளவுகூட, அவனிடம் சலனம் இல் லையே!

தொண்டையடைக்க ''நீங்கள்... நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே!'' என்று அழாக் குறையாக வினவி னாள் அவள்.

''எதைப்பற்றி... ஓ, நீ சொன்ன கதை பற்றிய விமரி சனமா? கடைக்காரர் மகளில்லையா? கற்பனை சற்று வேறுபாடாய் விரிந்திருக்கிறது. விறுவிறுப்பாகச் சொல்ல வும் தெரிகிறது. அவ்வளவுதானே, இனிக் கிளம்புகிறாயா?'' என்று குரலில் மாறுபாடே இல்லாமல் கூறினான் அவன்.

நம்புகிறேன்... நம்பவில்லை என்று ஒன்றும் இல் லாமல், என்ன இது? என்று தவிக்கும்போதே, அவளுக் குப் புரிந்தது.

அப்படி இல்லை, மாறுபாடு இல்லாதது போலக் காட்டுவதே, அவளை வருத்துவதற்காக! உன் வார்த்தை களை ஒரு சிறிதும் நம்பவில்லை என்று, ஓங்கி உச்சியில் அறைந்து, தெளிவுபடுத்துகிறானாம்!

தந்தையின் குயுக்தி அடியோடு வேறுபாடானது என்பதால், அவன் உண்மை உணர்வான் என்று நினைத் தாளே! அதுவும் கடைக்காரர் மகளின் கற்பனையாக அல்லவா மாறிப் போயிற்று! அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது?

கெஞ்சக்கூடாது என்று நினைத்திருந்ததை மீறி ''நான் சொல்வது உ.... உண்மை, மனோ. தயவு பண்ணி நம்புங்கள்!'' என்று வேண்டினாள் அவள்.

''எப்படி நம்புவது?'' என்று வினாடிக்குள் சீறிக்கொண்டு வந்தது அவனது கேள்வி ''என்ன மாதிரி நடித்தாய்? திருமணத்துக்கு அப்பா சம்மதித்து விட்டார். அன்றைக்கு நல்ல நாள், நாலுபேரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார் என்று என்ன மாய்மாலம் அன்று காலைகூட, நான் வருவதை உறுதி செய்து கொண்டாயே! வீட்டுக்கு வரவழைத்து, நட்பாய்ப் பழகியவர்கள் முன்னிலையில், என்ன மாதிரி என்னைக் கேவலப்படுத்தினாய்? நல்ல வேளை! முத்துமாணிக்கத்தை முழுதாக நம்ப மனம் வராததால், நான் அம்மாவை வரச் சொல்லவில்லை. உன் தகப்பனார் தகராறு செய்தால், மீறி அங்கிருந்து உன்னை அழைத்துப் போய் அம்மாவிடம் காட்டலாம் என்று மட்டும் எண்ணியிருந்தேன் நீ வருவாய் என்ற நம்பிக்கை! ஆனால்... சே! உன்னை நம்பி வந்த எனக்கு, என்ன மாதிரி கேவலம் நேர்ந்தது!'' என்று கொதித்தான் மனோரஞ்சன்.

''அது, வேறு வழியில்லாமல் செய்தது. மனோ. அந்த ஃபைலைப் பார்த்தீர்கள் என்றால், உங்களுக்கே தெரியும். ஐயோ, இப்படி ஒரு நிலை வரக்கூடும் என்று ஒரு சிறு நம்பிக்கை இருந்திருந்தாலும், எப்படியாவது அதைத் தேடி எடுத்து வைத்திருப்பேனே!'' என்று தவித்தாள் மகாலட்சுமி.



''ஓ! அதாவது, நீ சொல்லுகிற அந்த ஃபைல், எங்கே இருக்கிறது என்று, இப்போது உனக்குத் தெரியாது என் கிறாயா?''

அந்த ஃபைலைப் பார்த்தால், ஒருவேளை அதன் உண்மைத் தன்மை விளங்கக்கூடும் என்று அவன் கேட்பதாக நினைத்து, அப்போது நடந்ததைச் சொன் னாள் அவள் ''நீங்கள் அங்கிருந்து கிளம்பிப் போன பிறகு, கொஞ்ச நாள் ரொம்ப மோசமாகக் கிடந்தேன். சற்றுத் தேறின பிறகு, அந்த ஃபைலை அழித்து விடுங்கள் என்று, அப்பாவிடம் நானே கேட்டேன். அதைக் கேட் டதே தப்பாக, நான், உங்களை நினைப்பதாகச் சொன் னார். இப்போது அழிக்க முடியாது. நீ ஒழுங்காக இருப் பாய் என்று நிச்சயமான பிறகு பார்க்கிறேன் என்று விட் டார். ஐந்து ஆண்டுகளாக அவர் அந்தக் குறை காண முடியாதபடி, மிகவும் ஜாக்கிரதையாக இருந்திருக் கிறேன். ஆனால், இப்போது அப்பா அந்த ஃபைலை வைத்திருப்பாரா, இல்லையா என்று எதுவுமே, தெரிய வில்லையே! வைத்திருந்தாலும் எங்கே வைத்திருப் பாரோ'' என்றாள் கவலையுடன்.

''ஏன்? அது தெரிந்து எடுத்து வந்ததாக ஒரு பொய் யான ஃபைலை உருவாக்கி, என்னிடம் கொண்டு வந்து காட்டப் போகிறாயா? காட்டினாலும், நான் நம்புவேன் என்றா நினைத்தாய்?''

ஷாக் அடித்தது அவளுக்கு.

அவளை நிரபராதியாகக் காட்டக் கூடிய ஒரே ஆதாரம், அவளுடைய தந்தை பொய்யாகத் தயாரித்து வைத்

திருந்த அந்த ஃபைல்! ஆனால் அதைக் காட்டினாலும் நம்பமாட்டேன் என்கிறானே!

''பின்னே என்னதான் செய்வது?'' என்று திகைப்புடன் கேட்டாள் மகாலட்சுமி.

தோளைக் குலுக்கிவிட்டு, ''எதுவும் செய்ய முடியாது'' என்றான் அவன் தீர்மானமாக.

அதெப்படி, எதுவும் செய்ய முடியாமல் போகும்? அப்புறம், அவர்களது வாழ்க்கை என்ன ஆகும்? 'முடியா இரவே' என்று சோஃபாவில் உட்கார்ந்திருந்ததை நினைக்கையில், மகாலட்சுமியின் நெஞ்சு நடுங்கியது! இதை வாழ்வு முழுவதும் எப்படி சகிப்பது?

# 11



மலைப்புடன் நோக்கியவளைப் பார்த்து, மனோ ரஞ்சன் சொன்னான்.

''கடைசித் தரமாகச் சொல்லுகிறேன், கேட்டுக்கொள், மகாலட்சுமி. வாழ்க்கை முழுவதும், தனிமையில், இனி நீ யாரோ, நான் யாரோதான். நல்ல இல்லறத்தின் அடிப்படை நம்பிக்கை. ஆனால், இனி எந்த வகையிலும் நான் உன்னை நம்பப் போவது இல்லை எனும்போது, உன்னோடு மற்ற சுகங்கள் பற்றி நினைப்பது கூட அசிங்கம்! உன் சாகசத்தையும் நடிப்பையும் நம்பி இன்னமும் ஏமாற, நான் பழைய அசட்டு மனோரஞ்சனும் இல்லை! இனி நம் வாழ்வு இவ்வளவுதான். வாழ்க்கை முழுவதும், இப்படியேதான் இருக்கும். ஒரு மோசமான தகப்பனுக்குப் பிறந்த அறியாப் பெண் என்று எண்ணி,



உன் மேல் ஆசைப்பட்ட பாவத்துக்கு, இந்த வாழ்வு, எனக்கு தண்டனை. உனக்கு... காரணத்தை நான் சொல்லத் தேவையே இல்லை! ஆனாலும், இந்த வறண்ட வாழ்விலிருந்து மீள உனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன். அதைப் பயன்படுத்தித் திருமணத்தை நிறுத்தியிருந்தாய் என்றால், உன் வீட்டிலேயே நீ நிம்மதியாக இருந்திருக்கலாம். ஆனால், நான் பயங்கரமாகச் சூடு பட்ட பூனை என்பதை மறந்து, உன் மாய்மாலத்தால் என்னை மறுபடியும் மயக்கி விடலாம் என்று நினைத்தாய் பார், அது சுத்த மடத்தனம். ஒரு போதும் நடப்பதற்கில்லை, நடக்காது! அத்தோடு, இந்தப் பேச்சும், இத்தோடு முடியட்டும். இதற்கு மேல் அம்மாவைப் பட்டினி போட, என்னால் முடியாது. நான் போகிறேன். முகத்தை ஒழுங்காக வைத்துக் கொண்டு நீயும் வந்து சேர்'' என்றவன், எழுந்து வெளியே போய்விட்டான்.

முகத்தை ஒழுங்காக வைத்துக் கொண்டு!

'ஹோ'வென்று வந்தது அவளுக்கு. ஆனால் இப்படி இரக்கமற்றுப் பேசுகிறவனிடம் அழுது வேறு இறங்குவதா?

கூந்தலில் ஒரு கிளிப்பை மாட்டிக் கொண்டு, கண்ணாடியில் பார்த்தாள். புருவத்தைக் கையால் வருடிச் சுளிப்பை நீக்கிக்கொண்டு, மாமியாரைத் தேடிப் போனாள்.

''அடப் போங்கம்மா. இதென்ன ஜெய்ப்பூர் அரண்மனையா? எல்லாம் தானே வழி கண்டு பிடித்து வருவாள்! இன்று காலைச் சாப்பிட என்ன செய்யச் சொன்னீர்கள்? முதலில் அதைக் கொண்டு வரச் சொல்லுங்கள். உங்கள் செல்ல மகனுக்குப் பசி காதை அடைக்கிறது!'' என்று மனோரஞ்சன் சொல்லிக் கொண்டிருந்தான்.

மனைவியை அழைத்து வருமாறு, தாயார் சொல்லி யிருக்க வேண்டும். அவன் விளையாட்டுப் பேச்சா லேயே, மறுக்கிறான்!

இந்த மாதிரிப் பேச்சுக்களுக்குப் பழகிக் கொள்ள வேண் டும். சேர்ந்து, அவற்றை விளையாட்டு போலக் காட்டிக் கொள்ளப் பழக வேண்டும்!

ஆனால் உணவுப் பதார்த்தங்களை மேஜைக்கே கொண்டு வரவிடாமல், மருமகளுக்காக, மகனைக் காக்க வைக்கிறார்களே மாமியார்!

அசைவு உணர்ந்து, ஏறிட்டுவிட்டு ''வாம்மா!'' என்று மருமகளை அன்பாக வரவேற்றாள் கருணாகரி.

சொல்லி வைத்தது போல, உடனே மேஜைக்கு உணவு வரவும் ''வா, உட்கார்ந்து சாப்பிடு'' என்று உபசரித் தாள்.

இதமாக இருந்தபோதும், அவசரப்பட்டு உட்காராமல் ''முதலில், உங்களுக்கு வேண்டியதைப் பார்ப்போம், அத்தை. சும்மாவே, உங்கள் உணவு நேரம் என்னால், கொஞ்சம் தாமதமாகி விட்டது. சாரி. உங்களுக்கு என்ன எடுத்து வைக்கட்டும், சொல்லுங்கள்?'' என்று கேட்டாள்.

முகம் மலர, ''அதெல்லாம் சரோம்மா பார்த்துக் கொள்வார்கள். நீ உட்கார்'' என்று கை நீட்டி, அவளைப் பற்றி உட்கார வைத்தாள், மாமியார்.

''உத்...தம மருமகள்! இல்லையாம்மா?'' என்றான் மனோரஞ்சன் சிலாகிப்பது போல.

அவன் சொன்ன விதம் சீண்டிவிட, ''பொறாமைப் படாதீர்கள்!'' என்று கிண்கிணியாகச் சிரித்தாள் மகா லட்சுமி. ''வேண்டாம் மனோ. இப்படிக் காந்தினால், அத்தைக்கு வயிறு கெட்டுவிடும். வேண்டுமானால், இனிமேல் உத்தம மனைவியாக, உங்களுக்கு வேண்டி யதை முதலில் கவனிக்கிறேன்'' என்றாள் மகாலட்சுமி.



ஆனால் ''பரவாயில்லை, மகாலட்சுமி. படிக்கிற காலத்தில் இருந்தே, தனியாக இருந்து. என்னை நானே கவனித்துப் பழக்கம் எனக்கு. அதனால், உத்தம மரு மகளாக, நீ அம்மாவுக்கு மட்டும் வேண்டியது பார்த்துச் செய்தாலே போதும்!'' என்று வெறும் விளையாட்டுப் பேச்சில்கூட, அவளது சேவை, தனக்குத் தேவையில்லை என்று தெரிவித்தான் மனோரஞ்சன்.

ஆனால் இந்த உள் குத்து புரியாமல் ''மருமகளோ, மனைவியோ, மகாலட்சுமி உத்தமி என்பது, எப்படியும் நிச்சயம்! உனக்காக ஐந்து ஆண்டுகள், ஒரே மனமாகக் காத்திருந்தவள் ஆயிற்றே! அதுவும் அவளுடைய அப்பா வேறு இடம் பார்க்கும்போது, வெளிக்குத் தெரியாமல், முக்கியமாக சம்பந்திக்குத் தெரியாமல், தட்டி விட்டுக் கொண்டே வேறு இருந்திருக்கிறாள்!'' என்று கருணாகரி கூறவும், மனோரஞ்சனைப் போலவே, மகாலட்சுமியும் அதிர்ந்து நோக்கினாள்.

இருவர் பார்வைக்கும் பதிலாக, மருமகளிடம் ஒரு கனிந்த புன்னகையோடு ''செல்வாதான் சொன்னா ளம்மா. உங்கள் திருமணம் பற்றிக் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு தரம் சொன்னாள். அதனால் தான். தங்கை திருமணத்தின்போது, ஒரிருவர் அது பற்றி பரிதாபப்பட்டுப் பேசியபோதுகூட, நீ அதைப் பொருட் படுத்தவே இல்லை போல! சிரித்த முகமாய், நீ ஓடி ஓடி வேலை செய்ததை நானே பார்த்தேனே! அப்போதே மகாவை எனக்குப் பிடித்தது, மனோம்மா கடைசியாக

அவளே என் மருமகளாக வந்திருக்கிறாள். அதிசய மில்லை?'' என்று மகனிடம் கேள்வியோடு முடித்தாள் அன்னை.

''ஆமாமாம். எட்டா...வது உலக அதிசயம். நம் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்து, காலை உணவு சாப் பிடுகிறது! பத்திரிகை, டீ.வி. சேனல் எல்லாவற்றுக்கும் செய்தி அனுப்ப வேண்டியதுதான்'' என்று கேலி போலக் கூறிச் சிரித்தான் மனோரஞ்சன்.

கணவனின் குரலில் ஏதோ மகாலட்சுமியை நெரு டியது.

மனைவியை நல்லவளாகக் காட்டிய இந்தப் பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை! இது ஒரு வருத்தம் என் றால், அவளுக்கே தெரியாமல் நடந்த உரையாடலுக்காக, அவள் என்ன செய்ய முடியும்? எரிச்சல் படுகிறானே!

ஆனால், தனிமையில் பார்த்தபோது, மனோரஞ்சன் வேறு விதமாக, அவள் மீது பாய்ந்தான் ''பயங்கரமான ஆக்டோபஸ். நீ ஒரே விஷயத்தில் எத்தனை விதமாகச் செயல்படுகிறாய்! நல்லவள் மாதிரி, சித்தப்பா, சித்தி யிடம் ஒரு வேஷம், அம்மாவை வளைக்கத் தங்கை மூலம் ஒரு குட்டி வசனம், மாஸ்டர் பீசாக, இங்கே என்னிடம் ஒரு முழு நீள மர்மக் கதை! உன் கெட்டிக்காரத்தனம் தெரியாமல், ஒரு நல்ல பெண், முத்துமாணிக்கத்தின் வீட்டில் பிறந்து அவதிப்படுவதாக நினைத்தேன் பார்! என்ன மடத்தனம்!'' என்றபோதுதான், இயல்பாக நடந்த அத்தனையையும் பின்னின்று நடத்தியவள் அவளே என்று, அவன் தன் மேல் குற்றம் சுமத்துவதே, மகாலட் சுமிக்குப் புரிந்தது.

எப்படிச் சுற்றி வளைத்துத் தப்பை அவள் மேல் கொண்டு வருகிறான்! கொஞ்சம்கூட நியாயமே இல் லாத குற்றச்சாட்டு! அப்படியில்லை என்றால், நம்பவும் மாட்டானே!



''உங்கள் அம்மாவிடம் இப்படிப் பேசும்படி, நான் செல்வாவிடம் சொன்னதில்லை, மனோ. அத்தோடு, நான் யார் முன்பும் நடிக்கவுமில்லை'' என்றாள் தவிப்புடன்.

இன்னமும் தூண்டிவிட்ட மாதிரி ஆயிற்று, அவனுக்கு.

''நடிக்கவே இல்லையா? அடிப்பாவி! என்னிடமே இப்படிச் சொல்ல, உனக்கு வாய் கூசவில்லை?'' என்று ஆத்திரத்துடன் கேட்டனன்.

அவனது கேள்வி சரிதான். தந்தையின் மிரட்டலுக் காக, அவரால், அவனது வாழ்வு அழிந்து விடக் கூடாதே என்பதற்காக, ஒரு தரம் அவள் நடித்தாள். ஆனால் ஏன் அப்படிச் செய்தாள் என்று முழு விவரமும் தெரிவித்த பிறகும், நம்ப மறுக்கிறானே! இதற்கு என்ன செய்வது?

நம்பிக்கை இல்லாதபோதும், ''தயவு பண்ணி ஒரே ஒரு தடவை, நான் சொன்னது மெய்யாக இருக்கக் கூடுமோ என்று யோசித்துப் பார்க்கக் கூடாதா, மனோ?'' என்று மன்றாடிக் கேட்டாள், மகாலட்சுமி.

''நம்புவதா? உன்னையா? பெரும் சூடு பட்டு, வெந்து போய்க் குற்றுயிராகக் கிடக்கும் பூனையம்மா, நான்! இன்னொரு தரம் உன்னை நம்பினால், எனக்குக் கேவலம் ஐந்து அறிவு கூட இல்லை என்று ஆகி விடாதா?''

நக்கல்! இளக்காரம்! உண்மையிலேயே குற்றுயிராகக் கிடப்பது என்ன என்றோ, அப்படிக் கிடந்தவள் அவள் தான் என்றோ, அவனுக்கு என்ன தெரியும்? சொன்னாலும் நம்பமாட்டான்.

''நீங்கள் சொல்வது பற்றி, என்னால் அபிப்பிராயம் சொல்ல இயலாது. மனோரஞ்சன். ஆனால், ஊரில் தானாக நடப்பதற்கு எல்லாம் நான்தான் காரணம் என்று நீங்கள் எண்ணத் தொடங்கினால், அதுவும் புத்திசாலித் தனம் ஆகாது'' என்றுரைத்து, அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன் அறையை நோக்கி நடந்தாள் அவள்.

மனோரஞ்சன் விறைத்து நிமிர்வது, அவளது பார்வை வட்டத்துள் தெரிந்தபோதும், மாறுபாடின்றி, பிடிவாத மாக அதே நடையைத் தொடர்ந்தாள் மகாலட்சுமி.

ஆனால், அவள் அறைக்குள் சென்று கதவைச் சாத் தும் வரையிலும், அதற்குப் பின்னும் கூட, மகாலட்சுமி எதிர்பார்த்த சீறல், கத்தல், அலட்டல் எதுவும் கேட்கவே இல்லை!

சொல்லை மீறிய ஆத்திரம் போலும் என்று, வருத்தத் துடன் எண்ணிக் கொண்டாள் மகாலட்சுமி.

பானைச்சோற்றில் ஒரு சோறு பதமாக, மகாலட்சுமி மனோரஞ்சனின் இல்லற வாழ்வின் முதல்நாள், இப்படிக் கழிந்தது.

ஆனால், தொடர்ந்த நாட்களில் சிறு வேறுபாடாக, முதல் நாளின் கோபம், வெறுப்பின் விளைவான ஆத் திரப் பேச்சுகள் அதிகம் நேரவில்லை.

பலனற்றது என்று தெரிந்து, தன்னை நியாயப் படுத்தும் முயற்சிகளை மகாலட்சுமி கைவிட்டு விடவே, அவன் கனன்று எழ வாய்ப்பும் இல்லாது போயிற்று போலும்.

'நறுக்' என்று அவ்வப்போது மனோரஞ்சன் ஏதாவது சொல்வதுதான். வலித்தாலும் பெருமளவு மகாலட்சுமி பொறுத்துப் போய்விடுவாள். நியாயமற்ற குத்துக்களை



முகம் வாடாமல் சகித்துக் கொள்வது, முத்துமாணிக்கத் துடைய மகளுக்குக் கடினமில்லையே!

ஆனால், மகாலட்சுமியின் உண்மையான வேதனை, வேறாக இருந்தது.

செல்வலட்சுமியின் திருமணத்தை அடுத்து, மறுவீடு விருந்து, எதிர் விருந்து, பல்வேறு உறவின் முறை அழைப் புகள் என்று அடிக்கடி கணவனோடு செல்வா செல்ல வேண்டியது இருந்தது. இப்போதும், அவை அனைத்தும் மகாலட்சுமியின் முறையாயின!

அதிலும், பிரிந்திருந்து சேர்ந்த சொந்தம் என்பதால், பிரிந்து செல்லுமுன், மனோரஞ்சனுடைய தந்தை எல்லோருக்கும் பிரியமான உறவினராகவும் இருந்தபடி யால், இவர்களுக்கான அழைப்புகள், இன்னமும் அதிக மாகவே இருந்தன. அவர்களைப் பற்றி அறியும் ஆர்வ மும் இருக்குமல்லவா?

மனோரஞ்சன் வளம் பெருக்கி வந்திருந்தது வேறு!

எனவே குடும்பமாகச் செல்ல வேண்டிய நிகழ்ச்சிகள் அதிகம் இருந்தன.

குடும்ப விழாக்களில், செந்தில்நாதனுடைய பெரிய தொழில் குடும்பம் என்பதாலும், மகாவும், செல்வாவும் சகோதரிகளாக இருந்தாலும், அவர்களையும் சேர்த்து அழைத்தார்கள்.

தங்கையை அடிக்கடி சந்திக்க முடிந்தது. மகாவுக்கு சந்தோஷம்தான். ஆனால், அதில் ஒரு பெரிய சிக்கலும் இருந்தது. வாய்விட்டு எவரிடமும் அவள் பகிர்ந்து கொள்ள முடியாத சிக்கல்!

திருமணமான நாளில் இருந்தே, சுகந்தனும், செல்வ லட்சுமியும் இணைபிரியாத ஜோடிப் புறாக்கள் என்று

பெயர் வாங்கியிருந்தனர். இயன்ற அளவு ஒருவர் இருக்கும் இடத்தில்தான் அடுத்தவர் இருப்பார்கள். ஒட்டி உரசியபடி, என்னதான் இருக்குமோ, அவர்களுக்கு ஏதாவது பேசிச் சிரித்தபடி!

யாராவது, எதற்காவது இரண்டு தரம் கூப்பிட்டால், தூக்கத்திலிருந்து விழித்த மாதிரி ஓடி வருவார்கள். சொல்வதைச் செய்வார்கள். சற்று நேரத்தில் பார்த்தால், பழைய நிலையாகத்தான் இருக்கும்.

நல்லவேளையாக, அங்கே யாரும், இதைத் தவறாக எடுத்துக் கொள்கிற கூட்டமில்லை. ஒருவரைத் தேடி னால், அடுத்தவர் இருக்கும் இடத்தில் பாருங்கள் என்று கிண்டலடித்துச் சிரிக்கிறவர்களாக இருந்தனர் வீட்டுப் பெரியவர்கள் உட்பட!

உடனேயே, ஆசைப்பட்டவனோடு திருமணம் ஆன தோடு, அடிக்கடி அவர்களைச் சந்திக்கும்படியும் நேரவே, மகாலட்சுமியின் மனம் அந்த நெருக்கத்துக்காக ஏங்கத் தொடங்கிற்று.

ஆனால், இதை யாரிடம் சொல்வது?

'தனிமையில் நீ யாரோ, நான் யாரோ' என்றவனோடு இது பற்றிப் பேசு அவளது தன்மானம் இடம் தரவில்லை.

ஏன், இப்படி ஓர் ஏக்கம் அவளுள் தோன்றியிருப் பதை, அவன் அறிவதே கூடாது என்று அவள் நிச்சயமாக நினைத்தாள். தாயிடம் மூச்சுக்கூட விட முடியாது! அன்னையால் தாங்க முடியாது என்பதோடு, விஷயம் தந்தையிடம் போய், ஏதோ வகையில் வெளியே கசிந்து விடும்.

சின்னவர்களைப் போல ஒட்டிக் கொண்டு கிடக்காவிட் டாலும், இவர்களும் சந்தோஷமான தம்பதி என்கிற



மாயை கூட, அடிபட்டுப் போய், எல்லோரும் இவளை இரக்கமாகப் பார்க்கத் தொடங்குவார்கள்! அது மகாமகாக் கேவலம்!

செல்வலட்சுமியின் திருமணத்தின் போது கூடப் பலர் அவளைப் பரிதாப பிறவி போலப் பார்க்கத்தான் செய்தார்கள். ஆனால் அப்போது, அவளது மனம் திரு மணத்தை வெறுத்திருந்ததால், அது, அவளைப் பாதிக் கவே இல்லை. ஆனால் இப்போது விஷயமே வேறா யிற்றே!

எல்லாவற்றையும்விட, அவளது அந்தரங்கம் ஊர் வாயில் அடிபடுவது கூடவே கூடாது! அதைவிட, அவள் வாழ்நாள் முழுவதையுமே, இப்படியே கழித்து விடலாம்!

எனவே, தனக்குள்ளேயே ஏங்குவதும், அதை வெளியே காட்டாமல் மறைத்து நடிப்பதுமாக, மகாலட்சுமி தவித்து துவண்டு போனாள்.

இந்த நிலையில், செல்வலட்சுமியுடைய நாத்தனார் சுனிலாவுக்கு, வளைகாப்புக்கு நாள் குறித்தார்கள்.

மனோரஞ்சன் குடும்பத்துக்கு மெகா அழைப்பு! காலையில் எல்லோரும் முன்னதாக வந்து, குடும்பத்தார் மூவரும், வீட்டாராகக் கூடவே இருக்க வேண்டும்!

சுனிலாவுடைய புகுந்த வீடு, வெளிநாடு. ஓர் அண்ணன் குடும்பம் தவிரப் பெரியவர்கள் கிடையாது. தலைசுற்று, வாந்தி என்று உடம்பு பலவீனமடையவும், மருத்துவர் ஆலோசனைப்படி, அப்போதே தாய் வீட் டுக்கு வந்து விட்டாள். அவள் அங்குமிங்கும் அலைய வேண்டாம் என்று, அவளுடைய கணவன் அவ்வப் போது வந்து பார்த்துவிட்டுப் போவான். இப்போது ஊர்க் கோயிலுக்கு, அண்ணன் குடும்பத்தோடு வருவதோடு,

சுனிலாவுக்கு ஏழாம் மாதமாகவும் இருக்கவே, இந்தச் சமயத்தில் வளைகாப்பு நடத்தி விடலாம் என்று திட்டமிட்டு, நாள் குறித்தார்கள்.

நல்ல விஷயம்தான். மகிழ்ச்சிகரமான விழாதான். எல்லோரும் பிரியமாகப் பழகுகிறவர்களும்கூட. விழா நாயகியான சுனிலாவே, மகாலட்சுமியிடம் மிகவும் பிரியமாக இருப்பாள். ஆனால், கிளம்புவதற்கு மகாலட்சுமியின் கால்கள் வெகுவாகத் தயங்கின.

தங்கையைப் பார்த்துப் பொறாமைப்பட்டு விடுவோமோ, அதனால் அவளுக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்து விடுமோ என்றெல்லாம் கூட, அவளுக்குப் பயம்தான்!

ஆனால், எதையும் வெளியே சொல்ல முடியாத காரணத்தால், குறித்த நேரத்தில், தயாராகி உள்ளூரத் தவிப்புடன் நின்றாள்.

அவள் அஞ்சியது போலவே, செல்வலட்சுமியும் சுகந்தனும் உறவாடிய விதம், அவளை ரொம்பவே தாக்கி விட்டது.

சும்மாவே வெளியிடங்களில் கூட, அவர்கள் இருவரும் ஒன்றாகவே சுற்றுவார்கள். இப்போது சொந்த வீடு வேறா? கை விரல்களைக் கோர்த்து ஒரு சங்கேதச் சைகை. அடுத்த சில வினாடிகளில் இருவரும் காணாமல் போய்விடுவார்கள். திரும்பி வரும்போது, நடந்த கதை சொலலாமலே விளங்கும்.

சிறு பிள்ளை விளையாட்டு மாதிரி, மற்றவர்கள் சிரிக்கத்தான் செய்தார்கள். கூடச் சேர்ந்து உதட்டால் நகைத்த போதும், தவிர்க்க முடியாத கற்பனையில் மகாலட்சுமியின் மனது ஏங்கித் தவித்தது.



வளைகாப்பு சிறப்பாக நடந்தேறியது. சிவப்பும் பச்சையுமாக கை நிறைய வளையல் அடுக்கி, ஆலம் சுற்றி, சுனிலாவை மணையிலிருந்து எழுப்பினார்கள்.

''அடுத்துக் கல்யாணம் ஆகி இன்னமும் உண்டாகாத பெண்களை கூப்பிடுங்கள். மணையில் உட்கார வைத்து, அவர்களுக்கு வளையல் அடுக்க வேண்டும். அடுத்த பத்தாம் மாதம் அவர்களுக்கும் பிறக்க வேண்டாமா?'' என்று மூத்த பெண்மணி யாரோ சொன்னார்கள்.

''இருக்கட்டும் பெரியம்மா. இரண்டு பேரும் சின்னப் பெண்கள். இப்போதுதானே மணமும் ஆகியிருக்கிறது! அதற்குள் எதற்கு?'' என்றாள் செல்வலட்சுமியுடைய மாமியார் சாந்தா.

''இப்போதுதான் என்ன சாந்து? உன் மகன் திருமணம் நடந்து நாலைந்து மாதம் இருக்குமே!'' என்றாள் பெரியவள் விடாமல்.

''அவள்தான், இப்போது உட்காரவே மாட்டாள். அவளுக்கு அக்காவிடம் ரொம்பப் பிரியம். கல்யாணம் எப்படியோ முன்னே நடந்து விட்டாலும், மகாவுக்கு பிள்ளை பிறந்த பிறகுதான், செல்வா பெற்றுக் கொள்வாளாம். அக்கா தங்கைக்குள் அவ்வளவு ஒட்டுதல் இருக்கிறது. அவள் மனது சங்கடப்படும்படி செய்ய வேண்டாம். மணையைக் கலைத்து விடலாம்'' என்று சாந்தா கூற, பக்கத்து அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த மகாலட்சுமிக்கு கண்ணீரை அடக்குவது, பெரும்பாடாகிப் போயிற்று.

நீர்த்திரையிட்ட கண்களால், கணவனோடு ஜோடியாகப் போய்க் கொண்டிருந்த தங்கையை, ஏக்கத்துடன்

பார்த்தாள் மகாலட்சுமி. அதிர்ஷ்டம் கெட்ட எனக்குத் தான், எதற்கும் கொடுப்பினை இல்லை என்றால், உன் அழகான வாழ்வையும் சிக்கலாக்குகிறாயே, தங்கையே என்று புலம்பியது, அவள் மனது.

மேற்கொண்டு, அன்றைய தினம் எப்படிக் கழிந்தது என்று கேட்டால், மகாலட்சுமிக்கு சொல்லத் தெரியாது. ஆனால், உரியவர்களிடம், உரிய விதமாகப் பேசிச் சிரித்து, கூடச் சேர்ந்து வேலை செய்து... எதிலும் யாரும் குறை காணவில்லை.

செல்வா கணவன் அருகாக நகர்ந்தால் மட்டுமே, ஆளே வேறுபுறம் திரும்பி விடுவாள். பார்ப்பானேன்? பார்த்து ஏங்குவானேன்? மேலே என்ன ஆகுமோ என்று கலங்குவானேன்?

மாலையில் கடற்கரைக்குப் போய்க் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு, அப்படியே ஹோட்டலில் இரவு உணவை முடித்துக் கொண்டு, அவரவர் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

மனோரஞ்சனோடு சேர்ந்து அவர்கள் பகுதிக்குப் போய், தனியே தன் அறைக்குச் சென்று முடங்க, மகாலட்சுமிக்கு மனம் வரவில்லை. கணவனைப் பிரிந்து செல்லும்போது, உள்ளிருந்த ஏக்கத்தில், அசட்டுத் தனமாக ஏதாவது செய்து விடுவோமோ என்று பயம்!

எனவே, கருணாகரியோடு சென்று விழா பற்றி, வந்திருந்த உறவினர் பற்றி ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்தாள். மனோரஞ்சன், அவனது அறைக்குள் சென்றிருப்பான் என்று மனதில் நிச்சயமான பிறகே, மாமியாரிடம் சொல்லிவிட்டு, அவளும் படுக்கப் போனாள்.



உள்ளே, ஜன்னல் புறமாக வெளியே பார்த்துக் கொண்டு நின்ற கணவனைப் பார்த்ததும் அவளுக்கு ஒரே அதிர்ச்சி!

அவள் திகைத்து நிற்கையிலேயே, மனோரஞ்சன் ஜன்னலில் இருந்து திரும்பி, அவன் அருகே வந்தான்.

அவள் கையில் இருந்த கைப்பையை வாங்கி, பக்கத்தில் கிடந்த சோஃபாவில் வீசினான்.

அவளது கைவிரல்களோடு, தன் விரல்களைக் கோர்த்து, பெரு விரலால் லேசாக வருடினான், சுகன், செல்வாவின் சைகை!

பிரமித்து நோக்கியவளை, அருகிழுத்து அணைத்தான் மனோரஞ்சன்!

ஏதேதோ கேள்விகள் மனதில் எழ, மகாலட்சுமி பிரமித்து நின்றது, மிகச் சில கணங்களே! அதற்குள் மற்றதெல்லாம் மறந்து, அவளும் அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

# 12



காலையில் தூக்கம் கலையும்போதே, உடம்பெல்லாம் லேசாக, சந்தோஷமாக, மகாலட்சுமி உணர்ந்தாள்.

கொஞ்ச காலமாக, அதற்குள் விடிந்து விட்டதா என்று ஒரு சலிப்புடனேயே எழுந்து பழகியிருந்தவளுக்கு, இந்த புத்துணர்ச்சி வியப்பைத் தர, மெல்ல எழ முயன்றபோது தான், சட்டென விஷயம் புரிய, அப்படியே கன்றி சிவந்து போனாள்.

முந்தைய இரவு படமாக மனதில் ஓடியது.

இந்த அளவுக்காக, அவள் மனோரஞ்சனுக்காக ஏங்கிப் போயிருந்தாள்? அவன் என்ன நினைப்பான்? எண்ணிப் பார்க்கவே கூச்சமாக இருந்தது அவளுக்கு.

இப்போது கணவன் விழித்தால், அவன் முகத்தைப் பார்த்துப் பேச மிகவும் வெட்கமாக இருக்கவே, அவன் விழித்து விடாமல் மெல்ல விலகிக் கட்டிலை விட்டு இறங்கினாள்.

மனோரஞ்சன் எழுமுன் வேக வேகமாகக் குளித்து விட்டு, அத்தையிடம் போய் உட்கார்ந்து விட வேண்டும் என்று எண்ணி நடந்தவள் கண்ணில், சோஃபாவின் அருகே, கீழே கிடந்த அவளது கைப்பை பட்டது.

முன்தினம் அறைக்குள் வந்ததும், அவள் கையிலிருந்து அகற்றி, அவளுடைய ரஞ்சன் தூக்கி வீசியது!

அந்த நேரம் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லை. ஆனால், அந்த கைப்பைக்குள் அவளது வைர செட் அல்லவா இருக்கிறது!

வளைகாப்பு விழாவுக்கு அணிந்துவிட்டு, கடற்கரைக்குச் செல்லும்போது, அதிகப்படியாகத் தெரியும் என்று கழற்றி வைத்திருந்தாள்! அவன் தூக்கி வீசிய வேகத்தில், கீழேயே விழுந்திருக்கிறதே!

உள்ளிருந்த நகைகள், இப்போது என்ன கதியில் இருக்கின்றனவோ? ஏதேனும் பழுதாகி, கல் உதிர்ந்து போயிருந்தால், அப்பாவிடம் அல்லவா, பாட்டுக் கேட்க வேண்டியிருக்கும்!

கவலையுடன், கைப்பையின் உள் 'ஸிப்'பைத் திறந்து, நகைகளை எடுத்துப் பார்த்தாள். கவனத்துடன் மெல்ல



வருடிப் பார்த்தபோதும், கழுத்தாணி நல்லபடியாகவே இருந்தது. காதணிகளில், சிறு பிரச்சினை போலத் தெரிந்தது. இணைப்புகளில் மடங்கியும், திருகியும் கிடந்தன, அவ்வளவே, அவற்றைச் சீர்ப்படுத்தி, நேராகத் தொங்கவிட்டு, முகத்தில் முறுவலோடு அவள் அழகு பார்த்தபோது, அந்த சூழ்நிலைக்கு சற்றும் பொருந்தாத விதமாக ''அடச்சீ! நீ இவ்வளவு மட்டமா?'' என்ற அருவருத்த குரலில், தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் மகாலட்சுமி.

மனோரஞ்சன்தான். எழுந்து விட்டிருந்தான். ஆனால், இவ்வளவு அருவருப்புடன் ஏன் பேசுகிறான்?

அதுவும் அவள் இவ்வளவு சந்தோஷமாக இருக்கும் போது?

''ர... எ... என்ன மனோ?'' என்று குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள் அவள்.

''என்னவா? என்னவென்று, உனக்குத் தெரியாது? உன் அப்பனைப் போல, உனக்கும் பணத்தாசை உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னைச் சொல்லி என்ன பயன்? குழந்தை மாதிரி இந்த முகத்தைப் பார்த்து ஏமாந்து, ஒரு தரம் மரண அடிபட்டும், மறுபடியும் பாவம் என்று நினைத்தேனே! சே! உன்னைத் தொட்ட கையில் தீயில் காட்டித்தான் சுத்தம் செய்ய வேண்டும்...''

கடவுளே! அவள் என்னவெல்லாம் நினைத்தாள்! விடிவு காலம் வந்து விட்டது என்று நினைத்தால், மனோரஞ்சன் முன்னிலும் மோசமாக அல்லவா பேசுகிறான்!

தன்னை மீறிக் கண்ணீர் வழிய, ''என்னென்னவோ பேசுகிறீர்களே, மனோ. ஏன் என்று, எனக்கு ஒன்றுமே

புரியவில்லையே! என்ன நடந்தது என்று, அதையாவது சொல்லுங்களேன்'' என்று அழுதாள் மகாலட்சுமி.

''ராட்சசி, ராட்சசி!'' என்றான் அவன் கொதித்துப் போய் ''பச்சைப் பாப்பா மாதிரி பேசுவதைப் பார்! என்ன மாதிரி இரவு! என்ன ஆசைகளோடு எழுந்தால், நீ தங்கத்தையும் வைரத்தையுமா, தடவி மகிழ்ந்து கொண்டு இருக்கிறாய்? உனக்குப் பிடித்தது, அதுதான் இல்லையா?''

சுரீலென்றது, மகாலட்சுமிக்கு. அவளை மீண்டும் அணைக்கும் ஆசையில்தான் கண் விழித்து எழுந்திருக்கிறான். அந்த நேரம் பார்த்தா, அவள் அந்த நகைகளைச் சரி செய்ய வேண்டும்! காதணிகள் அழகாக இருந்தன தான். ஆனால் அவளது உள்ளார்ந்த குதூகலத்தின், அவளது அந்த முறுவலின் காரணம், அவனல்லவா?

ஏன் இப்படி, ஏடாகூடமாகவே போகிறது?

அவன் மனதில் இருக்கும் அவநம்பிக்கை தவறாகவே நினைக்கத் தூண்ட, இயல்பான சாதாரண விஷயம்கூட, அவனுக்குத் தப்பாகவே பட்டு விடுகிறதே!

உள்ளம் சோர்ந்து விட, நம்பிக்கையின்றியே, நடந்ததைச் சொல்லிப் பார்த்தாள் அவள்.

''ஏயப்பா, திருவாளர் முத்துமாணிக்கத்துடைய மகளாயிற்றே! கண்ணைக் கூடச் சிமிட்டாமலே பொய்க் கதை சொல்லி சமாளிப்பதற்குக் கேட்கவா வேண்டும்!'' என்றான் அவன் எகத்தாளமாக. ''போதும் சாமி, போதும்! வெளிப்பார்வைக்கேனும் நல்லபடியாகத் தெரிய வேண்டும் என்று நினைத்தது, இந்த அளவு அசிங்கத்துக்குக்



கொண்டு வந்து விட்டது. இனி, சித்தப்பா வீட்டுக்கு உன் கூட நான் வரமாட்டேன். அம்மா முன்னிலையில் நான் இருக்கும்போது, முடிந்த அளவு, நீ அங்கே வராதே!'' என்று உதாசீனமாகப் பேசி உத்திரவிட்டு விட்டு, அவனது அறையை நோக்கிச் செல்லத் தொடங்கியவன், திரும்பி ''என் வார்த்தையை மீறி ஏதாவது செய்தாயானால், உனக்குத்தான் அசிங்கமாகப் போகும். ஜாக்கிரதை!'' என்று கடுமையான குரலில் எச்சரித்ததோடு, அவனது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

ஒன்றும் செய்யத் தோன்றாமல், சற்று நேரம், மகாலட்சுமி அப்படியே நின்றாள்.

அசிங்கமாமே!

மனோரஞ்சன் குளித்து, அலுவலுக்குத் தயாராகி வருகிற நேரம், அங்கேயே நின்று கொண்டிருந்தால், இன்னமும் ஆத்திரப்படக் கூடும் என்று தோன்றவும், மகாலட்சுமி, அவளது அறைக்குள் சென்றாள்.

என்ன மாதிரி சொர்க்கத்துக்கு அழைத்துப் போய், உடனேயே தலைகுப்புறத் தள்ளி விட்டான்!

இப்படித் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளும் ஆண்கள், பொதுவாக மற்றவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்! தொழிலில் காணும் வெற்றிகளால், எல்லா விஷயங்களிலும், தங்களது அபிப்ராயமும் சரி என்று தோன்றி விடும் போலும்!

அவளுடைய தந்தை முத்துமாணிக்கம் ஒரு விதம் என்றால், இவன் இன்னொரு வகை! இருவரிடமுமே, எதையும் சொல்லிப் பயனிராது. நல்ல கருங்கல் பாறையில் முட்டிக் கொள்வது போலத்தான்!

உடம்பு, மனம் இரண்டுமே சோர்ந்து போயிற்று அவளுக்கு!

இவ்வளவு நாள், பெரும்பாலும் ஏதோ ஓர் இடத்தில் இருந்தார்கள். அவனது உள்ளத்தில் இடம் பெறுவது பற்றிய சிந்தனை உள்ளே அரித்துக் கொண்டே இருந்தாலும், மனோரஞ்சனைப் பார்க்க, அவன் பேசுவதைக் கேட்க, கூடச் சேர்ந்து பேசக்கூட முடிந்தது. இனி எதற்கும் வழியில்லை.

மாமியார் கருணாகரி, மிகவும் நல்லவள். அவளிடம் சொல்லிப் பார்க்கலாமா என்று ஒரு தரம் யோசித்துப் பார்த்தாள். ஆனால் இந்தப் பிரச்சினையில், அவளது பேச்சு மட்டும் என்ன, எடுபட்டு விடப் போகிறது?

அத்தோடு, தாயிடம் சொன்னாளே என்று, அவன் மேல் ஆத்திரம்தான் அதிகமாகக் கூடும்.

மேலும் பெற்ற தாய்க்கு, மகன் பேச்சுத்தான் சரி என்றும் தோன்றலாமே! அப்புறம், அந்த அன்பும் போய் விடும்!

இந்த வீட்டில் இருந்து கொண்டு, கணவன் சொன்னதைக் கடைப்பிடிப்பது மிகவும் கடினம். இரண்டே நாட்களில், கவனித்து என்ன என்று, கருணாகரியே கேட்கக்கூடும். என்னவென்று பதில் சொல்வது?

ஆழ்ந்து யோசிக்கக்கூட முடியாமல், தலை கனத்தது! இவ்வளவு நாள் யோசித்து என்ன கண்டோம் என்று சலித்துப் போயிற்று.

சுய பச்சாதாபம்! மன அழுத்தத்தின் முதல் படி!

மகாலட்சுமியின் மனம் ரொம்பவும் தாயைத் தேடிற்று! ஒருதரம், அவளை மீட்ட தாய்! இன்றைய அவலம்,



அவளுக்கும் புரியாதுதான். ஆனால், பெற்றவளின் மடியில் படுத்துக் கிடந்தாலே, பாதித் துன்பம் குறையும்! குறையலாம்!

எப்படியோ, தாயைப் பார்த்தே தீர வேண்டும் என்பதுபோல ஒரு தீவிரம் தோன்றிவிட, மனோரஞ்சன் அலுவலுக்குக் கிளம்பியதும், கருணாகரியிடம் சென்றாள், தாய் வீடு செல்ல ஆசை என்று கூறினாள்.

மருமகளின் விழிகளின் சிவப்பைக் கருணாகரியின் பார்வை குறிப்பெடுத்தது. மகனின் முகமும் அவ்வளவாகச் சரியாகத் தோன்றவில்லை.

முதல் சண்டை என்று உள்ளூர நகைத்துக் கொண்டாள். புதுத் தம்பதிகளுக்கு, முதல் தகராறு, ரொம்பப் பெரிது போலத்தான் தோன்றும்.

போய்வா என்று அனுப்பி வைத்தாள். சம்பந்தியம்மாவே, சீக்கிரமாக மகளைத் திருப்பி அனுப்பி வைப்பாள்!

தனியே வந்த மகளைப் பார்த்து குமுதவல்லிக்குச் சற்றுக் கலக்கம்தான். பையனைப் பெற்றவளைப் போலவே, கணவனோடு சிறு தகராறு என்றுதான், அவளும் நினைத்தாள். ஆனால் கருணாகரி எண்ணியதுபோல, மகளை உடனே திருப்பி அனுப்பவில்லை.

இரு மகள்களும் இல்லாத தனிமை அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கவே, கூடுதலாக நாலு நாள், மூத்த மகள் இங்கே தங்கிவிட்டுப் போகட்டுமே என்றிருந்தது, குமுதவல்லிக்கு.

அதனாலேயே கருணாகரி போன் செய்து "பிள்ளைகளுக்குள் ஏதோ சின்னத் தகராறு போல இருக்கிறது.

மகள் வருத்தத்துடன் வந்திருக்கிறாளே என்று நீங்கள் மனது சங்கடப்பட வேண்டாம். நாலு நாளில் எல்லாம், தானாகச் சரியாகிப் போகும். கவலைப்படாதீர்கள்'' என்றெல்லாம் சொன்னபோதும், மகளுக்கு ஆறுதலாக இருக்கும் வண்ணம், உணவு, பொழுதுபோக்கு என்று கவனித்துச் செய்தாளே தவிர, என்ன ஏது, என்று குத்திக் குடையவில்லை.

இந்த நிலையில், முத்துமாணிக்கம் வீட்டுக்கு போன் செய்தார்.

மகாலட்சுமி பிறந்த வீட்டுக்குக் கிளம்பிச் சென்று, இரண்டே தினங்களில் மருமகளை அழைத்து வருமாறு, கருணாகரி, மகனைத் தொல்லை பண்ணத் தொடங்கினாள்.

வீடு 'ஹோ' என்று கா...லியாகத் தெரிகிறதாம். தன்னந்தனியாக, அவளுக்கு வீட்டில் கஷ்டமாக இருக்கிறதாம்.

ஆனால், ''அதற்காக அவள் அங்கே போன இரண்டே நாட்களில் அவள் பின்னோடு வால் பிடித்துக் கொண்டு ஓடிச் சென்று ''வாவா'' என்று அவளைக் கெஞ்சிக் கூத்தாடி அழைப்பதற்கு, என்னால் முடியாது'' என்று மனோரஞ்சன் தாயிடம் மறுத்துப் பேசினான்.

''டேய் மனோ, அவசரப்பட்டு வந்து விட்டோமே என்று மருமகளும் அங்கே தவித்துக் கொண்டுதான்மா, இருப்பாள். தானாகத் திரும்பி வருவதற்குக் கூச்சமாக இருக்கும். கௌரவம் பார்த்துக் கொண்டு, நீயும் இப்படி இருந்தால் யாருக்கு நஷ்டம் சொல்லு...''



இது வெறும் ஊடல் பிரச்சினை என்று தாய் நினைப்பது, பிள்ளைக்கு, நன்றாகவே புரிந்தது. ஆனால், முத்துமாணிக்கத்துடைய மகள், அன்னை நினைப்பது போல நல்லவள் அல்ல என்று, தாய் மனம் நோகாமல் எப்படித் தவிப்பது? எத்தனையோ துன்பங்களைத் தாண்டி வந்து, இப்போதுதான் அமைதியாக இருக்கிறாள், இவளை, இன்னமும் எப்படி நோகடிப்பது?

மனோரஞ்சன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, கருணாகரி மேலே பேசினாள். ''வேண்டுமானால் பார். மகாவால் அதிக நாள் தாக்குப்பிடிக்க முடியாது. அவளுக்கு அன்பு மனம். தானாகவே வருவாள். அல்லது கூப்பிடுவாள்!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மனோரஞ்சனின் செல் ஒலியெழுப்பியது.

எடுத்துப் பார்த்தால், மகாலட்சுமியேதான். மாமியாரிடம் நன்றாகத்தான் நாடகமாடிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு அன்பு மனமாமே!

மனம் கடுப்பதை முகத்தில் காட்டாதிருக்க அவன் முயன்று கொண்டிருக்கும்போதே ''யார் மகாதானே? பேசும்மா, பாவம். அவள் தவித்துக் கொண்டிருப்பாள், மனோ'' என்று கருணாகரி மகனை உந்தினாள்.

தாயிடம் மறுக்க மாட்டாமல், தனக்குப் பிடிக்காது என்று தெரிந்தும், எந்தத் தைரியத்தில் கூப்பிடுகிறாள் என்ற குறுகுறுப்போடு, என்ன அபாயமோ என்ற கலக்கமும் திடுமெனத் தோன்றவே, சட்டென செல்லை ஆன் செய்து, ''என்ன சொல்லு?'' என்றான் அவன்.

சற்று நேரம், அவள் பேசுவதைக் கேட்டிருந்துவிட்டு ''இல்லை, இதோ வருகிறேன்'' என்றான் யோசனையோடு.

கேள்வியாய் நோக்கிய தாயிடம் ''அங்கே மு... உங்கள் சம்பந்திக்கு கடையில் ஏதோ பிரச்சினையாம். வந்து உதவும்படிக் கேட்கிறாள்'' என்றான் அவன்.

''உடனே போகிறாய்தானேம்மா? இங்கே நிர்வாகியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போகலாமில்லையா? அங்கே போய், ஆக வேண்டியதைப் பார்த்துவிட்டு, அப்படியே முடிந்தால் மருமகளைக் கூட்டி வந்துவிடும்மா.''

சட்டெனச் சிரிப்பு வந்தது மகனுக்கு, ஆக, மருமகள் திரும்ப வருவதுதான் ரொம்ப முக்கியமாக இருக்கிறது என்று எண்ணியவனின் முகம் உடனே மாறவும் செய்தது!

பெயருக்கு ஏற்றபடி, கருணாகரிக்கு இளகிய சுபாவம். கஷ்டம் என்று வந்தால், தன்னால் உதவி செய்யாமல் இருப்பதே கிடையாது. இப்போது சம்பந்திக்கு உதவியாக, மகாவை விட்டுவா என்னாமல் 'கூட்டிட்டு வா' என்கிறார்களே! இந்த அளவுக்கு இடம் பிடித்து விட்டவளை எப்படி விலக்குவது? மற்றவர் மனதைக் கவர்வது, சொடக்குப் போடுகிற மாதிரி, அவளுக்கு கைவந்த கலை என்று எப்படிப் புரிய வைப்பது?

வேண்டா வெறுப்பாகத்தான் மனோரஞ்சன், மாமனார் வீட்டுக்குச் சென்றான்.

வாசலிலேயே எதிர்கொண்டு, அவன் கூடவே உள்ளே வந்தபடியே விவரம் சொன்னாள் மகாலட்சுமி.

முத்துமாணிக்கத்தின் கடையில் ரெய்டு, நடக்கிறது. வீட்டிற்கும் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அவரது இரும்புப் பெட்டியில் முக்கியமான பத்திரங்கள் பல இருக்கின்றன. அவைகளை எடுத்து, மூன்றாம் வீட்டில் கொடுக்கச் சொல்கிறார் தந்தை. ஆனால்...



''ஆனால் என்ன? அவர் சொன்னது போலக் கொடுத்து விட வேண்டியதுதானே?'' என்று அந்த நேரத்திலும் மாப்பிள்ளை மரியாதை குறையாமல் வரவேற்று, மாமியார் கொண்டு வந்து கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு, கேட்டான் அவன்.

''அதெங்கே மாப்பிள்ளை?'' என்றாள் குமுதவல்லி எரிச்சலோடு. ''ஒரு மனிதர், பெண்டாட்டி, பிள்ளையைக் கொஞ்சமாவது நம்ப வேணும். அள்ளிக் கொண்டு போய் விடுவார்கள் என்று பயம். அப்படி அள்ளி, எங்கே கொண்டு போய் விடுவோம்? யாருக்குக் கொடுத்து விடுவோம் என்று யோசிக்க வேண்டாம்? அது கிடையாது. அதனால் இரும்புப் பெட்டியையே, எங்களையெல்லாம் வெளியே தள்ளிக் கதவு ஜன்னலை உள்ளே தாள் போட்டுக் கொண்டுதான் திறப்பார். இப்போது, பெட்டியைத் திறந்து எடுத்துக் கொண்டு என்றால் எப்படித் திறப்பது? அது வேறே, பத்து தினுசா, மாற்றி மாற்றித் திருப்பித் திறக்க வேணுமாம். எனக்கு எதுவுமே தெரியவில்லை என்று, அதற்கு ஒரு திட்டு. மகள்கிட்டே சொல்லுங்கள் என்றால், போய் ஊரெல்லாம் தண்டோராப் போடு என்கிறார். பெற்ற மகள், 'ஊரெல்லாமா?' வேறே வழியில்லாமல், கடைசியில் அவளிடம்தான் சொன்னார். ஆனால், நம்பர் பூட்டு போல, ஒரே மாதிரிச் சுற்றுவது இல்லையாமே! இடையிலே பிடியை வேறு திருப்பணுமாம்! அவளுக்கு திறக்க வர மாட்டேன்

என்கிறது... என்ன செய்கிறது என்றே தெரியவில்லை. இதற்கு என்ன பாடு படுத்தப் போகிறாரோ...'' என்று கலங்கியவளுக்கு, மேலே பேச முடியாமல் அழுகை வந்து விட்டது.

மனோரஞ்சன் மனைவியைப் பார்த்தான்.

தாயைத் தோளில் சாய்த்து தட்டிக் கொடுத்தபடி, அவள் சொன்னாள் ''பத்து செட் மாற்றிச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த பிடி திருப்புவது எப்போது என்று சொல்லவில்லை. அதற்குள் அங்கே யாரோ வந்து பேச்சைக் கட் பண்ணி விட்டார். ஒரு தப்பில், எல்லாம் பழைய நிலைக்குப் போய் விடுகிறது. அப்பா வுக்கு போன் செய்தால் எடுக்கவில்லை'' என்றாள் அவள் சுருக்கமாக.

மனோரஞ்சன் தன் செல்லில் முயற்சி செய்தான். இப்போது வேறே யாரோ எடுத்தார்கள். மனோரஞ்சன் ஆங்கிலத்தில் பேசவும், ''பாருங்கள் சார் இப்போது கடையில் 'ரெய்டு' நடந்து கொண்டு இருக்கிறது, முத்து மாணிக்கம் சாரோடும் யாரும் பேச முடியாது. வைத்து விடுங்கள்'' என்றார், செல்போனை எடுத்தவர்.

ஒரு கணம் யோசித்துவிட்டு ''மாமா சொன்ன எண் களை அப்படியே எழுதி வை. அதற்கு முன், அவர் எந்த செல்லில் பேசினாரோ, அந்த செல் எண்ணைக் கொடு'' என்றான் அவன்.

மனோரஞ்சன் எதிர்பார்த்தது போலவே, முத்து மாணிக்கம் வேறு செல் கொண்டுதான் பேசியிருந்தார். அந்த எண்ணோடு தொடர்பு கொண்டால் வெகு நேரம் அடித்து ஓய்ந்தது. மறுபடியும் முயன்றான்.



இப்போது, அடங்கிய குரலில் முத்துமாணிக்கம் பேசினார் 'என்னை மாட்டி வைக்காமல் விட மாட்டாய் போலிருக்கிறதே'' என்றார் எரிச்சலாக.

''நான் மனோரஞ்சன் பேசுகிறேன், இரும்புப் பெட்டி திறக்க முடியாமல், என்னைக் கூப்பிட்டார்கள்'' எனவும் அவரது தொனி மாறியது. ''வாருங்கள் மாப்பிள்ளை, ஏதாவது சாப்பிட்டீர்களா?'' என்று குழைந்துவிட்டு, செல்லை மகளிடம் கொடுக்கச் சொன்னார்.

மகாலட்சுமியிடம் ''அறிவிருக்கிறதா, உனக்கு?'' என்று சீறினார். ''அன்னிய மனிதர். அவரைப் போய் இரும்புப் பெட்டியை... சரிசரி. கவனமாகக் கேட்டுக் கொள். எண்கள் குறித்தாயல்லவா? இரண்டு இரண் டாக, மாற்றி மாற்றிச் சுற்று, முதலில் கடிகாரச் சுற்று, அது முடிந்ததும், திருப்பி, கடைசியாக மூன்றும் ஒன்றும், பார் திறந்ததும், மருமகனை ரொம்ப, உள்ளே பார்க்க விடாதே. ஃபைல்கள், நகைகளை என்ன செய்ய வேண் டும் என்று சொன்னேனே, எல்லாம் அதன்படி... இ... இதோ சார், வருகிறேன்'' என்றதோடு செல் அணைக்கப் பட்டது.

பாத்ரூம் போவதாகச் சொல்லி, கடை ஆளின் செல் லில் பாத்ரூமில் இருந்து முத்துமாணிக்கம் பேசியது, பிறகு தெரிந்த செய்தி.

முதல் சீறலுக்குப் பிறகு அவர் பேசியது, மருமகனிடம் தான் என்று, பாவம் அவருக்குத் தெரியாது. மனிதரின் புத்தி அவன் அறிந்ததுதான் என்றாலும்...

ஆள் உயரத்துக்கு நின்ற இரும்புப் பெட்டியைப் பார்த்ததும், ஓரளவு அவனுக்குப் புரிந்தது. மகாலட்சுமி

தந்த எண்களைக் கவனமாகப் பார்த்துவிட்டு, கடிகாரச் சுற்றும், எதிர்ப்புறத் திருப்பலுமாக, கைப்பிடி பற்றி மற்றதுமாக இரும்புப் பெட்டியைத் திறந்தான் அவன்.

''ஃபைல்கள் எல்லாவற்றையும் கொடுக்கக் கூடாது என்று சொன்னார், ஒன்றுமே இல்லாவிட்டால், சந்தேகம் வருமாம். இந்த வீடு, ஊர், வயல் இந்தக் கடை வாங்கியது இருக்கட்டும். மற்றதிலும் சிவப்பு அட்டை உள்ளது இருக்கட்டும் என்றார்.''

நடுப்பகுதியில் இருந்து நகைப் பெட்டிகளை மகாலட்சுமி எடுத்துத் தாயிடம் கொடுக்க, ஒரு நாற் காலியைப் போட்டு அமர்ந்து மனோரஞ்சன், முத்து மாணிக்கம் சொன்னது போல, ஃபைல்களைப் பிரிக்க லானான்.

ஒவ்வொன்றாகப் பார்க்கப் பார்க்க ஏதோ கற்றது கைமண் ணளவு என்பார்களே, அது போல, முத்துமாணிக்கத்தைப் பற்றி, தான் அறிந்தது ஒன்றுமே இல்லை என்று மனோரஞ் சனுக்குத் தோன்றியது.

அடேயப்பா! எவ்வளவு ஏமாற்று வேலை! வரி ஏய்ப்பு மட்டுமல்ல. அவரை அணுகின அத்தனை பேருக்கும், ஏதோ ஒரு வகையில் ஆப்பு வைத்திருந்தார். தேவைப் படும்போது பயன்படுத்துவார் போலும்!

நகைப் பெட்டிகளைத் தாயாரிடம் கொடுத்து அனுப்பி விட்டு, ஏதேனும் உதவி செய்யவா என்று அருகில் வந்த மகாலட்சுமியிடம் ஒரு சில ஃபைல்களை காட்டி, தன் வியப்பைத் தெரிவித்தான் அவன். ''எல்லாம் கோடிக் கணக்கில் போகிறது!''



இந்த வியப்பில், தங்களுக்கிடையே இருந்த மன வேற்றுமை கூட அவனுக்கு மறந்து போயிற்று. அவளுக் குமே இவ்வளவா என்று ஆச்சரியம்தான்.

''இது பார் மகா, வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறார். சிலது; நம் கடைத்தெரு வியா பாரிகள். இதோ பார், இது உன் தாத்தாவின் கையெழுத்தோ என்று தோன்றுகிறது. அவரது பெயர் இதுதானே...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன், அவளிடம் பதி லின்றிப் போகவும், நிமிர்ந்து பார்த்தான்.

அவளது நிலை குத்தி நின்ற பார்வையைத் தன் பார்வையால் அவன் தொடர்ந்த போதும், மஞ்சள் நிறத்தில் நீல முக்கோண மூலைகளுடன் கூடிய ஃபைல் ஒன்று அடுத்து இருப்பது, அவன் கண்ணில் பட்டது. அவள் பார்ப்பதைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளா மல், அந்த ஃபைலைக் கையில் எடுத்தான் மனோ ரஞ்சன்.

சில காகிதங்களைப் புரட்டிப் பார்க்குமுன்பே, அவ னுக்கு விஷயம் விளங்கி விட்டது.

முத்துமாணிக்கத்துடைய மகள் என்பதாலேயே, இந்தப் பெண்ணை அவன் எப்படி வாட்டி வதைத்து விட்டான்!

கையிலிருந்த ஃபைலைக் கீழே போட்டு விட்டு எழுந்து, மனைவியின் இறுகக் கோர்த்திருந்த கைகளைப் பற்றிப் பிரித்தான். சில்லிட்டிருந்த கைகள், அவளது மன நிலையை இன்னமும் படம் பிடித்துக் காட்டின.

''இங்கே உன் தனி அறை எது, மகா?'' என்று கேட் டான்.

அறைக்குள் சென்றதும், தோள் பற்றி அவளை நேராக நிறுத்தி ''இவ்வளவுக்கு மேலும், உன்னால், என்னை மன்னிக்க முடியுமா, கண்மணி?'' என்று கேட்டான்.

முகத்தில் மலர்ந்த புன்னகைக்கு நேர் விரோதமாக மகாலட்சுமியின் கண்கள் நீரை சொரிய அவன் மார்பில் ஒண்டினாள் அவள்.

சற்றுப் பொறுத்துதான், இருவருக்குமே வெளி உலகம் நினைவுக்கு வந்தது.

குமுதவல்லி மகளை அழைக்கும் குரல்தான் அந்தப் பணியைச் செய்தது என்று பிறகு புரிந்தது.

''இதோ வருகிறோம்'' என்று குரல் கொடுத்துவிட்டு, மனோரஞ்சன் அவசரமாக மனைவியிடம் கேட்டான். ''ஒன்று சொல், மகி. உன் அப்பாவின் பணம் பெருமளவு ஏமாற்றிச் சேர்த்த சொத்து. அறுபது சதவிகிதத்துக்கு மேல், வரி ஏய்ப்பு செய்திருக்கிறார். நியாயப்படி அரசாங் கத்துக்குப் போகட்டுமே. ஃபைல்களை எடுத்துச் சென்று மறைக்கு முன் அதிகாரிகள் வந்து விட்டார்கள் என்று அவரிடம் சொல்லி விடலாம். அவர் சொத்து, உனக்கு வேண்டாம்தானே? அவர் தந்த உன் நகைகள் கூடப் பறிமுதல் செய்யப்படலாம்! ஆனால்...'' என்று அவன் முடிக்குமுன், ''எனக்கு வேண்டாம்'' என்றாள் அவள் அவசரமாக.

''ஆனால், அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விட வேண்டும். கூட இருந்து படப்போவது, அம்மா தானே?''

ஆனால், ''இந்த வீட்டைக் கூடப் பிடுங்கி விடுவார்களா மாப்பிள்ளை?'' என்று அதைத்தான் கேட்டாள் குமுதவல்லி.



''எப்படியாவது உரிய வரியைக் கட்டிவிட்டால், எதுவும் போகாது.''

அரை மனதாக யோசித்தவளிடம், அவளுடைய தந்தையின் கையெழுத்துடன் கூடிய வெற்றுப் பத்திரத் தைக் காட்டவும், குமுதவல்லி பொங்கிவிட்டாள். ''என்னைக் கட்டிக் கொடுத்து, இருபத்தைந்து ஆண்டு களாக இன்றுவரை, என் அப்பா பட்டிருக்கும் கஷ்டமும் கேவலமும் போதாதா? இன்னும் அவரைக் கெடுக்கவா திட்டம்? இன்னும் எத்தனை பேரை அழிப்பார்?'' என்று ஆத்திர மூச்சுக்களுடன் குமுறினாள். ''இப்படித்தான் உங்களை விரட்ட ஒரு...'' என்று தொடங்கியவளை குறுக்கிட்டு ''அவருக்குத் தெரியும், அம்மா'' என்றாள் மகள் மெதுவாக.

ஆனால் குமுதவல்லியின் சீற்றம் அடங்கவில்லை. ''மூன்று மாதம், மாப்பிள்ளை! நீங்கள் வெறுத்துப் போன பிறகு, என் பெண் அவ்வளவு நாள் படு கிடையாகக் கிடந்தாள். தியானம், யோகாசனம், கோவில் என்று பாடாகப் பட்டு தேற்றினேன். அதைக்கூட, வீண் செலவு என்று கிண்டலாகப் பேசிக் குத்துவார்! பணம்தான் பெரிய மந்திரம் மாதிரி அலட்டுவார். படட்டும், மாப் பிள்ளை! இப்படி அப்படித் தப்புத் தப்பாகச் சேர்த்து வைத்த பணத்தை வைத்துக் கொண்டு மீண்டு வரட்டும். என்னமோ, நான் கும்பிட்ட கடவுள், என் பெண்களுக்குப் புகுந்த வீட்டைக் கோயிலாய் அமைத்துத் தந்து விட்டார். எனக்கு அது போதும்'' என்று பூஜையறையை நோக்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

என்னமோ சூசகம் கிடைத்தாற்போல, வரித்துறை யினர் அந்த நேரத்தில் வந்து, அத்தனையையும் அள்ளிக்

கொண்டு போயினர். விசாரிப்பதற்காக, முத்துமாணிக் கத்தையும் கூட்டிப் போயினர்.

கூடவே போய், மாமனாருக்கு சட்ட உதவிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்து கொடுத்தான் மனோ ரஞ்சன்.

கூடவே வாய்ப்புக் கிடைத்தபோது ''மனைவி மக் களை இன்னும் கொஞ்சம் நம்ப வேண்டும், மாமா'' என்று குத்தவும் செய்தான். ''பாருங்கள் பெட்டகத்தைத் திறக்கவே தெரியவில்லை. ஃபைல்கள் பிரிக்கத் தெரிய வில்லை! பொன்னான நேரம், எப்படி வீணாகி, உங் களை இங்கே கொண்டு வந்து நிறுத்தி விட்டது! எல்லா வற்றிலும் நான் வந்து உதவுமுன், ரொம்ப ரொம்பக் காலம் கடந்து போயிற்று!''

விலுக்கென்று நிமிர்ந்து மருமகனைப் பார்த்தார், முத்துமாணிக்கம்.

இவன் அந்த ஃபைலைப் பார்த்திருப்பானா?

பார்த்தாயா என்று அவரும் கேட்கவில்லை. பார்த்த தாக அவனும் சொல்லவில்லை!

மனோரஞ்சனும், மகாலட்சுமியும் தங்களோடு குமுத வல்லியையும் கூட்டிக் கொண்டு வீடு திரும்பினர்.

கருணாகரி, இரு கை நீட்டி, சம்பந்தியை வரவேற் றாள்.

தனிமையில், தாயைப் பற்றிக் கணவனிடம் கவலைப் பட்டாள் மகாலட்சுமி.

''இந்த இழப்பையும், அப்பா அம்மாவிடம் தானே காட்டுவார்?''



அவளை மடியில் இழுத்துப் போட்டுக் கொண்டு, மனோ ரஞ்சன் இலகுவாகத் தீர்வு சொன்னான் ''ஏதேனும் வாலாட்டினால், ஒரு போன் போடச் சொல்லு. போய்க் கூட்டி வந்து விடுவோம். இரண்டு நாள் கண்ணால் பார்க்கக்கூட முடியாமல் தனியாகக் கிடந்தால், தானாக அடங்கி விடுவார்.''

குறுகுறுப்புடன் நோக்கினாள் அவள் ''அதென்ன இரண்டு நாள் கணக்கு? அதெப்படிப் போதும்?''

''எல்லாம் போதும். அனுபவஸ்தன் சொன்னால், அப் படியே கேட்டுக் கொள்ள வேண்டும். காற்றடித்தால்கூட, அவளா அவளா என்று உடம்பின் ஒவ்வொரு செல் லும் தேடும் போதல்லவா, மனிதருக்குத் தெரியும்!'' என்று குனிந்து, அவள் நெற்றியில் முத்தமிட்டான் அவன்.

''அப்போதுமா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

''எப்போதும்தான்! மற்றபடி, என்னால் திருமணத்தை நிறுத்தியிருக்க முடியாது என்றா நினைத்தாய். இன்னமும் இவளைப் போயா... என்று என் மீதே வந்த ஆத்திரத் தையும் உன்னிடமே காட்டி... இயன்ற அளவு உன்னை மோசமாக நினைத்து, உன்னை வெறுக்க முயன்று... ஆனால் நீ கெட்டவளாக இருந்திருந்தால்தானே, அடி யோடு வெறுக்கவும் முடிந்திருக்கும்? இன்னும் தேடு கிறதே என்று, அதிலேயே எனக்குப் புரிந்திருக்க வேண் டும்! அதைவிட்டு, வீணாக உன்னையும் வருத்தி, நானும் வருந்தி...''

அவன் மறுகுவது பிடிக்காமல் ''போகட்டும் விடுங்கள் ரஞ்சன்!'' என்றாள் அவள் பரிவோடு.

''அதெப்படி அவ்வளவு இலகுவாக விட முடியும்? தப்பு செய்தவன் நானல்லவா? அதனால்...''

''அதனால்?'' சட்டென்று எழுந்து அமர்ந்து, அவனை நேராகப் பார்த்துக் கேட்டாள் மகாலட்சுமி. ''இவ்வளவு நாள் தப்புத் தப்பாகச் செய்து, காலத்தை வீணாக்கினீர் கள். இப்போது அதை நினைத்து, நினைத்து வருத்தப் பட்டு வீணாக்கப் போகிறீர்களா?''

''வாட்?'' என்று ஒரு கணம் திகைத்தான் அவன். ''காலத்தை வீண்... நான்... ஆஹா! வீணான காலத்தை ஈடு செய்வதற்குப் பதிலாக... நல்ல நேரத்தில் நினைவு படுத்தினாய்! வாவாவா! வட்டியும் முதலுமாகச் சீக்கிரமே ஈடு கட்டலாம்'' என்று ஆவலாக அழைத்தான் அவளுடைய ரஞ்சன்.

# பூங்காற்று திரும்புமா?

ரமணிசந்திரன்

